கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
25 விளம்பரம்
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
416-282-4978
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

தூய்ந்த பணமாற்றும் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 25 | பாலம் 17 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | SEPTEMBER 01, 2015

# இலங்கையில் தேசிய அரசாங்கம்!

இலங்கையில் 2015 ஒகஸ்ட் 17இல் நடைபெற்ற 15ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க நான்காவது முறையாக இலங்கை பிரதமராக, அதிபர் மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் 2015 ஒகஸ்ட் 21இல் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றார்.



1949 மார்ச் 24இல் பிறந்த ரணில் விக்கிரமசிங்க கொழும்பு றோயல் கல்லூரியில் கல்விபயின்று பின்னர் இலங்கை பல்கலைக்கழகத்தில் வழக்கறிஞர் பட்டம் பெற்றவர். 1972இல் வழக்கறிஞராக தொழில் புரியத்தொடங்கினார். 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தனது 28ஆவது வயதில் வெற்றி பெற்று, ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையில் வெளியுறவுத்துறை இணை அமைச்சராக பதவி வகித்தார். ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க சிறந்த சமூக சேவகராக பணியாற்றி வருவதோடு பெண்கள் நலனுக்காவும் உழைத்து வருகிறார்.

இலங்கையில் புதிய அதிபராக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதைத் தொடர்ந்து 2015 ஜனவரி 09இல் இருந்து பிரதமராக ரணில் விக்கிரமசிங்க இருந்து வருகிறார். இவர் பிரதமராக முதற்தடவை 1993 மே மாதத்திலும், இரண்டாவது தடவை 2001 டிசம்பர் மாதத்திலும் பின்னர் மூன்றாவது தடவை 2015 ஜனவரி மாதத்திலும் பதவியேற்றிருந்தார்.

பிரதமரின் உத்தியோக பூர்வ சத்தியப் பிரமாண நிகழ்வை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்கும் (UNP), சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் (SLFP) இடையில் இலங்கையின் நல்லாட்சிக்காக இணைந்து செயற்படுவது என்ற உறுதிப்பாட்டை குறிக்கும் முகமாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இலங்கையில் ஒரு தேசிய அரசாங்கம் ஆட்சி அமைப்பது உறுதியானது என்ற நிலையிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் அமைச்சரவை பங்கீடுகள் முடியாதபடியால் மூன்று அமைச்சர்கள் மட்டுமே 2015 ஒகஸ்ட் 24இல் பதவியேற்றனர்.

ஏற்கனவே வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர மீண்டும் வெளிவிவகார அமைச்சராகவும், நீதி அமைச்சராக இருந்த விஜயதாச ராஜபக்ச மீண்டும் நீதி அமைச்சராகவும், மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சராக இருந்த D.M சுவாமிநாதன் மீண்டும் மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சராகவும் பதவியேற்றனர். முழு அமைச்சரவையும் புதிய நாடளுமன்ற அமர்வு 2015 செப்ரெம்பர் 01இல் ஆரம்பமாக முன்னர் பதவி ஏற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் அடுத்த அமர்வு 2015 செப்ரெம்பரில் நடைபெறும் போது இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின் போது நடந்த போர்க் குற்றம் சம்பந்தப்பட்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது. அது தொடர்பான அறிக்கையின் ஒரு பிரதி முன் கூட்டியே இலங்கைக்கு கொடுக்கப்பட உள்ளது. அப்பிரதியை ஆராய்ந்து பதிலளிக்கும் பொறுப்பு இந்த மூன்று அமைச்சுக்களையும் சார்ந்தது என்றபடியால்தான் இம் மூன்று அமைச்சர்களுக்கான பதவியேற்பு வைபவம் பிரதமர் பதவியேற்றதை தொடர்ந்து நடைபெற்றது.

UNP இற்கும் SLFP இற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் UNP இன் சார்பில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் ஹாசிம் உம் SLFP இன் சார்பில் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் துமிந்த திசாநாயக்கவும் கையெழுத்திட்டனர். SLFP யின் சார்பில் கையெழுத்திட்ட துமிந்த திசாநாயக்க தேசிய அரசாங்கம் பற்றி கருத்து தெரிவிக்கையில் தமது கட்சி அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுக்கு UNP உடன் சேர்ந்து தேசிய அரசாங்கத்தை அமைக்க ஒத்துக்கொண்டுள்ளது என்றார். தமது கட்சி ஐவர் கொண்ட குழு ஒன்றை தேசிய அரசுபற்றி UNP உடன் கலந்து ஆலோசித்து முடிவுகள் எடுக்க அமைத்துள்ளது என்றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA), தான் இந்த தேசிய அரசாங்கத்தில் பங்கு பற்றமாட்டாது எனவும் அது அரசுக்கு வெளியே இருந்து கொண்டு தேசிய அரசாங்கத்திற்கு, அதன் ஒவ்வொரு தீர்மானத்தையும் ஆராய்ந்து ஆதரவு வழங்கும் (Issue - based support) எனவும் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
*Independently Owned and Operated

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

DENTAL OFFICE
DENTAL IMPLANT • ROOT CANAL • WISDOM TOOTH EXTRACTION
Dr. Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS (Glasg) DENTAL SURGEON
2 LOCATIONS
3150 Eglinton Ave. East, Unit 5 Markham/Eglinton | Tel: 416.264.3232
3351 Markham Road, Unit 129, Markham/Steeles | Tel: 416.609.2022

Buying Selling Residential & Commercial
Sothees Means Service
SOTHEES Kathirgamathamby
Sales Representative
HOMELIFE / Miracle Realty LTD., Brokerage
*Independently Owned Operated
* Free visa
* Free lawyer fee
* Home Warranty
416.704.1179
Toll Free: 1855 SOTHEES


HOMES *COMMERCIAL*INVESTMENTS
Markham/14th
luxury
4 bm 4wsm home
50F Front Lot with
library and spiral stairs
scarborough
2 bm 2 wsrm condo apt
Roseland/thickson
4 bm 3 wsrm
Kingston Rd/Lawrence
399k
3bm 4wm Home
Mccowan/Ellesmere
549k
3 bm 3 wm w/o
basement
Woodbine/hwy7
1100/- rent all included
Cafetaria
14 years of service
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
COMMISSION
NEGOTIABLE
GUARANTEED SALE
Century 21
PAT WILL BEAT ANY DEAL*!!
Hall of Famer
80 Corporate Dr. Suite 208
Toronto M1H3G5
416-290 1200


Allstate
You're in good hands.
Allstate Insurance Company Of Canada
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி
Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca


BUSINESS / LAW CAREERS
Accounting ♦Payroll Admin / Business Administration ♦Banking and Financial Services ♦Hospitality Management ♦Paralegal / Law Clerk ♦Property Administrator ♦Hospitality Management ♦Tourism Management ♦Police Foundations/ Immigrant Consultant ♦Law and Security Officer Supply Chain & Logistics ...
IT CAREERS
Network Administration ♦Graphic/Web Designer ♦Software Quality Assurance and Testing Diploma ♦ Network Security Specialist ♦Web & Mobile Developer ...
HEALTHCARE & Related
Medical Office Administration ♦ECG ♦ Phlebotomy ♦Aesthetician/ Make-Up Artist ♦Hair Stylist ♦Community Service Worker ♦Personal Support Worker ♦Massage Therapist ♦Pharmacy Technician ♦Early Childhood Assistant ♦Medical Laboratory Technician ♦Food Service Worker ♦Intra Oral Dental Assistant ♦Addiction Worker...
TRADES
Cabinetmaking ♦Construction & Maintenance Electrician Pre-Apprenticeship ♦Electrical Technology ♦Home Renovation Technician ♦Industrial and Commercial Maintenance ♦Civil / Mechanical / Engineering ♦Welding / Solar Energy Technician ...
Looking for a Better Career?
Better JOB?
Our free service can help!
(Dated : Feb. 2015)
(Dated : July.2015)
Sophia K. August 25, 2015.
Photo taken in 2013 at Queens Park, when Thesa Theiventhiran's client Vasu, presented his success story in finding a professional job for himself and his wife in Canada.
EENC இனால் நடாத்தப்படும் இலவச வகுப்புகள்!
MS - Office
Bank Teller
Second Career மற்றும் அரச நிதியுதவி பற்றிய விபரங்களிற்கு அழையுங்கள்:
EENC.ca Employment and Education Network Canada Inc.
தமிழில் விபரங்களிற்கு : 416-223-3779 (Dashina)
(EENC is a no-cost no-obligation network, connecting career seekers to employers and career training facilities)
www.eenc.ca
info@eenc.ca
Phone: (416) 441-4100

# மதுரை அருகே - மண்ணுக்குள் புதைந்துள்ள தொன்மை நகரம்!

## அகழ்வாய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் நேர்காணல்



மதுரையிலிருந்து பன்னிரெண்டு கி.மீ. தொலைவில், வைகை நதியின் தென்கரையில் அமைந்துள்ளது, கீழடி கிராமம். அழகான இந்தச் சிற்றூரைக் கடந்து கிழக்கே மேலும் ஒரு கிலோ மீட்டர் தொலைவு சென்றால் மணலூர் கண்மாயின் மேற்கரையில் இருக்கிறது பள்ளிசந்தை திடல். சுற்றிலும் தென்னந்தோப்புகள் சூழ்ந்து, ஆளரவமற்று அமைதியாக இருக்கும் இந்த இடத்தில், 2500 ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு நகரம் இருந்தது. அரசாங்கம், பல்வேறு வெளிநாடு களுடன் வாணிபம், அதுசார்ந்த போக்குவரத்து, கடை வீதி, வீடுகள், விளையாட்டு என மக்கள் மிகவும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள் என்றால் நம்புவதற்குச் சிரமம்தான். ஆனால், பள்ளிச்சந்தைத் திடல் தென்னந்தோப்புக் குள், கடந்த ஆறு மாதங்களாக நடந்துவரும் அகழாய் வில், தோண்டத் தோண்ட, விலகிய மண்ணில் இருந்து வந்து கொண்டேயிருக்கிறது, பழங்கால மக்களின் எச்சங்கள். இவை, சங்க காலத்தைச் சேர்ந்த தமிழர்கள் இப்பகுதியில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள்.

மத்திய தொல்லியல் துறை கண் காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தலைமையில் தொல்லியலாளர்கள் என். வீரராகவன், எம். ராஜேஷ் ஆகியோர் இந்த அகழ்வாராய்ச்சியைச் செய்து வருகின்றனர். இவர்களுக்கு உறுதுணையாகச் சென்னை பல்கலைக்கழகத் தொல்லியல் துறை ஆய்வு மாணவர்களும், கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரி வரலாற்றுத் துறை ஆய்வு மாணவர்களும் ஈடுபட்டுள்ளனர். முதன்மை அகழ்வாராய்ச்சியாளர் அமர்நாத் ராம கிருஷ்ணனுடன் பேசினோம்.

"உலகில், மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டு தொடரும் மனித வரலாற்றை அறிவதற்கு, உலகம் முழுக்க அறிஞர்கள் பெரிதும் தொல்லியல் துறையைத்தான் சார்ந்திருக்கிறார்கள். இலக்கியச் சான்று களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள மனித வரலாறு, மனிதன் தோன்றி பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் இருந்துதான் தொடங்குகிறது. மனிதன் தோன்றியது முதல் இலக்கியங்கள் படைக்கப்பட்டது வரையிலான இடைப்பட்ட காலகட்டத்தில் வாழ்ந்த மக்கள் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள, அக்கால மக்கள் விட்டுச்சென்றுள்ள தொல்பொருள்கள்தான் இன்று நமக்கு முக்கிய ஆவணங்கள். அத்தகைய தொல்பொருட்கள் உலகின் பல்வேறு இடங்களில் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன. அவற்றை வெளிக் கொண்டு வருவதற்கான முயற்சிதான் அகழாய்வு.

தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களில் தொடர்ந்து நடைபெற்ற பல்வேறு வகை அகழாய்வுகள் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்விடப் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகத் தமிழகம், வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் பிறப்பிடம் என்பதும், தொன்மையான நாகரிகத்தினை உடைய ஒரு பிரதேசம் என்பதும் நிரூபணமாகி யுள்ளது. முதன்முதலில், ஆங்கிலேயர்கள் காலத்தில், இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையைச் சேர்ந்த அலெக் சாண்டர் ரீ மேற்கொண்ட அகழாய்வுகள் தான் மிகச் சிறந்த பண்பாட்டினை தமிழகம் கொண்டிருந்திருக்கிறது என்று வெளி உலகுக்குத் தெரியப்படுத்தின. அலெக்சாண்டர் ரீயின் முக்கிய இரண்டு அகழாய்வுகள் ஆதிச்சநல்லூர் மற்றும் பெரும்பேர் ஆய்வுகள். இவரது ஆய்வில் ஆதிச்சநல்லூரில் கிடைத்த பொருட்கள் அனைத்தும் அங்கு தொன்மையான நாகரிகம் ஒன்றிருந்ததை உறுதிப்படுத்தின. அவர் சேகரித்த வெண்கலப் பொருட்கள், சிந்துவெளி நாகரிகத்தில் கிடைத்த தாய் தெய்வ அமைப்புடைய வெண்கலத் திருவுருவம் போன்றவை. 3000 ஆண்டு களுக்கும் முன்பு சிறந்த வணிக நகரமாக ஆதிச்சநல்லூர் இருந்திருக்க வேண்டும் என்கிற முடிவுக்கு அலெக்ஸாண்டர் ரீயை நகர்த்தின.

அதன்பிறகு கொற்கை, காவிரிப்பூம் பட்டிணம், அரிக்கமேடு, உறையூர் உட்பட தமிழகத்தில் பல இடங்களில் அகழாய்வு கள் நடைபெற்றுள்ளன. இந்த அகழாய்வு கள் எல்லாவற்றின் முடிவுகளும் தமிழர் களின் தொன்மையான நாகரிகத்தினை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துவதாகவே அமைந்தன. இந்நிலையில் தற்போது கீழடியில் நடைபெற்றுவரும் அகழாய்வில் கிடைத்துள்ள சான்றுகளும், தமிழர்கள் வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை, மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

அக்கால மக்கள் வாழ்ந்த வீடுகள், பயன்படுத்திய வீட்டு உபயோகப் பொருட்கள், தானியங்கள் சேமித்து வைக்கும் மண்பானைகள், கழுத்து, காதுகளில் அணியும் அணிகலன்கள், மனித முக அமைப்புடைய பொம்மை, நந்தி உருவ பொம்மைகள், உருவமற்ற சுதைகள், தற்காப்புக்காகவும் வேட்டை யாடவும் பயன்படுத்தப்பட்ட இரும்பாலான பலவகை ஈட்டி முனைகள், பெண்கள் விளையாட பயன்படுத்திய தந்தத்தால் ஆன தாயக்கட்டைகள் எனப் பல அரிய பொருட்கள் இந்த அகழாய்வில் கிடைத்துள்ளன. குறிப்பாகச் சங்ககாலத் தமிழர்கள், உள்நாட்டின் பிற பகுதிகளோடு மட்டுமல்லாமல் வெளிநாடுகளோடும் வாணிபத் தொடர்பு வைத்திருந்ததற்கான தடயங்களும் சான்றுகளும் கிடைத்துள்ளன.

- சிவதானு -

தொடர்ச்சி 04ஆம் பக்கம்



# மதுரை...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

மதுரையின் பெருமைக்கும் பாரம்பரியத்துக் கும் இலக்கிய ஆதாரங்களைப் போலவே எண்ணிலடங்காத வரலாற்று மற்றும் தொல்லியல் ஆதாரங்களும் உள்ளன. இந்தியாவ-ில் இதுவரை கண்டறியப்பட்ட கல்வெட்டுகளில், மதுரை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்துதான், காலத்தால் மிகப் பழமையான கல்வெட்டு கள் அதிகம் கிடைத்திருக்கின்றன. மதுரை அருகே சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புள்ளிமான் கோம்பை நடுகல் தமிழ் எழுத்துக்கள் அசோகர் காலத்துக்கும் முன்பானது என அறிஞர்கள் கருதுகின்றனர். திருவிளையாடல் புராணத்தில் பாண்டிய மன்னன் பெருமணலூரை (தற்போது மணலூர்) தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததாக உள்ளது. இதேபோன்று பல்வகை ஆதாரங்கள் இருந்தும்கூட இப்பகுதியில் விரிவான தொல்லியல் அகழாய்வு ஏதும் இன்றுவரை மேற்கொள்ள ப்படவில்லை. இந்நிலையில்தான் மதுரை அருகே அகழாய்வு மேற்கொள்ள முடிவெடுத்தோம்.

2013ஆம் ஆண்டு இந்த ஆராய்ச்சியைத் தொடங்கினோம். ஆனால், தற்போதைய நிலையில் மதுரை நகருக்குள் தோண்ட முடியாது. எனவே, மதுரை அருகே அகழாய்வு செய்ய ஒரு சிறந்த இடத்தைத் தேடினோம். தென்தமிழகத்தில் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களின் முக்கிய நீராதாரமாக விளங்குவது வைகை நதி. மேற்கு தொடர்ச்சி மலையில் வெள்ளி மலை அருகில் உற்பத்தியாகி, ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆற்றங்கரை என்னும் பகுதியில் கடலில் கலக்கிறது வைகை நதி. இதன் பள்ளத்தாக்கு முழுக்கத் தொல்லியல் வளமிக்கப் பகுதியாக இருக்கிறது.

எனவே, வருசநாட்டில் ஆரம்பித்து ஆற்றங்கரை வரை, வைகை நதியின் இரண்டு பக்கமும் ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் தேடுதலை மேற்கொண்டோம். இந்தக் கள ஆய்வில் மண்மேடுகள், முதுமக்கள் தாழி, பெருங்கற் கால அடையாளங்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள் போன்ற தொல்லியல் சான்றுகள் 293 இடங்களில் கிடைத்தன.

இதில், மூன்று மீட்டர் உயரம் கொண்ட மண் மேடாகவும், மூன்றரை ஏக்கர் சுற்றளவும் 80 ஏக்கர் பரப்பும் கொண்டதாகக் கீழடியிலுள்ள பள்ளிச்சந்தைத் திடல் தொல்லியல் மேடு இருந்தது. பழங்காலத் தொல்லியல் சான்றுகள் இருக்கும் இடத்தையும் ஓர் ஊர் இருந்து அழிந்து போனதையும் தொல்லியல் மேடு என அழைப்போம். இவ்வளவு பெரிய தொல்லியல் மேடு கிடைப்பது மிகவும் அரிது. இந்த இடம், மதுரை - ராமேஸ்வரம் இடையேயான பழங்கால வணிகப் பாதையில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. எனவே, கீழடியில் அகழாய்வு செய்வது என முடிவு செய்தோம்.

மார்ச் 2ஆம் தேதி இப்பகுதியில் தோண்டத் தொடங்கினோம். முறையாகத் தொல்லியல் மேட்டை ஆராய்ந்து அளந்த பின் பலவகைக் கட்டங்களாகப் பிரித்தோம். 10-க்கு 10 மீட்டர் சதுர பரப்பளவில் 4-க்கு 4 மீட்டர் அளவில் மொத்த 32 குழிகள் தோண்டியுள்ளோம். பொதுவாக மேலிருந்து கீழ்நோக்கித்தான் தோண்டுவோம் என்றாலும், தொல்லியல் விதிமுறைகளின்படி கீழிலிருந்து மேல்நோக்கி வருவதுதான் அகழாய்வு. கீழிலிருந்து மேல்நோக்கி வருவதைத் தொல்லியல் மண் அடுக்கு என்கிறோம். இந்த மண் அடுக்கைப் பொறுத்துத்தான் காலகட்டத்தை வரையறை செய்ய முடியும். கீழே இருப்பது முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்ததாகவும், மேலே வரவர அதற்கு அடுத்தடுத்த காலகட்டத்தைச் சேர்ந்தவை என்றும் கணிக்கப்படும். மனிதர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான சான்றுகள், தடயங்கள், தொல்பொருட்கள் எதுவும் இல்லாத மண் அடுக்குப் பகுதியை கன்னிமண் என்போம். அப்பகுதி வந்ததும் தோண்டுவதை நிறுத்திவிடுவோம்.

பள்ளிச்சந்தை திடலில் மேட்டின் தன்மையைப் பொறுத்துக் குறைந்தபட்சம் 2.6 மீட்டர் ஆழத்துக்கும், அதிகபட்சமாக 4.4 மீட்டர் ஆழத்துக்கும் கன்னி மண் வரை தோண்டியுள்ளோம். இங்குள்ள மண் அடுக்குகளில், சங்க காலத்துக்குப் பிறகான, வரலாற்றுக் காலத் தொடக்கத்துக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இந்தச் சான்றுகளை வைத்தே மதுரையின் பழமையை நிரூபிக்கலாம்.




பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட உடைந்த மண்பாண்டங்கள், சுட்ட செங்கற்கள், செங்கற்களைக் கொண்டு கட்டபட்ட சதுர வடிவக் கட்டிட தொடர்ச்சி 19ஆம் பக்கம்



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

நல்ல ரேட்ல மோட்கேஜ், லைன் ஒப் கிரெடிட், ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ், பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க , வீடு வாங்க, விற்க,
வாடகைக்கு விட அல்லது பெற்றுக்கொள்ள
மற்றும் எதுவாக இருந்தாலும்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



## மோட்கேஜ் கிளினிக்

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

எமது முகவரி

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)





**சுதேசன் பத்மநாதன்** M.Com, B.Com
Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

விற்பனைக்கு முன் வீட்டினை திருத்த பண உதவி தேவையா? அதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்.

## எங்களது சமீபத்திய ரியல் எஸ்டேட் சேவைகள்







**OVER ASKING**



Leslie & Green Lane / Markham




Miller Park & Sideroad 10 / Bradford



Bayly & Salem / Ajax



Warden & Finch / Toronto



Warden & Finch / Toronto



Miller Park & Reid / Bradford



Markham & Sheppard / Scarborough



Finch & Don Mills / Toronto

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office :
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*
Brockerage Office :
112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232

# இலங்கை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்ற மறுநாள் 'The Hindu' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இலங்கையின் இரண்டு முக்கிய கட்சிகளான UNPஉம் SLFPஉம் சேர்ந்து இலங்கைத் தமிழர்களின் பிரதான கட்சியான TNA உடன் கூடி ஆராய்ந்து சிக்கலான தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான நீடித்த அரசியல் தீர்வை காணும் என்பதில் தனக்கு நம்பிக்கை உள்ளது என தெரிவித்திருந்தார்.



அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த நேர்காணலில் The Hindu பத்திரிகைக்கு ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில் SLFP கட்சியில் இருந்து 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரையில் பிரிந்து UNP இற்கு வர இருந்த நிலையில் தாம் இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனவை இக்கட்டான ஒரு நிலைக்கு தள்ளாமல் SLFP கட்சியை சேர்ந்த முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்காவும் இந்நாள் அதிபர் மைத்திரிபால சிறிசேனவும் சேர்ந்து முன்னெடுத்த தேசிய அரசாங்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட முன்வந்தாகவும் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல் தொடர்பான சர்வதேச விசாரணை தொடர்பாக கருத்து தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னைய அதிபர் மகிந்த ராஜபக்சவின் உள்நாட்டு விசாரணைகளில் நம்பிக்கை அற்றவர்களாலேயே சர்வதேச விசாரணை கோரப்பட்டது. ஆனால் தமது அரசு சர்வதேச சமுதாயத்தின் நம்பிக்கைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு உள்நாட்டு விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளது என்றார்.

எப்போது இலங்கை அரசின் அரசியல் அமைப்பு திருத்தப்படும் என்ற கேள்விக்கு பதிலளித்த பிரதமர், SLFP கட்சியை சேர்ந்தவர்கள் இதற்கு ஒரு வருடமாதல் செல்லும் என்கின்றனர். ஆனால் UNP கட்சியை சேர்ந்தவர்களோ ஆறு மாதத்தில் செய்யலாம் என்கின்றனர். அரசியல் அமைப்பை திருத்த முன்னர் 13ஆவது திருத்தத்திற்குள் ஒரு தீர்வு காணவேண்டும், தேர்தல் முறை மாற்றி அமைக்க ஒரு முடிவு எடுக்க வேண்டும், அதிபர் முறை முற்றாக ஒழித்தல் தொடர்பாக ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும், இவை எல்லாவற்றிற்கும் சுமுகமான விடைகள் கண்ட பின்னரே அரசியல் அமைப்பு திருத்தப்படும் என்றார்.

# 2015 ஓகஸ்ட் 17 இல் நடைபெற்ற இலங்கை நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள்

| கட்சி | கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | மாவாட்டரீதியில் | தேசியரீதியில் | மொத்தம் |
| நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி - UNFGG | 93 | 13 | 106 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - UNFA | 83 | 12 | 95 |
| தமிழ் தேசியக் கூட்டமைப்பு - TNA | 14 | 2 | 16 |
| ஜனதா விமுக்தி பெரமுன - JVP | 4 | 2 | 6 |
| சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் - SLMC | 1 | 0 | 1 |
| ஈழ மக்கள் ஜனநாயக்க கட்சி - EPDP | 1 | 0 | 1 |
| மொத்தம் | 196 | 29 | 225 |

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி (UNFGG) கூட்டணியில் ஐக்கிய தேசியக்கட்சி (UNP), தமிழ் முற்போக்கு கூட்டணி (TPA), ஜாதிக ஹெல உறுமய (JHU), சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC) உட்பட வேறு சில சிறிய கட்சிகள் இணைந்திருந்தன. இவை UNP இன் யானைச்சின்னத்தில் போட்டியிட்டன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) கூட்டணியில் சிறீலங்கா சுதந்திர கட்சி (SLFP), இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (CWC), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP) உட்பட 12இக்கு மேற்பட்ட கட்சிகள் இணைந்திருந்தன. இவை வெற்றிலை சின்னத்தில் போட்டியிட்டன.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் (TNA) கூட்டணியில் இலங்கை தமிழரசுக் கட்சி (ITAK), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO), தமிழ் ஈழ மக்கள் விடுதலை இயக்கம் (PLOTE) என்பன இணைந்திருந்தன. இவை இலங்கை தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தில் போட்டியிட்டன.

# தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றி!

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் நியமனப்பத்திரம் தாக்கல் செய்தது. இந்த ஐந்து மாவட்டங்களிலும் விகிதாசார முறையில் 29 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களின் விபரம் பின்வருமாறு

| கட்சி | யாழ்ப்பாணம் | வன்னி | மட்டகளப்பு | திருகோணமலை | திகாமடுல்ல | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) | 5 | 4 | 3 | 1 | 1 | 14 |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (EPDP) | 1 | 0 | 0 | 0 | 0 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP) | 1 | 1 | 1 | 2 | 4 | 9 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) | 0 | 1 | 0 | 1 | 2 | 4 |
| சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |
| மொத்தம் | 7 | 6 | 5 | 4 | 7 | 29 |

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இந்த ஐந்து மாவடங்களிலும் சேர்ந்து 14 உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். இதனால் அவர்களுக்கு தேசியப்பட்டியலில் இருந்து 2 உறுப்பினர் கிடைத்தனர். 2015 ஓகஸ்ட் 17 நடைபெற்ற தேர்தலில் மொத்தமாக 16 உறுப்பினர்கள் தமிழ் தேசியக்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383



OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# ஜனவரியில் ஏற்பட்ட மாற்றம் தக்க வைக்கப்பட்டுள்ளது!

பரபரப்பாக எதிர்பார்த்த இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் பாரிய சிக்கல்கள் எவையுமின்றி நிறைவடைந் துள்ளது. இலங்கையில் ஒரு ஜனநாயக சூழலை விரும்பும் அனைத்து மக்களும் ஒரு மாற்றத்தையே எதிர்பார்த்தனர். இதன் காரணமாக, கடந்த ஜனவரி மாதம் அந்த மாற்றம் மக்களால் நிகழ்த்தப்பட்டது. அந்த மாற்றம் தொடர்ந்து நிலைக்க வேண்டுமானால், நாடாளுமன்ற தேர்தலிலும் மாற்றம் நிகழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இலங்கையில் வாழும் சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இருந்தது. இலங்கை மக்களுக்கு மட்டுமன்றி, சர்வதேச சமூகத்திற்கும் இந்த எதிர்பார்ப்பு இருந்தது. இந்த நிலையில்தான் பாரிய பிரச்சினைகள் எவையும் ஏற்படா வண்ணம் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, தான் நாட்டின் பிரதமராகி மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கிலேயே இந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டார். குருநாகல் மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று அவர் வெற்றிபெற்றிருந்தாலும் அவர் சார்ந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும்பான்மை வெற்றியை பெறமுடியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி 5,098,927 வாக்குகளைப் பெற்று, போனஸ் ஆசனங்கள் உட்பட மொத்தம் 106 ஆசனங்களை பெற்றுக்கொண்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 4,732,669 வாக்குகளை பெற்று போனஸ் உட்பட 95 ஆசனங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. இதனால், மஹிந்த ராஜபக்ஸவின் பிரதமர் கனவு கலைந்து போனது.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 144 ஆசனங்கள் கிடைத்தது. ஐக்கிய தேசியக் கட்சி வெறும் 60 ஆசனங்களை மட்டுமே பெற முடிந்தது. அந்த வகையில், ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெற்றுள்ள இந்த தேர்தலில், 106 ஆசனங்களை பெற்றுக்கொள்ள முடிந்தமை ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி என்றே கருத வேண்டும்.

ஒரு கட்சி குறைந்த பட்சம் 113 ஆசனங்களைப் பெற்றால் அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் பிரதமராகும் வாய்ப்பு கிட்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. குறித்த 113 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றிருந்தாலும் கூட, மஹிந்த பிரதமராகும் நிலை இழுபறியாகவே இருந்திருக்கும். ஜனாதிபதி என்ற முறையிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையிலும், மைத்திரிபால சிறிசேன, 'மஹிந்தவை பிரதமர் பதவிக்கு வர இடமளிக்கப்பட மாட்டாது' என்றே கூறி வந்தார். மஹிந்த இரண்டு தடவை நாட்டின் அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக இருந்த காரணத்தினால் மீண்டும் அவர் பிரதமராகி அதிகாரத்தை தக்க வைப்பது சரியானதல்ல எனவும், கட்சியில் பல தலைவர்கள் பிரதமர் பதவிக்கு தகுதியானவர்களாக இருக்கின்றபடியால் அவர்களில் ஒருவருக்கே வாய்ப்பளிக் கப்படும் எனவும் தேர்தலின் முன்னர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்திருந்தார். இதனை தனது ஐந்து பக்க கடிதம் ஒன்றில் விளக்கமாக குறிப்பிட்டு மஹிந்த ராஜபக்ஸவிற்கு அவர் அனுப்பியிருந்தமையும் குறிப்பிடத் தக்கது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மஹிந்தவிற்கு எழுதியிருந்த கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த சில விடயங்களை மீள ஒருமுறை நினைவுபடுத்துவது பொருத்தமானதாக இருக்கும்.

பிரதமர் பதவியை வகிக்கக்கூடிய நேர்மையான, அரசியல் முதிர்ச்சியுடைய, தூர நோக்குடைய பல தலைவர்களைக் கொண்டுள்ள இந்த நாட்டின் தொலைநோக்கு கொண்ட அரசியல் கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திகழ வைக்க வேண்டும் எனவும்-நிமல் சிறிபால டி சில்வா, ஜோன் செனவிரத்ன, சமல் ராஜபக்ஸ, அத்தாவுத செனவி ரத்ன, ஏ.எச்.எம்.பௌஸி, சுசில் பிரேமஜயந்த மற்றும் அனுர பிரியதர்ஷன யாப்பா போன்ற சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரை இந்த பொதுத் தேர்தலின் பின்னர் பிரதமர் பதவிக்கு நியமிப்பதற்காக, மஹிந்த ராஜபக்ஸ ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இதன் பொருட்டு, தமது நெகிழ்வுத் தன்மை, அர்ப்பணிப்பு மற்றும் ஆசீர்வாதத்தை மக்கள் மத்தியில் பிரதிபலிக்குமாறும் நாட்டினதும், நாட்டு மக்களினதும், கட்சியினதும் பெயரால் மஹிந்த ராஜபக்ஸவிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அதில் தெரிவித்திருந்தார்.



கட்சியினுள் பிளவுகள் ஏற்படுவதற்கு இடமாளிக்காது, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தலில் அதிக ஆசனங்களை வெற்றிகொள்வதற்கு வழியேற்படுத்தும் வகையில் செயற்படுமாறும் மஹிந்தவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவை, மஹிந்த மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றி அரசாங்கத்தில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி விடலாம் என்கிற அச்சம் இருந்தமையை வெளிப்படுத்துகின்றது. ஜனவரி மாதம் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் தொடர்வதில் இடையூறுகள் ஏற்பட்டு விடுமோ என்ற கவலையினையும் இது வெளிப்படுத்துகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தல் முடிவுகள் வரும் வரையும் பதற்றத்துடனேயே காணப்பட்டார். தேர்தல் பரப்புரைகளில், ஜனவரி 8இல் இடம்பெற்ற புரட்சி தோல்வியடையக் கூடாது அவ்வாறு தோல்வியடைந்தால் நாடு படுகுழிக்குள் தள்ளப்படும் என்று மக்களிடம் திரும்பத் திரும்பக் கூறிவந்தார். இந்நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றி கொண்டு ஆசனங்களை அதிகப்படுத்தியிருந்தால், யார் பிர- தமர் என்கின்ற சர்ச்சை பாரிய அளவில் ஏற்பட்டு அரசி யலில் ஒரு பரபரப்பையும், பாதிப்பையும் குழப்பத்தையும் ஏற்படுத்திருக்கும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விற்கு தலைவலியையும் உண்டாக்கியிருக்கும். ஆனால், நிலைமை சாதகமாகவே அமைந்து விட்டது.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி யாக இரு தடவை கோலோச்சிய மஹிந்த ராஜபக்ஸ, இனிமேல், சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்ற கதிரையில் அமரப்போவதுதான் அவருக்கு ஏற்பட்டுள்ள துரதிஷ்டமான நிலை. அதுவும் அவரது அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தவர் ஜனாதிபதியாக இருக்க, மஹிந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வந்துள்ளமை ஒரு மதிப்பிழந்த தன்மை என்றே கூற வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஸ கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்ற பின்னர், ஓய்வு பெற்றிருந்தால் அவரது மதிப்பு முன்னாள் ஜனாதிபதி என்ற அளவில் தக்கவைக்கப்பட்டிருந்திருக்கும். இதுவரை அவர் 'முன்னாள் ஜனாதிபதி' என்றே குறிப்பிடப்பட்டு வந்தார். இனிமேல் அவர் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்றே குறிப்பிடப்படுவார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. மஹிந்த வின் இந்த நிலையை விளக்கி உள்ளூர் ஊடகங்கள் பல கேலிச் சித்திரங்களை பிரசுரித்து வருகின்றன.

தேர்தல் பரப்புரைகளின் போது, தானே பிரதமர் என்று நம்பிக்கையுடன் கருத்துக்களை மஹிந்த ராஜபக்ஸ வெளியிட்டு வந்தார். வெளிநாட்டு ஊடகம் ஒன்று அவருடனான நேர்காணலில்- "உங்களின் கீழ் அமைச்சராக இருந்த ஒருவர் தற்போது ஜனாதிபதியாக இருக்கின்றார். அவரின் கீழ் நீங்கள் பிரதமராக இருப்பதில் எவ்வித மனத் தாக்கங்களும் வராதா?" என்று வினவிய போது, "முன்னைய நிலைமை இப்போது இல்லை- இனிவரப் போகும் பிரதமர் பதவி வித்தியாசமானது" என அவர் குறிப்பிட்டிருந்தார். அதாவது, ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அவை பிரதமருக்கு வழங்கப்படுள்ள நிலையில், தான் பிரதமரானாலும் அதிகாரம் மிக்கவராகவே இருக்கப் போவதான கருத்திலேயே இதனை அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இப்போது என்ன கருத்தை கூறுவார்?

## - விகிர்தன் -

தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் தனது பிரதமர் கனவு கலைந்ததை ஏற்றுக்கொண்ட மஹிந்த, நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கப் போவதாக அறிவித்தார். தனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட அவசியமில்லை என தெரிவித்துள்ளார். அதை விடவும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்ல மனிதர் எனவும், அவரிடம் பழிவாங்கும் கொள்கை இல்லை என்றும், அவருடன் இணைந்து பணியாற்றுவதில் பிரச்சினை இருக்காது என்றும் கூறியுள்ளார்.

தன் மீதான குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிக்கொள்வதே மஹிந்த ராஜபக்ஸவின் தற்போதைய எண்ணமாகவுள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஆனால், புதிய மாற்றத்தின் பிர- தான மையப்பொருளாக திகழ்வது 'நல்லாட்சி' என்பதே. அதற்காகவே மக்கள் மாற்றத்திற்கு வாக்களித்துள்ளனர். கடந்த காலத்தில் தவறிழைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். ஜனநாயகத்தை நிலைநிறுத்தவும், நல்லாட்சியை அதன் அர்த்தத்தில் முன்னெடுத்துச் செல்லவும் இது முக்கியமானதாகும்.

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# அடுத்த கட்டத்தை நோக்கி உறுதியாகவும், விரைவாகவும் நகர்வதே புத்திசாலித்தனம்!

## தாயகமடல்

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் வழமை போலவே, தமிழ் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்திருக்கின்றனர். வடக்கிலும் கிழக்கிலுமாக 14 ஆசனங்களை வென்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு போனஸ் ஆசனங்கள் இரண்டையும் பெற்று மொத்தம் 16 ஆசனங்களை பெற்றுள்ளது. இம்முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு கடுமையான போட்டியாக கருதப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி படுதோல்வியை அடைந்துள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் இம்முறை வாக்குகள் பிரிந்து போகலாம் - சிதைவடையலாம் என்கிற அச்சம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு இருந்தது. ஆனால், அவர்கள் பயந்தபடி எதுவும் நடக்கவில்லை. எனினும், சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த தேர்தலில் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக வந்த எம்.ஏ.சுமந்திரன் இம்முறை போட்டியிட்டு வென்றுள்ளார். வடமாகாணசபை உறுப்பினராக இருந்த புளொட் அமைப்பின தலைவர் த. சித்தார்த்தன் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் இத்தேர்தலில் தோல்வியடைந்துள்ளார். தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவரான சுரேஸ் பிரேமச்சந்திரன் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாக்குகளின் அடிப்படையில் ஆறாவது இடத்திற்கு கூட வரமுடியாமல் பின்தள்ளப்பட்டிருக்கின்றார். யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டவர்களில் கடுமையான எதிர்ப்புகளுக்கு ஆளானவர் சுமந்திரனே. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக மக்கள் மத்தியில் கடுமையான பிரசாரங்களை மேற்கொண்டாலும் அதில் குறிவைத்து அதிகம் தாக்கப்பட்டவர் சுமந்திரனே.



தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளும் சுமந்திரன் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளானார். சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர் மீது கடந்த காலங்களில் பல குற்றச் சாட்டுக்களை சுமத்தி வந்தார். யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் கொடும்பாவி எரிக்கப்பட்டமையும் கூட்டமைப்பினராலேயே மேற்கொள்ளப்பட்டது. இவற்றையெல்லாம் கடந்து, சுமந்திரன் வெற்றி பெற்றுள்ளார். கடந்த 2010ஆம் ஆண்டில் அரசியலில் பிரவேசித்து குறைந்தளவு வாக்குகளில் நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறிதரன் இம்முறை அதிக வாக்குகளைப் பெற்று முதன்மை இடத்திற்கு வந்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றியடையும் என்பது எதிர்பார்க்கப்பட்டதாயினும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி யாழ். மாவட்டத்தில் ஒரு ஆசனத்தைக் கூடப் பெறமுடியாமல், அதாவது, ஐக்கிய தேசியக் கட்சி, ஈபிடிபி பெற்ற வாக்குகளைக் கூட பெறமுடியாமல் படுதோல்வியடையும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. மக்கள் நடைமுறை யாதார்த்தமான விடயங்களை கருத்திற் கொண்டு தங்களது வாக்குகளை அளித்திருப்பதாவே தோன்றுகிறது. இவை ஒரு புறமிருக்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு கிடைத்த இரண்டு போனஸ் ஆசனங்களை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பிலும் இழுபறி நிலை காணப்பட்டு அதுவும் ஒரு முடிவிற்கு வந்துள்ளது. வாக்குகளின் அடிப்படையில், சிறிதளவு வாக்குகள் வித்தியாசத்தில் ஆறாவது இடத்தில் இருந்த அருந்தவபாலனுக்கும், தோல்வியடைந்த சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் இந்த இரண்டு ஆசனங்களையும் வழங்க வேண்டும் என்கிற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஆனால், வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்விகண்ட சாந்தி சிறீஸ்கந்தராஜாவிற்கும், கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த க. துரைரட்ணசிங்கத்திற்கும் இந்த போனஸ் ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனை சுரேஸ் பிரேமச்சந்திரன் கடுமையாக எதிர்த்து கருத்துக்களை வெளியிடுகின்ற போதிலும், இதனை தவறு என வாதாட முடியாது. ஏனெனில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தில் பெண்களுக்கு இடமளிக்கப்படவில்லை என்கிற குற்றசாட்டு உள்ளது. எனவே, ஒரு பெண்ணுக்கு அதனை வழங்குவது சரியானதே. அதனை விடவும், சாந்தி கணிசமான வாக்குகளை பெற்றவர்.

இலங்கை நிர்வாக சேவையில், பிரதி திட்டமிடல் பணிப்பாளராக பணியாற்றியவர் என்பதால், நிர்வாகத்துறை அனுபவங்களைப் பெற்றவர். மக்களுக்கான தேவைகளை திட்டமிட்டு ஆற்றக்கூடிய ஆளுமையுடன் அவர் செயற்படலாம். அத்துடன், வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் அவலங்களை நேரில் எதிர்கொண்ட ஒருவர். எறிகணை வீச்சினால் தனது ஒரு காலையும் இழந்தவர். அவருக்கு இடமளிக்கப்பட்டதை எதிர்ப்பதோ, விமர்சிப்பதோ சரியானதாக இருக்காது. அடுத்த ஒரு போனஸ் ஆசனத்தை கிழக்கு மாகாணத்திற்கு வழங்கியதையும் தவறு என்று சொல்ல முடியாது. திருகோணமலையில் தமிழரின் பிரதிநிதித்துவம் பேணப்படுவது முக்கியமானது.

இந்நிலையில், செப்ரெம்பர் முதலாம் திகதி புதிய நாடாளுமன்றம் கூட்டப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளுக்குள் காணப்படும் முரண்பாடுகள் யாவற்றையும் ஒருபுறம் வைத்து விட்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதே புத்திசாலித்தனமானது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள காரியங்களை நிறைவேற்றுவதில் கடுமையாக உழைக்க வேண்டிய கடமை தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு உள்ளது. அதனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து செயற்படுத்த வேண்டும்.

2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருந்தாலும் அது சாத்தியமானதாக அமையப்போவதில்லை. அது சாதாரண மக்களுக்கும் புரியும். ஆனால், ஏனைய விடயங்களை 2016ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன. அவற்றை காலம் தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டியது அவசியமானது.

போர் முடிவுற்று ஆறு வருடங்கள் கடந்து விட்ட போதிலும், காணாமல் போனவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. முன்னைய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்ந்தும் அமர்வுகளை மேற்கொண்டு வந்தாலும் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. காலத்தை கடத்திச் செல்லும் ஆணைக்குழுவாகவே அது செயற்படுகின்றது. குறித்த அந்த விசாரணைப் பொறிமுறையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். விசாரணைகள் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு, மக்களுக்கு தீர்வு ஒன்றை வழங்க காலவரையறை நிர்ணயிக்கப்பட வேண்டும். இரகசிய முகாம்களில் சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் தகவல்களும் ஆராயப்பட வேண்டும். இதனை ஆராய குழுவொன்று அமைக்கப்பட்டு, ஐ.நா உள்ளிட்ட சர்வதேச பிரதிநிதிகளும் அக்குழுவில் உள்ளடக்கப்பட வேண்டும். பல வருடங்களாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்ய இறுக்கமான நடவடிக்கைகளை சட்டரீதியாக மேற்கொள்ள

**- ஆதித்தன் -**

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com



4 Bedrooms, 4 W Room
Upgraded Kitchen Cabinets, Backsplash, Granite Counter Top & Centre Island



4 Bedrooms, 3 W Room
Master Bdrm Has An Amazing 4Pc Ensuite & Walk-In Closet



4+1 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement With Huge Bedroom



3 Bedrooms, 3 W Room
California Shutters, Oak Staircase, Fire Place



3 Bedrooms, 3 W Room
Dining & Family Room With Gas Fireplace



4+2 Bedrooms, 4 W Room
Large Dining Rm W/ Decorative Columns For Entertaining



4 Bedrooms, 3 W Room
Large Detached Fully Bricked Double Car Garage



3 Bedrooms, 3 W Room
Upgraded Oak Staircase With Iron Picket Rails



3+1 Bedrooms, 2 W Room
Professionally Landscaped Including Stamped Concrete



3 Bedrooms, 3 W Room
Bright And Sun-Filled Home Open Concept Kitchen



3+2 Bedrooms, 2 W Room
Potential Basement Apartment Lots Of Parking



3 Bedrooms, 3 W Room
Open Concept Main Flr & Fam Rm W/ W/O To Yard



3 Bedrooms, 3 W Room
Large Master Bedroom With Sumptuous Ensuite Bath



3 Bedrooms, 4 W Room
Beautiful Hardwood On Main Floor Walk-Out To Balkony



3 Bedrooms, 2 W Room
2 Year New " Sierra" Built Royal Wynd Home



KZG 647-200-5833

Sell your home **faster** and more **money**

RE/MAX Platinum Club Award

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# இலங்கை...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

கூட்டமைப்பிற்கு கிடைத்தனர். இது கடந்ததேர்தலில் அவர்களுக்கு கிடைத்த 14 உறுப்பினர்களை விட 2 உறுப்பினர்கள் அதிகமாகும். தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 6ஆவது உறுப்பினர் கிடைப்பது 6 வாக்குகளினாலேயே தவறவிடப்பட்டது என அதன் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். தமிழ் மக்களின் தேசிய நலனை கருத்தில் கொண்டே போட்டியிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயகப் போராளிகள் அமைப்பு மூன்றும் ஒன்றாக இணைந்து போட்டியிட்டிருந்தால் தமிழ் தேசிய நலனைக் குறிக்கோளாகக் கொண்ட 20 உறுப்பினர்களை இத்தேர்தலில் தமிழ் மக்கள் நாடாளுமன்றம் அனுப்பியிருப்பர்.

# தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரம்



### யாழ்ப்பாணம்

1. சிவஞானம் சிறிதரன்
2. மாவை சேனாதிராஜா
3. எம். ஏ. சுமந்திரன்
4. தர்மலிங்கம் சித்தார்த்தன்
5. ஈ சரவணபவன்

### திருகோணமலை

1. இரா. சம்பந்தன்

### மட்டக்களப்பு

1. ஞானமுத்து சிறீநேசன்
2. சதாசிவம் விஜேந்திரன்
3. சீனித்தம்பி யோகேஸ்வரன்

### வன்னி

1. சார்ல்ஸ் நிர்மலநாதன்
2. A அடைக்கலநாதன்
3. A.N சிவசக்தி ஆனந்தன்
4. சிவபிரகாசம் சிவமோகன்

### திகாமடுல்ல

1. கவிந்தன் கோணேஸ்வரன்

### தேசியப்பட்டியல்

1. சாந்தி சிறீஸ்கந்தராஜா
2. கே. துரைரட்ணசிங்கம்

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினர்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு தேசியப்பட்டியல் உறுப்பினர்களாக கே. துரைரட்ணசிங்கம் (திருகோணமலை), சாந்தி சிறீஸ்கந்தராஜா (வன்னி) ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான துரைரட்ணசிங்கம் ஓய்வுபெற்ற அதிபராவார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெண் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா இலங்கை நிர்வாக சேவையில் திட்டமிடல் பணிப்பாளராக சேவையாற்றியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேசியப் பட்டியல் நியமனங்கள் தொடர்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன் மிகவும் ஆழமாக சிந்தித்து விவாதித்த பிறகே கூட்டமைப்பின் சார்பில் துரைரட்ணசிங்கம் மற்றும் சாந்தி சிறீஸ்கந்தராஜா ஆகியோருக்கு தேசியப் பட்டியல் நியமனம் வழங்கும் முடிவு எடுக்கப்பட்டது என பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார். சில கொள்கைகளின் அடிப்படையிலேயே அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் அவர் கூறினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு ஒவ்வொரு இடங்கள் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது என்றும், கூட்டமைப்பின் சார்பில் பெண் ஒருவர் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது என்றார். குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே சாந்தி தோல்வியடைந்திருந்தார் என்பதும், யாழ். தேர்தல் மாவட்டத்தைக் காட்டிலும் வன்னி தேர்தல் மாவட்டத்தில் குறைந்த அளவுக்கே கூட்டமைப்பின் சார்பில் உறுப்பினர்கள் தேர்தெடுக்கப்பட்டனர் என்பதும் அவரது தேர்வுக்கு ஒரு காரணம் என்கிறார்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மற்றும் அம்பாறை தேர்தல் மாவட்டங்களிலேயே மிகக் குறைவான உறுப்பினர்கள் தேர்வானதால் அப்பகுதிக்கு ஒரு இடம் வழங்கும் முடிவு எடுக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

வட மாகாணத்துக்கான இடத்தை முடிவு செய்யும்போது யாழ் தேர்தல் மாவட்டத்தில் ஏற்கனவே ஐந்து உறுப்பினர்கள் அங்கு தேர்வாகியுள்ள நிலையில், குறைந்த வாக்கு வித்தியாசத்தில் ஆறாவது இடத்தை தவற விட்டவரை புறந்தள்ளி அவருக்கும் குறைவான வாக்குகள் பெற்று அடுத்த இடத்தில் இருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு இடமளிப்பது குறித்து பல கேள்விகள் எழுந்தன என்றார் கூட்டமைப்பின் தலைவர்.

# நாமும்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

கிழமைகளில் ஏற்பட்ட பங்குச்சந்தையின் இறக்கம். இதன் தாக்கத்திலிருந்து மக்கள் வெளிவர குறிப்பிட்ட காலம் எடுக்கலாம். 2000 - 2009இல் இதே நிலைமைகள் இருந்தன.



4. கனேடிய பொருளாதார இறுக்கம் / மடிவு (Recession), இதன் பாதிப்பு எவ்வாறு இருக்கலாம்.

இவை இவ்வருடத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சில தாக்கங்கள். இதன் பாதிப்பு, தாக்கங்கள் எதிர்காலத்தில் தான் தெரிய வரலாம். பொருளாதாரத்தில் இதன் உண்மையான தாக்கம் ஏற்படுத்துமா இல்லையா என்பதன் வெளிப்பாடு புதன் செப்ரெம்பர் 09, 2015 இல் வெளிவரும் கனேடிய மத்திய வங்கியின் பொருளாதார அறிக்கையுடன் வட்டிவீத நிர்ணயத்திலும் இருந்து ஓரளவு ஊகித்துக் கொள்ளலாம் அதுவரை.....




# நாமும் நமது இல்லமும்

ராஜா-மகேந்திரன்

## தொடர் - 447

கனேடிய பொருளாதாரம், ஏற்கனவே இறக்கத்தில் இருப்பதனை, அறியக்கூடியதாக உள்ளது. பொருளாதார இறுக்கம் / மடிவு (Recession) மேலும் மக்களின் வாழ்வைப் பாதிப்பதனைக் காணக் கூடியதாக உள்ளது. கடந்த இருகிழமை களாக (2015 ஆகஸ்ட் மாதத்தின் கடைசி இரு கிழமைகள்) பங்குச்சந்தை மிகப் பெரிய இறக்கத்தைக் கண்டது. 2008/2009 இல் ஏற்பட்ட நிலைமைபோல கடந்த கிழமைகளில் காணப்பட்டது. இருப்பினும், கடந்த ஓரிரு தினங்களாக இந்நிலைமை சற்று நிவாரணம் தந்துள்ளதனை அறியலாம்.

சீனா, தனது பணத்தின் (Rimbi / Yuan) பெறுமதியை இறக்கியதால், இந்நிலைமை ஏற்பட்ட தாக பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இந்நிலைமை இவ்வாறு இருக்கும்போது, அமெரிக்க பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதனைக் காணக் கூடியதாக உள்ளது. 2008/2009இல் ஏற்பட்ட உலக பொருளாதார நெருக்கடி யிலிருந்து இலகுவாக தப்பித்துக் கொண்ட எமது நாடு கனடா, இம்முறை இந்தப் பொருளாதார நெருக்கடி யிலிருந்து எவ்வாறு தம்மை பாதுகாக்கும் என்பதனை எதிர்காலம்தான் பதில் கூறும். அத்துடன் கனேடிய தேர்தல் காலம் என்பதால் இந்நிலைமை சற்று கடினமாக இருக்கலாம்.

இருப்பினும் செப்ரெம்பர் 09, 2015இல் கூடும் கனேடிய மத்திய வங்கியின் ஆளுனர்களின் கூட்டத்தில் கனேடிய மத்திய வங்கியின் வட்டி வீதத்தில் இறக்கம் ஏற்படலாம் என முன்னணி நிதி நிறுவனம் ஒன்று ஏற்கனவே எதிர்வு கூறியுள்ளது. ஏற்கனவே கனேடிய டொலரின் பெறுமதி இறக்கத்தை கண்டுள்ளது, இந்நிலைமை தொடருமா? இவ்வாறு வட்டிவீதத்தில் இறக்கம் ஏற்பட்டால் மேலும் இறக்கத்தை எதிர்பார்க்கலாம். ஆனால் ஆதன விற்பனைக்கு உதவலாம்.

ஆதனம் வாங்குபவர்கள் அடமானக்கடன் பெறுவதில் மிகப்பெரிய நெருக்கடிகளை சந்திக்கின்றார்கள். பணம் கொடுக்கும் நிதி நிறுவனங்கள் பல இறுக்கமான நிபந்தனைகளை முன்வைக்கின்றன. எனினும் ரொறொன்ரோவின் சில பகுதிகளில் இப்பொழுதும் ஒரு வீட்டிற்கு ஒன்றிற்கு மேற்பட்ட வாங்குபவர்கள் (Multiple Offers) போட்டி போடுவதனையும் காணக்கூடியதாக உள்ளது. பொதுவாக வியாபாரச்சந்தை சிறிது மந்த நிலைமை அடைந்துள்ளதனையும் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலைமையில் அடுத்த மாதங்களில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படுமா? எனினும் இந்த வருடத்தில்




(2015) கனேடிய வீட்டுவிலை 5% இனால் அதிகரிக்கும் என்பதனை காணலாம். ஆனால் அடுத்த ஆண்டிலும் (2016) அதற்கு அடுத்த வருடத்திலும் (2017) ஆதன விலையில் அதிகரிப்பு ஏற்படலாம் என Reuters நிறுவனம் கூறுகின்றது.

இருப்பினும் சில ஆய்வாளர்களின் அறிக்கையின் பிரகாரம் அமெரிக்க வட்டிவீதம் அதிகரிக்கும்போது, கனேடிய வட்டி வீதமும் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அப்பொழுது வீட்டின் விலை அதிகரிப்பு தடைப்படும் என்பது நிதர்சனமாகலாம். எனினும் CMHC, தனது அறிக்கையில் வீட்டின் விலை ஏற்கனவே 30% இற்கு மேலாகவே (Over value) காணப்படுவதாக அச்சம் தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தில் பல நிகழ்வுகள் கனேடிய பொருளாதாரத்தை அச்சுறுத்தும் வகைகளில் நடைபெற்று வருவதனைக் காணலாம்.

1. குறூட் ஒயிலின் (Crude oil) விலையில் ஏற்பட்ட இறக்கத்தால் அல்பேட்டாவில் வீட்டின் விலையில் இறக்கம் ஏற்பட்டு வருகின்றது. நீண்ட கால பழமைவாதக் கட்சி தனது பதவியை இழந்தது. மக்கள் இந்த மாகாணத்திலிருந்து மற்றைய மாகாணங்களிற்கு குறிப்பாக ஒன்ராரியோ விற்கு இடம்பெயர்வதனைக் காணக் கூடியதாக உள்ளது.

2. தேர்தல் காலம் - ஒக்ரோபர் 19, 2015, இதனால் பாரிய முடிவுகளை அரசு எடுக்க முடியாமல் இருக்கும்.

3. ஓகஸ்ற் 2015இன் இறுதிக்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.

* INDEPENDENTLY OWNED AND OPERATED



5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

**PIZZA STORE FOR SALE**

Cambridge - Ontario
Same owner is running for over 15 years. Weekly sale $110,000. Rent $2500 includes HST. Owner will finance with 30% down. Opening hours (11 - 12) every-day, 8 schools around this store.

**Asking Price $289,000**

**HOUSE. FOR SALE**



**CASTLE MORE & MCVEAN**
4 Bedroom + 2 Bedroom bsmt. Sep. entrance, 4 Washroom, Hardwood floor. Parking, 9ft ceilings

**Asking Only $769 K.**

**RESIDENTIAL LAND SALE**

- 52 acres land divided into 30 lots.
- 30 lots (Each lot 1 acre to 2 acres)
- lake view
- Location: Rice Lake (Harwood)

1 hr. 15 min. form Scarborough about 115 km form Scarborough.

**Asking $1.6 Million**

# ஊழலில்லாமல் வாழ்வது எப்படி?

கேள்வி: நான் ஆன்மீகப் பாதையில் இருக்கிறேன், நான் உங்கள் பக்தன், எனக்குள் ஊழல் இல்லாமல் வாழ்வது எப்படி?


சத்குரு: ஊழல் என்பது எனது, உனது என்று பிரித்துப் பார்ப்பதிலிருந்தே துவங்கு கிறது. இதுவே ஊழலுக்கு அடிப்படை. முதலில் உங்கள் உடலுடன் அடையாளம் கொள்கிறீர்கள், ஊழல் துவங்குகிறது. பின்பு திருமணம் செய்து கொள்கிறீர்கள், இன்னொரு உடலுடன் அடையாளம் ஏற்படுகிறது, ஊழலும் வளர்கிறது.

தன் உடலுடன் மட்டும் அடையாளம் இருக்கும்போது ஊழல் சிறிய அளவில் இருக்கிறது. குடும்பம் என்று வளரும்போது ஊழல் விரிகிறது. அதன்பின் சமூகம், தேசம் என்று இது விரிவடைந்து கொண்டே செல்கிறது.

உங்கள் குடும்பத்திற்கு ஏதோவொன்று நிகழ்கையில் உங்களுக்குள் குடம் குடமாக கண்ணீர் ஊற்றெடுக்கிறது. வயிற்றில் உணவில்லாமல் தெருவில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் உங்களுக்குள் பாதிப்பு இல்லை. இது ஊழலின் உச்சம். உங்களுக்கு பெரிய பதவி கிடைக்க வேண்டும், அதன்பின் ஊழலால் நான் தாக்கமுறாமல் இருக்கிறேனா என பார்க்க வேண்டாம், தற்சமயம் நீங்கள் பக்தராக இருக்கும் போதே பாருங்கள். எனக்குள் ஊழலில்லா மல் இருப்பது எப்படி என்று பாருங்கள்.

நீங்கள் தியானத் தன்மையுடையவராய் இருந்தால், நீங்கள் பக்தராய் இருந்தால் உங்களுக்குள் ஊழல் எப்படி நுழையும்?

அதனால் பதவி உங்களை ஊழலுடையவ ராய் ஆக்குகிறது என்பதல்ல, நீங்கள் நேர்மையில்லாதவராக இருக்கிறீர்கள் அதுதான் அடிப்படை காரணம். பதவி யினால் அது இன்னும் அழுத்தமடைகிறது, உறுதி பெறுகிறது. அவ்வளவுதான்.



## சத்குரு வாசுதேவ்

என்னை பக்தன் என கூறிக் கொள்ளும் நீங்கள் உண்மையிலேயே பக்தனாக வாழ்ந்தால், உலகம் முழுவதும் உங்கள் அரவணைப்பில் இணைந்து விடும். அங்கு ஊழல் இருக்காது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

### ஜாதகப் பொருத்தம் பார்க்காமல் திருமணம் செய்யலாமா?

உங்களுடன் வாழப் போகிறவரை நீங்கள் அல்லவா தெளிவுடன் தேர்தெடுக்க வேண்டும்? உங்கள் வாழ்க்கையை ஜோசியம், ஜாதகம் என்று ஏன் அடுத்தவர் கையில் ஒப்படைக்கிறீர்கள்?
கட்டங்களைப் பார்த்து அவர் செய்து வைத்த திருமணங்களில் எவையெவை விபத்துக்களாக முடித்திருக்கின்றன என்ற பட்டியலை உங்களிடம் காட்டியிருக்கிறாரா?
உங்கள் கணவனுடன் சண்டை வந்தால், காரணம் நட்சத்திரங்கள் என்பீர்கள். உங்கள் மனைவியுடன் சேர்ந்து வாழத் தெரியாவிட்டால், கிரகங்கள் மீது பழியைத் தூக்கிப் போடுவீர்கள்.
திருமண வாழ்வு சரியாக அமையாவிட்டால், அதற்குக் காரணம் இங்கே இருக்கும் இரண்டு பிடிவாதக்காரர்கள் தான். எங்கேயோ இருக்கும் ஒன்பது கிரகங்களல்ல.
கணவன் மனைவி இருவருக்கும் மனதால் பொருந்திவிட்டால் தெளிவுடன் வாழ்க்கையை வாழத் தயாராகி விட்டால் நாள் என்ன செய்யும்? நட்சத்திரங்களும், கிரகங்களும் என்ன செய்யும்?

**- சத்குரு**




# அடுத்த கட்டத்தை...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் காணிகளில் இருந்து படையினர் முற்றாக வெளியேறி குறித்த மக்களின் மீள் குடியேற்றத்தை மேற்கொள்வதற்கும் ஓர் உறுதியான காலவரையறை குறிக்கப்பட வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பாரிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும். இவற்றை மேற் கொள்ள அரசாங்கத்திற்கு திட்டங்களை வழங்கி அவற்றை துரிதமாக நிறைவேற்ற அழுத்தம் கொடுக்க வேண்டும். புதிய அரசாங்கமும் இவ்விடயங்களில் இழுத்தடிப்பு தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்துமானால், சர்வதேச அழுத்தங்களை பிரயோகிக்கும் விதமான காரியங்களிலும் இறங்க வேண்டும்.


தமிழ் மக்களின் நீண்ட கால பிரச்சி-னயான அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கான பொறிமுறை ஒன்றையும். அத்தியாவசிய பிரச்சினை தீர்விற்கான பொறிமுறையையும் வெவ்வேறாக பிரித்து அதற்கான செயற்திட்டங்களை துரிதப்படுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் எவையுமே நடைபெறாது போனாலும் கூட, தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பையே தங்கள் பிரதிநிதிகளாக ஏற்று கொண்டுள்ளார். தமிழ் தேசியக் கூட்டமைப்பே தங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுத் தரும் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு அற்றுப்போய் விடவில்லை.

மஹிந்த ஆட்சியில் இருந்த தடைக்கற்களை அகற்றி, ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்து, தற்போது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கே மீண்டும் இடமளித்திருக்கின்றார்கள் மக்கள்.

'நல்லாட்சி' என்ற மகுடத்துடன் ஆட்சிக்கு வந்திருக்கும் புதிய அரசாங்கம் சிங்கள மக்களுக்கு மட்டுமல்லாமல், தமிழ் மக்களுக்கும் நல்லாட்சியை வழங்குமா? இந்த 'நல்லாட்சி' அரசாங்கத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எவ்விதமான தொடர்புகளைப் பேணி, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப் போகின்றது என்பன தொடர்பில் தமிழ் மக்கள் மிகுந்த அவதானிப்புடனேயே இருக்கின்றனர்.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

## More Than 27 Yrs of Experience in Teaching

**Dear Students; Welcome to the school year 2015/16**

### For this year Special Program

**G12**

Starts: Sep 8th, 15th

**Advanced Function and Calculus**

***Combined Program*** (weekends class only)

Our Previous records **90**'s and above.

**G12**

Starts: Sep 8th

**Advanced Function**

The Regular Program: weekdays only

It's a parallel study with your school work

**G11**

**Function**

**G10 and G9 The Regular Programs as well.**

Starts: 1st week of Sep

We focus only in Math to give the best teaching and a deeper understanding, in order to improve each and every student's knowledge as much as possible.



**INFO: 416-666-5515**



# தமிழரின் வருங்கால சவால்களும் கடமைகளும்!

அன்பான உடன்பிறப்புக்களே!

இந்த ஆண்டு இரண்டாவது முறையாக ஒரு தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. முன் பொருபொழுதும் இல்லாதவாறு இம்முறை நாடு முழுவதிலும் கட்சிகளுக்குள்ளும் வேட்பாளர்களுக்குள்ளும் காரசாரமான வாக்குவாதங்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. எல்லா மக்களின் தீர்வையும் யதார்த்த முறையில் ஏற்று, தமிழராகிய நாம் எமது போராட்டத்தை தொடர வேண்டியது எமது கடமை.

“ஆரியரோ அவரவரோ என்ன கூத்தாடினாலும், நாம் எமது காரியத்தில் கண்ணாயிருப்போம்!” தெற்கில் பெரும்பான்மையான சிங்களவர்கள் பல விதமாகப் பிரிந்து நாடாளுமன்றத்திற்குள் புகுந்தாலும், தமிழ் முஸ்லீம் சகோதரரின் உரிமைகளையும் இலட்சியத்தையும் எல்லோரும் சரியாக விளங்குவதும் இல்லை மதிப்பதுமில்லை. இதற்கு முந்திய தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய வாக்குகளினால் மகிந்தாவை தோற்கடித்து, இலங்கைத் தீவில் நல்லாட்சியையும், ஒழுங்கையும் நிலை நாட்ட மைத்ரி சிறிசேனாவை நாட்டின் தலைவராகக் கொண்டு வர மிக முக்கிய பங்களித்தனர்.

தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் விவாதத்திற்கோ தீர்மானத்திற்கோ எடுத்துக் கொள்ளப்படா விட்டாலும், வட கிழக்கில் வாழும் தமிழர் மீளவும் மனிதர்களாக அடிப்படை உரிமைகளுடன் வாழுவதற்குரிய இடைவெளி கிடைத்தது. ஒரு கொடுமையான ஆட்சியை ஒழித்து, தமிழினத்தின் இருப்பை உறுதிப்படுத்தி, எமது போராட்டம் ஜனநாயக முறையில் தொடர வழி வகுத்தோம். அத்துடன் எமது உரிமைப் போராட்டத்தை நாம் நாட்டிற்குள் தொடர, யாப்பு மாற்றத்தினால் ஜனநாயகமும் ஒழுங்கும் மீளவும் நிலை நாட்டப் பட்டிருக்கின்றன.

வருங்காலத்தில் எமது உரிமைப் பிரச்சினைகளை முற்போக்கான முறையில் கணித்து, தீர்வு காண முயலப் போவதாக தமிழ்த்தலைவர்களுக்கு சிறிசேனாவும் றணிலும் சந்திரிக்காவும் உறுதி அளித்திருக்கின்றனர். ஆனால் கடந்த கால அனுபவ அடிப்படையில், எவ்வளவிற்கு அதை செய்ய முயல்வார்களென்பது பெரிய கேள்விக் குறிதான். அத்தோடு தமது அரசாங்கத்தை பெரும்பான்மையுடன் நடத்துவதற்காக, கடந்த 65 ஆண்டுகளாக மாறி மாறி அரசாண்ட இரு சிங்கள கட்சிகளும் ஒப்பந்த அடிப்படையில் ஒன்று பட்டிருக்கின்றனர். அதேநேரத்தில் மகிந்தாவும் கூட்டாளிகளும், சிங்கள பேரினவாத காப்பாளர்களும் நாடாளுமன்றத்தினுள் புகுந்திருக்கின்றனர். இச்சூழலில் எங்களுக்கு முன் எழும் சவால்கள் என்ன? எங்களுடைய அணுகு முறைகள் எவ்வாறு? இவற்றையிட்டு தமிழர்களாகிய நாம் எமது யதார்த்த நிலையைப் பல விதத்திலும் புரிந்தவர்களாக இருக்க வேண்டும். எமது இலட்சியத்திலும் திசையிலும் ஒற்மையாக முன்னேற வேண்டும். இவை இரண்டிற்கும் இணைய உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் போராட்டத்தை தொடர வேண்டும்.



முதலிடத்தில் பொதுவாக கூறின், உண்மை, நீதி, ஜனநாயகம் இவற்றில் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் இழக்காது, போராட்டத்தை யதார்த்த முறையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொடர்வதே எமது ஒரே வழி!.

## இன்றைய போராட்டத்தின் தன்மையும் சவால்களும் முனைகளும் என்ன?

தனிப்பெரும் தன்மையையும் சிக்கலான சவால்களையும் கொண்ட எமது போராட்டத்தை பல முனைகளில் முன்னெடுக்க வேண்டும்.

### உள்நாட்டிலும் நாடாளு மன்றத்தினுள்ளும்

நாடாளுமன்றத்தினுள் தமிழ் பிரதிநிதிகள் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளை தீர்க்க தொடர்ந்தும் உரக்கக் குரல் கொடுத்து ஆவன செய்ய வேண்டும். அதேநேரத்தில் எமது விடுதலைக்காக ஓர் அரசியல் தீர்வை நோக்கி பல முயற்சிகள் எடுக்க வேண்டும். ஒரே நாட்டிற்குள் இரு தேசிய இனங்களாக சகல உரிமைகளுடன் வாழவும், சுய நிர்ணய உரிமையுடன் வடகிழக்கில் தமிழ்-முஸ்லீம் மக்கள் தங்களை ஆளவும் வேண்டுமென்று தமிழ் தலைவர்கள் வாதாடி வந்திருக்கின்றனர். அரசாங்கத்தின் புதிய தலைவர்களும் எமது கோரிக்கையை சரியாகப் புரிந்து கொள்கிறார்களா என்பது பெரும் கேள்வி. ஏனெனில் பல எதிர் கருத்துக்களை அண்மையிலும் கூறி வந்திருக்கின்றனர்.

எமது கடந்த கால அனுபவ அறிவில் அவர்கள் எவ்வளவிற்கு எமது கோரிக்கைகளைப் புரிந்து நல்லெண்ணத்துடன் முயற்சி எடுப்பார்கள் என்பது பெரும் கேள்வி.

இருந்தும் அரசாங்கத்தின் இன்றைய தலைவர்கள் தமது நல்லெண்ணத்திற்கான ஆரம்ப அறிகுறிகளைக் காட்டியிருக்கின்றனர். ஆகையினால் அவர்கள் எடுக்கும் சிறிய முயற்சிகளுக்கு வரவேற்பும் ஒத்துழைப்பும் கொடுப்பது எமது கடமை.

### ஜெனீவா அறிக்கை தொடர்ந்து சர்வதேசத்தின் மட்டத்தில்

இலங்கை போன்று சர்வதேச மட்டத்திலும் ஒவ்வொரு நாடும் சுய நலத்தையே முன் வைத்து செயற்படுகின்றனர். முள்ளிவாய்க்கால் வரை வல்லரசுகள் இலங்கைக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்திருந்தனர். ஆனால் மகிந்தாவின் ஆட்சியில் ஏமாற்றம் கண்டு, இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஒரு சர்வதேச விசாரணைக்கான தீர்மானத்தை கொண்டு வந்தனர். ஜெனீவாவின் அறிக்கை இரு பகுதியினரின் குற்றவாளிகளை இனங்காட்டும். குற்றவாளிகளுக்கு நீதி அடிப்படையில் தண்டனை வழங்கும் அதிகாரமோ, பாதிக்கப்பட்ட தமிழருக்கு நிவாரணம் தேடும் பொறுப்போ இக்குழுவிற்கு இருக்கப் போவது இல்லை. ஆனால் இந்த அறிக்கை சர்வதேச கண்ணோட்டத்திலும், இலங்கையின் வெளிவிவகார ஈடுபாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி, நாம் தொடரும் போராட்டத்திற்கு இன்றியமையாத வலுச் சேர்க்கும் சரித்திர ஆவணமாகும். இவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அடுத்த நடவடிக்கைகளை நாம் தமிழர்கள தான் முன்னெடுக்க வேண்டும். எமது முக்கிய கவனத்திற்கும் கரிசனைக்கு முரியது ஐ.நா. அறிக்கையே. அதை புலம்பெயர்ந்த நாம் - தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் சர்வதேசத்திற்கும், ஐ.நா. வின் தலைமைப் பீடத்திற்கும், சர்வதேச நீதி மன்றங்களுக்கும் எடுத்துச் செல்லவேணடும்.

### அரசாங்கத்தின் உள்நாட்டு சுயாதீன விசாரணை?


மகிந்த அரசாங்கம் இவ்விசாரணையை முழுமையாக எதிர்த்தது. புதிய அரசின் தலைவர்கள் ஏதோ ஒரு வகையில் ஐ.நா. வுடன் ஒத்துழைப்பதாகக் கூறி, அதே நேரத்தில் ஐ.நா. அறிக்கையை தம்மால் ஏற்படுத்தப்படும் உள்நாட்டு சுயாதீன விசாரணைக் குழுவிற்குப் பயன்படுத்தப்படும் என்று கூறுகின்றனர். அப்படியான ஓர் உள்நாட்டு விசாரணைக்கு பாதிக்கப் பட்டவர்களின் சம்மதத்தை பெற வேண்டு

பணியாளன் S.J. இம்மானுவேல்
ஜேர்மனி

மென்று மனித உரிமை அமைப்புகள் கூறி வருகின்றன. இத்தோடு அண்மையில் இலங்கை சென்ற அமெரிக்க அதிகாரி சர்வதேசத்தின் சார்பில் அமெரிக்கா இந்த உள்நாட்டு விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதாகக் கூறி, அவ் ஒத்துழைப்புக்கான ஒரு பிரேரணையை ஐ.நா. வில் இலங்கையுடன் சேர்ந்து கொண்டு வரப்போவதாகவும் கூறியிருக்கின்றார். சர்வதேசத்தினதும் அரசாங்கங்களினதும் சுய நல போக்கை அறிந்தவர்களுக்கு அமெரிக்காவின் போக்கு அதிசயமல்ல.

வல்லரசான அமெரிக்க மற்றும் இந்திய நாடுகளின் நிலைப்பாடோ, சர்வதேசத்தின் கூட்டான முடிவுகளோ, எங்களுக்கு முழுமையாக சாதகமாக சார்பாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. ஆகையால் பாதிக்கப்பட்ட தமிழராகிய நாம் விழிப்பாயிருந்து, விவேகத்துடனும் ஜாக்கிரதையாகவும் இச்சவாலைக் கையாள வேண்டும். அறிக்கை வெளிவந்த பின்னரே நாம் கூடுதலான கருத்துக்களை கூற முடியும்.

தொடர்ச்சி 25ஆம் பக்கம்

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# Why Pay More?

We only paid 1% Commission for listing our home!*




certain area restrictions apply,please contact me for details.Does not include commission for buyer/co-operating brokerage. not intended to induce any existing contracts

## 1% Listing Commission with Complete Professional Service!*

- ✔ Professional Consultation
- ✔ Market Evaluation
- ✔ Home Staging Consultation
- ✔ Showing your home
- ✔ Professional Photography & Virtual Tour
- ✔ Online Advertising
- ✔ Print Advertising
- ✔ MLS® listing
- ✔ Open houses

**Sell your property quickly without paying high real estate fees.**

**All my listings get the full package for free.**



CALL FOR MORE INFORMATION:

**Nishantha 416 417 0763**

Century 21

Nishantha Donsiyambalapitiyage Sales Representative

Innovative Realty Inc. 2250 Markham Road Unit 3 Toronto ON M1B2W4. Office: 416 417 0763

# அன்புடைமை - 25

கடந்த இதழிலும் தாயன்பு பற்றி உரையாடியிருந்தோம். ஒரு குடும்பத்தில் குழந்தை ஒன்றிற்குத் தாயன்பு மட்டும் போதாது என்றும், தந்தையின் அன்பும் மேலும் ஒருவரின் அன்பும் தேவை என்றும் குறிப்பிட்டிருந்தேன். இதனாலேயே பேரன், பேத்தி போன்றோரின் அன்பும் கிடைக்கும் பொழுது குழந்தையின் ஆரோக்கியமான உடல், உள வளர்ச்சி சீராக அமைகின்றது என்று குறிப்பிடலாம். குடும்பத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களின் அன்பும் அந்தக் குழந்தைக்கு ஒரு பெரும் உந்து சக்தியைக் கொடுக்கும். ஒரு குடும்பத்தில் எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் என்பதை விட ஒருவருக்கொருவர் எவ்வளவு அன்பு செலுத்துகின்றார்கள் என்பதே முக்கியமானது. சகோதரர்களுக்கிடையில் அல்லது மற்ற உறுப்பினர்களுக்கிடையில் உள்ள அன்பு பாசம் என்னும் வடிவத்தைப் பெறுகின்றது. பாசம் எவ்வளவு உயர்ந்தது என்பதைப் பல திரைப்படங்கள் ஊடாகவும், நிஜ வாழ்க்கையிலும் உணர்ந்திருக்கின்றோம். அன்புடைமை என்ற சொத்து காதல், தாயன்பு, பாசம் என்று எந்த வடிவத்தை எடுத்தாலும் உயர்வான தொன்றாகவே விளங்குகின்றது என்பதைப் பல்வேறு ஆய்வுகள், உளவள ரீதியிலான கருத்துக்கள், விஞ்ஞான விளக்கங்கள், திருக்குறள், முதுமொழி எனப் பல்வேறு வியடங்களை






ஆதாரமாகக் கொண்டு இந்தத் தொடர்கட்டுரையில் பயணித்திருக்கின்றோம். இந்தத் தொடர் கட்டுரை வாசகர்களாகிய உங்களுக்கு ஏதோ ஒரு வகையில் பயனளித்திருக்கும் என்று நம்புகின்றேன்.

கடவுள் மீதும் நாம் அன்பு செலுத்துகின்றோம். அது பக்தி அல்லது பத்தி என்ற வடிவில் அமைகின்றது. நாயன்மார் வரலாறு முதல் ஆன்மீகவாதிகளின் வரலாறுகள் பக்தி என்ற வடிவில் உள்ள அன்புடைமையைத் தெளிவாக விளக்குகின்றன. ஆண்டவன் மீது கொள்ளும் அளவற்ற பக்தி ஒருவனுக்கு எவ்வளவு உயர்வைக் கொடுக்கின்றது என்பதை நீங்கள் யாவரும் அறிந்திருப்பீர்கள். அளவற்ற பக்தியின் காரணமாக ஒருவரின் செயற்பாடுகள் மூட நம்பிக்கையாக வர்ணிக்கப்படும் சூழ்நிலையும் வந்து விடுகின்றது. மூட நம்பிக்கை மனிதனுக்கு வேண்டாத ஒன்று என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒருவனால் எவ்வாறு மற்றொருவனின் செயற்பாட்டை மூட நம்பிக்கையாக அடையாளம் காட்டப்படுகின்றது என்பதில் நிறைய வேறுபாடு இருக்கின்றது. ஒருவரின் கொள்கைகளை, செயற்பாடுகளை நாம் விரும்பியவாறு மூட நம்பிக்கை என்று முத்திரை குத்திவிட முடியாது. ஒருவரின் சமய நம்பிக்கைகளை விமர்சிக்காது இருத்தலே சிறந்த வழியென்று நான் கருதுகின்றேன். நாங்கள் பிழையாக ஒரு விடயத்தை மூட நம்பிக்கை என்று விமர்சிப்பதால் மற்றவர்களின் மனதைப் புண்படுத்தி விடுகின்றோம். முக்கியமாக ஒரு சமயத்தை அல்லது ஆன்மீக நம்பிக்கையை அல்லது நாஸ்தீக நம்பிக்கையை விமர்சிக்காது இருத்தலே சரியான செயற்பாடு என்பது எனது கருத்து. உங்கள் ஒவ்வொருவரின் கருத்தும் வேறுபட்டு இருக்கலாம். குறைந்த பட்சம் மற்றச் சமயத்தினரை வெறுக்காதும், மனம் நோகும் வண்ணம் கருத்துக் கூறாமலும் இருத்தல் அவசியம் என்று நினைக்கின்றேன்.

சமய நம்பிக்கைகளில் உள்ள செயற்பாடுகள் பற்றி ஆய்வு செய்து கருத்துக் கூறுதல் மிகவும் அவதானமாகச் செய்யப்பட வேண்டிய விடயமாகின்றது. இன்னொரு சமயம் சார்ந்த விடயத்தைப் பற்றிக் கருத்துக் கூறுதல் மிகவும் ஆபத்தானதொன்றாகவே இருக்கும். உலகில் பேச்சுச் சுதந்திரம் என்ற போர்வையில் உணர்ச்சியூட்டும் கருத்துக்களால் ஏற்படும் எதிர் விளைவுகளை நாங்கள் இந்த உலகில் நிறையவே காண்கின்றோம். எல்லா மதத்தையும், மனிதர்களையும், உயிர்களையும் சமமாகக் கருதும் மனப்பாங்கு மிகவும் அரிதான ஆனால் உன்னதமான மனித குணமாக உள்ளது.

அன்புடைமை என்ற சொத்து ஒரு தனிமனித வாழ்விலும், சமுதாயத்திலும் பாரிய உயர்ச்சியைக் கொடுக்க வல்லது. நடைமுறையில் அன்புடைமை கொண்டு வாழ்தல் கடினமானதாக இருந்தாலும் எம்மால் இயன்றளவு அன்புடைமை கொண்டு வாழ வேண்டும். அன்பு என்பது வெறும் உதட்டில் இருக்காது உள்ளத்தில் இருந்து உண்மையாகவும், உறுதியாகவும் வெளிப்பட வேண்டும். புன்னகை, சிரிப்பு போன்றவை நமது வாழ்வில் எவ்வாறு நன்மையளிக்கின்றது என்றும் இந்தத் தொடர்கட்டுரையில் விரிவாக ஆராய்ந்திருக்கின்றோம். என்னால் முடிந்தளவு அன்புடைமை என்ற தலைப்போடு தொடர்புள்ள பல்வேறு விடயங்களைத் தொட்டு சிலவற்றை மேலெழுந்த வாரியாகவும், சிலவற்றை விரிவாகவும் ஆராய்ந்து வந்திருக்கின்றோம். இந்தத் தொடர் கட்டுரை பற்றிய கருத்துக்களை வாசகர்களாகிய உங்களில் சிலர் நேரடியாகவே எனக்குக் குறிப்பிட்டு ஊக்கப்படுத்தியிருக்கின்றீர்கள். உங்களால் முடிந்தளவு இந்தத் தொடர்கட்டுரையில் கூறப்பட்ட கருத்துக்களுக்குச் செயல் வடிவம் கொடுங்கள். அதனால் வரும் பலாபலனைப் பெற்று வாழ்வில் உயர்வு பெறுங்கள். நீங்கள் இந்தத் தொடர் கட்டுரை மூலமாக அறிந்து கொண்ட நல்ல கருத்துக்களை மற்றவர்களுக்கும் தெரிவியுங்கள். அன்பு வாசகர்களாகிய உங்களுக்கும், விளம்பரம் பத்திரிகை நிறுவனத்தினருக்கும், இந்தத் தொடர்கட்டுரைக்கு உசாத்துணையாக விளங்கிய பல நூல்கள், இணையத்தளக் கட்டுரைகள், ஆய்வுகள் போன்றவற்றின் படைப்பாளிகளுக்கும் நன்றி கூறி உங்கள் அனைவருக்காகவும் இறைவனைப் பிரார்த்தித்து இந்தத் தொடர்கட்டுரையை நிறைவு செய்கின்றேன். மீண்டும் இறைவன் அருளால் இன்னுமொரு படைப்புடன் சந்திப்போம்.

நன்றி. வணக்கம்.

முற்றும்.



- அகணி -
authorakani@yahoo.com




21 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
SAMY & SONS
Wholesalers & Retailers
SINCE 1994
வரவேற்பு
விலை
தரம்
தெரிவு
நம்பிக்கை
நாணயம்
இதோ நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த
அதிரடி மலிவு விற்பனை
இம் முறை எதிர்பாராத அளவில் இரண்டு
"யூனிற்"களில் கலக்க இருக்கின்றது.
Textiles, Jewellery, Gift Items & Fancy Goods,
Express Money Transfer, Pawn Broker, Chairs Rental Etc.
ஆகஸ்ட் 14ம் திகதி தொடக்கம் செப்ரம்பர் 14ம் திகதி வரை
எமது வாடிக்கையாளர்கட்கு! ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ!!!
3 for $10.00
குருதா ரொப்
சாறி பிளவுஸ், பிறா
சாறி உள்பாவாடை,
சாரம், ஜட்டி,
பெனியன்
இன்னும் பல.
Each $10.00
டெனிம் பான்ஸ்,
Dress பான்ஸ்,
சேட், குர்தி சேட்,
பட்டுபாவாடை செற்
பான்சி Frocks,
சுரிதார் (All Sizes)
மில்க் குக்கர்
ஸ்ரீமர், தோசைச்சட்டி
பிறஷர் குக்கர்
வாமர், புட்டுக்குடம்
றைஸ் குக்கர்
ரொட்டி மேக்கர்
கடையில் எங்கும்
பெற்றுக்கொள்ள முடியாத
மலிவு விலையில்
புதிய வரவுகளாக
பட்டு, கட் வேக், பிறைடல்
சொவ்ற் சில்க்,
ஹாவ் அன் ஹாவ்
சிக்குயின்,
அன்ட் கொட்டன் சாறிகள்
ஸ்பெஷல் சுரிதார்
பான்ஸி லங்கா சூட்
குருத்தா பிளவுஸ்
குருத்தா சூட்
இன்னும் பல
எங்கும் கண்டிராத மலிவு விலையில்
பான்ஸி பொருட்கள் 50¢ தொடக்கவிலையில்
Blow Out Sale Everything Must Go
OPEN
7 Days
10:00 am-
9:00 pm
Special Price
(Sumith, Preethi, Premier)
$300 மேல்
புடவைகள் கொள்வனவு
செய்யும் முதல் 25
வாடிக்கையாளர்களுக்கு
ஒரு றைஸ் குக்கர்
இலவசம்
Tel: 416-298-1598
Tel: 647-875-5002 Cell: 647-239-SAMY (7269)
1884 B Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com E-mail: samyandsons@gmail.com
$150 மேல்
புடவைகள் கொள்வனவு
செய்யும் முதல் 25
வாடிக்கையாளர்களுக்கு
ஒரு ஹொட் பொக்ஸ்
இலவசம்
அன்றும், இன்றும் என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்

# பெண்களுக்கு யோகாசனம் அவசியம்!

## Yoga for Women

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்று நாம் அனைவரும் அறிவோம். ஆனால் நோயற்ற வாழ்வு பெற பெரும்பாலான பெண்கள் முயற்சி எடுப்பது இல்லை. இன்று மேல் நாடுகளிலுள்ள பெண்கள் தாம் அழகாக, இளமையாக, நோயின்றி வாழ பெரும்பாலும் தேர்ந்தெடுத்து பயிற்சி செய்வதில் முதலிடத்தைத் தேடுவது ‘யோகா’ என்று அழைக்கப்படும் யோகாசனம், மூச்சுப்பயிற்சி, தியானப்பயிற்சி இவைதான்.



மேலும் பெண்களை ‘மலரின் மென்மை’, ‘நிலவின் தன்மை’, ‘பனியின் வெண்மை’, ‘தென்றலின் அருமை’, ‘தேனின் இனிமை’ என்று ஆண்கள் பாடி மகிழ்வர். இத்தனையும் வாழ்வில் நிஜமாக, அத்தனையையும் அடைய யோகாசனம் பெண்களுக்கு பெரிதும் உதவும். இந்த நாகரிக உலகில் பெரும்பாலானோர் கடைகளிலுள்ள பல ஒப்பனைப் பொருட்களைக் (Cosmetics) கொண்டு தற்காலிகமாக தங்களை அழகுபடுத்த முயற்சிக்கின்றனர். போலியான ஆடம்பர வாழ்க்கையால் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என நினைத்து பெண்கள் நடந்து கொள்கின்றனர். அந்த ஒப்பனைப் பொருட்களால் வரும் கவர்ச்சி திடீரென வந்து விரைவில் மறைந்து விடும். நிலையான அழகு என்பது உடல் மற்றும் மனம் சார்ந்த ஆரோக்கியத்தின் வெளிப்பாடு ஆகும். பல வருடங்களுக்கு முன் குடும்பத் தலைவிகள் சமையலறை மற்றும் வீட்டு வேலைகளை தாமாகவே செய்து வந்தார்கள். இப்போதெல்லாம் அவர்கள் செய்யும் வேலைகளில் 80% இயந்திரங்களைக் கொண்டு செய்யப்படுகின்றது. எனவே உடல் உழைப்பு வெகுவாகக் குறைந்து விடுகிறது. அடுத்து வேலைக்குச் செல்லும் பெண்களைப் பொறுத்தவரையிலும் நாள் முழுதும் பெரும்பாலும் ஒரே இடத்தில் அமர்ந்தோ அல்லது நின்று கொண்டோ ஒரே வேலையைத்தான் செய்கின்றனர். இதனால் தற்காலப் பெண்களுக்கு பலவிதமான நோய்கள் வருகின்றன. பெரும் துன்பப்படுகின்றனர். மூட்டுவலி, முதுகுவலி, தோள்வலி, மாதவிலக்கு சீர்கேடுகள், மனரீதியான உளவியல் சார்ந்த பிரச்சினைகள், மலச்சிக்கல், அஜீரணக் கோளாறுகள், ஏன் புற்றுநோய் கூட வருவது சகஜமாகிவிட்டது.

நோய் வந்தபின் அதற்கு நிவாரணம் தேடுவதை விட நோயே வராமல் தடுப்பதுதான்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

சிறந்தது. அதற்கு உதவுவதுதான் யோகா பயற்சி. கஷ்டப்பட்டு வேலை செய்வதால் நோய் தடுக்கும் சக்தி ஏற்படாது. உடலின் உள் உறுப்புக்களான பிட்யூட்டரி, பினியல், தைரொய்டு, பாரா தைரொய்டு, தைமாஸ், கணையம், நுரையீரல், இருதயம் என்பனவற்றை சரியாக இயங்க வைக்கும் சக்தி யோகானம் ஒன்றுக்குதான் உண்டு.

**பெண்களின் உடலமைப்பும் அவற்றின் குறைகளும்**

இயற்கையாகவே மிக மென்மையான உடலை பெண்களுக்கு கடவுளால் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் பல நன்மைகள் இருந்தாலும் சில குறைபாடுகளும் காணப்படுகின்றன. பூப்படையும் காலத்தில் உடலில் அநேக மாறுதல்கள் ஏற்படுகின்றன. உடல் நீண்டு வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. கால்கள் குறுகுவதும், தொடைகளில் சதை அதிகமாவதும், மார்பகங்கள் வளர்ச்சியடைவதும், சுவாசத்தின் கொள்ளளவு சற்று அதிகமாகவதும், எலும்புகள் மிகவும் லேசாகவும் காணப்படுவதால் அவர்களின் உடலில் சமநிலைத் தன்மை குறைகிறது. இவையாவும் குறைகளே. இதோடு மட்டுமல்லாது அவர்கள் தாய்மையடைந்து இருக்கும் நிலையில் இரு உயிர்களுக்காக அவர்கள் சுவாசம் செய்ய வேண்டும். தாயின் சுவாச நிலையில் ஏதேனும் குறைபாடுகள் இருக்குமாயின் அது வளரும் சிசுவையும் பாதிக்கிறது.

எனவே இந்நிலையில் இயல்பாகவே அவர்களுக்கு மனோநிலை பாதிக்கப்பட்டு நிதானம், பொறுமைஉணர்வு யாவும் பாதிப்படைகின்றன. இவ்வாறான குறைகளையெல்லாம் தேகப்பயிற்சி (GYM) செய்வதன் மூலம் தீர்க்க முடியாது. ஆனால் யோகாசனப் பயிற்சியானது மனோ தைரியத்தை வளர்த்து உடலுக்கு அதிக இரத்த ஓட்டத்தையும் அதிகரிக்கச் செய்து பெண்களுக்கு ஏற்படும் குறைபாடுகளை போக்குகிறது.

யோகா செய்வதற்கு வயது தடையில்லை. எந்த வயதிலும் செய்யலாம். காலையிலோ அல்லது மாலையிலோ வெறும் வயிற்றில் தினமும் இருபது நிமிடங்கள் செய்தால் போதும். ஒவ்வொருவரும் தமது வயதிற்கும் உடல் நிலைக்கும் ஏற்றவாறு பழகிக் கொள்ளலாம். இதன் மூலம் பெண்கள் அடையும் பலன்கள் ஏராளம்.

எனவே பெண்களைப் பொறுத்தவரை சராசரியாக 30 வயதைத் தாண்டியவர்கள் ஏதேனும் ஒன்றோ அல்லது அதற்கு மேலகா உடல் மனரீதியான பிரச்சினைகளுக்கு ஆளாக வேண்டியிருப்பது இக்காலத்தில் தவிர்க்க முடியாததாகி விட்டது.

1. உடல் எடை அதிகரித்தல் 2. மாத விலக்குக் கோளாறுகள்
3. அஜீரணக்கோளாறு மற்றும் மலச்சிக்கல் 4. கை, கால் மூட்டு வலிகள்
7. மார்பகக் கட்டிகள், புற்றுநோய்கள் 6. கருச்சிதைவு
8. தலைவலிகள் (குறிப்பாக மைக்ரேன் வகை) 5. மன அழுத்தம்
9. ஆதார உறுப்புகளின் இறக்கம் (Uterus)
10. நரம்புத்தளர்ச்சி, மற்றும் உடல் பலயீனம்

இவற்றுக்கான பொருத்தமான பயிற்சி முறைகளைத் தேர்ந்தெடுத்து அதனை நம்பிக்கையுடனும் முயற்சியுடனும் பயின்று வருவதனால் மிகக் குறுகிய காலத்திலேயே வியக்கத்தக்க பலன்களை எதிர்பார்க்கலாம்.

எனவே எனது அருமை சகோதரிகளே, தாய்மார்களே எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைந்த உங்களின் உடலை யோகாசனங்கள் மூலம் பேணுங்கள். அதில் பேரழகைக் காணுங்கள். பேரின்பத்துடன் இந்த உலக வாழ்வை அனுபவியுங்கள். நோயின்றி நூறாண்டு ஆனந்தமாக வாழுங்கள்.






416.289.2033 after 7:00pm
416.617.5721

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9- 12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# மதுரை...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

பகுதிகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட உறை கொண்ட கிணறுகள், இரும்பால் ஆன ஆயுதங்கள், ரோமானிய மட்பாண்டங்கள், பெரிய கூரை ஓடுகள், முத்து மணிகள், கண்ணாடி மற்றும் பல வகையான கல்மணிகள், சங்கு வளையல்கள், சுடுமண் பொம்மைகள், அம்மி, குழவி, செப்புப் பொருட்கள் பளிங்கு, அகேட் மணிகள் தந்தத்தால் செய்யப்பட்ட தாயக் கட்டைகள், சூது பவளத்தால் ஆன முத்துமணி மாலை, காதுகளில் அணியும் பளிங்கால் ஆன பாம்படம், கையில் அணியும் சித்திரம் வரையப்பட்ட சங்கு வளையல் பச்சை, மஞ்சள், நீல நிறக் கண்ணாடி மணிகள் என ஏராளமான அரிய பொருட்கள் கிடைத்துள்ளன.

தற்போது பாத்திரங்களில் பெயர் வடிப்பது போல, சங்க காலத்திலும் மண்பாண்டங் களில் எழுத்துகளைப் பொறிக்கும் பழக்கம் இருந்துள்ளது. கீழடி அகழாய் வில் கிடைத்துள்ள பானை ஓட்டில் பிராமி எழுத்துகளில் 'ஆதன்', 'இயனன்', 'டிசன்' போன்ற வார்த்தைகள் பொறிக்கப் பட்டுள்ளன. இந்தப் பிராமி எழுத்துக்கள் கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவை. பேச்சு வடிவில் இருந்த தமிழை எழுத்து வடிவில் எழுதப் பயன்பட்ட தொன்மை யான எழுத்து வடிவம் தமிழ் பிராமி. இது தொடர்பான 93 கல்வெட்டுகள் தமிழகத் தில் 30 இடங்களில் கிடைத்துள்ளன. இதில் பெரும்பாலும் பாண்டிய நாட்டில் மட்டுமே 20 இடங்களில் 64 கல்வெட்டுகள் கிடைத்துள்ளது. பாண்டிய நாட்டுக்கு உட்பட்ட மாங்குளம், எடக்கல், கீழவளவு, யானைமலை, வரிச்சியூர், திருப்பரங் குன்றம், அழகர்மலை, குன்றக்குடி, முத்துப்பட்டி, விக்கிரமங்கலம், திருவாதவூர், அரிட்டாபட்டி உள்ளிட்ட 20 இடங்களிலும் தமிழ் பிராமி கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இப்படி ஏற்கெனவே வெளியாகியுள்ள ஆய்வு முடிவுகள் அடிப்படையில் இந்த மண்பாண்டங்கள் சங்க காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கும் எனக் கணிக்கிறோம். வரலாற்றின் தொடக்கக் காலத்திய செங்கல் கட்டிடச் சான்றுகள் கிடைப்பது மிகவும் அரிது. ஆனால், இங்கு அதிக அளவில் செங்கல் கட்டிடங்கள் உள்ளது ஆச்சரியமளிக்கிறது. குறிப்பாக, தென் தமிழக அகழ்வாய்வுகளில் கிடைக்கும் வெள்ளை வர்ணம் தீட்டப்பட்ட கருப்பு, சிவப்பு மண்பாண்டங்களும் இங்கு அதிகம் கிடைத்துள்ளன. இங்கு கிடைத்துள்ள செங்கற்கள் 38 செமீ நீளமும் 27 செமீ அகலமும் 7 செமீ உயரமும் கொண்டவை யாக இருக்கின்றன. ஏற்கெனவே காவிரிப் பூம்பட்டினம், உறையூர், அரிக்கமேடு, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் மேற் கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் இது போன்ற செங்கற்கள் கிடைத்துள்ளன. அந்த ஆய்வுகள் முடிவுகளில் அந்தச் செங்கற்கள் சங்க காலத்தைச் சேர்ந்தவை எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும், சங்ககால மக்கள் பயன்படுத்திய அணிகலன்களான சுடுமணிகள், பளிங் கால் ஆன கழுத்து மணிகள் மற்றும் காது மணிகளும் கீழடியில் கிடைத்துள்ளன. இங்குக் கண்டெடுக்கப் பட்ட தந்தத்தால் ஆன தாயக்கட்டைகள் சங்க கால மகளிர் விளையாடியவை. இவை எல்லாம் சேர்ந்து, இப்பகுதியில் கிடைத்துள்ள சான்றுகள் அனைத்தும் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என கணிக்கப்பட்டுள்ளது.



ஈட்டி முனைகள்



தந்தத்தாலான தாயக்கட்டை



மாலையாகக் கோக்கப்படுவதற்காக நடுவில் துவாரமிடப்பட்டுள்ள முத்து



செங்கல் சுவர்

பொருட்கள் 2200 ஆண்டுகளுக்கு முன்பானவை என்றால், அதற்கும் முன்பு இருந்தே, அதாவது 2500களிலேயே கீழடியில் நகர நாகரிகம் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மேலும் இங்கு கிடைத்துள்ள கருப்புச் சிவப்பு மண்பாண்ட வகை, வெள்ளை வண்ணம் பூசப்பட்ட கருப்புச் சிவப்பு மண்பாண்ட வகை மற்றும் ரசட் கலவை பூசப்பட்ட மண்பாண்ட வகை ஆகியவை வரலாற்றுத் தொடக்கக் காலத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. எனவே, இப்பகுதியில் மக்கள் வாழ்ந்த காலகட்டம் இன்னும் பல நூற்றாண்டுகள் பின்னால் செல்ல வாய்ப்புள்ளது.

ஒரு அடி முதல் 10 செ.மீ. வரையிலான ஈட்டி முனைகள் கீழடி அகழாய்வில் கிடைத்துள்ளன. இவை அக்கால மக்களால் தற்காப்புக்காகவும் வேட்டை யாடவும் பயன்படுத்தப்பட்டவை. இதுவரை, தமிழகத்தில் கொங்கு பகுதியில் மட்டுமே கிடைத்த ரசட் கலவை பூசப்பட்ட மண்பாண்டங்களும் இங்கு கிடைத் துள்ளது. இதன்மூலம் கொங்கு பகுதி யோடு இப்பகுதி மக்களுக்கு வாணிபத் தொடர்பு இருந்துள்ளது தெரிய வருகிறது.

கீழடியில் கண்டெடுக்கப்பட்ட ரோமானிய மட்பாண்ட துண்டுகள் வணிகர்களால் கொண்டு வரப்பட்ட ரூலட் மற்றும் அரிட்டைன் வகையைச் சேர்ந்தவை யாகவும், முத்துமணி மாலைகள் ஆப்கானிஸ்தானில் கிடைக்கும் மூலப் பொருளைக் கொண்டு செய்யப்படும் சூது பவளத்தால் ஆனவையாகவும் உள்ளன. இதனடிப்படையில் இப்பகுதியினருக்கும் ரோமானியர்கள் மற்றும் ஆப்கானிஸ்தானி யர்களுக்கும் இடையே வணிகத் தொடர்பு இருந்ததும் உறுதியாகிறது. இதன்மூலம், இப்பகுதி பழங்காலத்தில் ஒரு வணிக நகரமாக இருந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. மேலும், பாண்டியர்களின் பழைய தலைநகர் எனச் சொல்லப்படும் மணலூர் கண்மாய்க்கரை மேட்டில்தான், தற்போது அகழாய்வு நடைபெறும் தென்னந்தோப்பு அமைந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் இதுவரை நடந்துள்ள அகழாய்வுகளில் முழுமையான குடி யிருப்புப் பகுதி கிடைத்திருப்பது இதுதான் முதல்முறை. வரிசைகிரமமாக இருக்கும் வீடுகள், கனமான தட்டோடுகள் பதிக்கப்பட்ட தரைத்தளம், மேற்கூரைக்கு ஆணி அறையப்பட்ட செம்மண் ஓடுகள், வீடுகளை ஒட்டி பெரும் அகலத்தில் நீண்ட சுவர்கள், தண்ணீர் வழிந்தோட வடிகால்கள், உரையிடப்பட்ட கிணறு, பெண்கள் அணியும் அணிகலன்கள், இரும்பு ஆயுதங்கள், தாயக்கட்டை போன்ற விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றைப் பார்க்கும்போது இங்கு வாழ்ந்தவர்கள் நாகரிகத்தில் மிக முன்னேறியிருந்ததும் தெரிய வருகிறது. இப்பகுதியில் அனுப்பானடி, பரவை, கோவலன் பொட்டல், தி.கல்லுபட்டி, ராமேசுவரம் அழகன்குளம் போன்ற இடங்களில் சிறிய அளவில் ஏற்கெனவே அகழாய்வுகள் நடைபெற்றுள்ளன. தமிழகத் தொல்லியல் துறையினர் மேற் கொண்ட ஆய்வில், அழகன்குளம் சங்க காலப் பாண்டியர் காலத்தில் துறைமுகப் பட்டினமாக இருந்ததற்கான சான்றாதாரங் கள் கிடைத்துள்ளன. அந்த அகழாய்வில் பண்டைய ரோமானிய நாட்டின் உயர்ரக ரவுலட், ஹரிட்டைன் மண்பாண்டங்களும் கிடைத்தன. அதுபோல், மதுரையிலிருந்து ராமேசுவரம் அழகன்குளம் துறைமுகப் பட்டினத்துக்கு, சங்ககாலத்தில் வைகை நதியின் வலது கரையில், வணிகப் பெருவழிப் பாதை இருந்துள்ளதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வணிகப்பாதை கீழடி, திருப்புவனம் வழியா-கச் சென்றிருக்க வேண்டும் என்பது இந்த ஆய்வு மூலம் தெரிய வருகிறது.

மேலை நாடுகளுக்குக் கடலில் பிரயாணம் செய்யும் மதுரை வணிகர்கள் இந்த ஊரின் வழியாகச் சென்றிருக்கலாம். இங்கு கிடைத்துள்ள தடயங்கள், இந்த ஊரும் வணிக நகரமாக இருந்திருக்க வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கிறது. ஏற்கெனவே இந்தப் பகுதியில் விவசாயி கள் ந ி ல த ் தை உ ழு ம ்

தொடர்ச்சி 26ஆம் பக்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

mhc

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும் UFO's & Aliens

## (சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்)

# அபூர்வ விமானங்களும் அப்போலோ பயணங்களும்

சென்ற தடவை அப்போலே பயணங்களின் வெற்றியின் அடிப்படை எப்படி இருந்திருக்கும் எனப் பார்த்தோம். இம்முறையில் இருந்து அப்பயணங்களை இன்னமும் ஆழமாகப் பார்ப்போம்.

"நான் சொல்லுகிறேன் வேறு விண்கலங்களும் அங்கு இருந்தன!".

இது என்ன மொட்டையான கூற்றாக இருக்கிறதே என எண்ணுகின்றீர்களா? இக்கூற்றின் கீழ் ஆச்சரியமான பல விடயங்கள் உள்ளன. அந்நியர்களும் அபூர்வ விமானங்களும் என்ற பகுதியில் அவற்றினை பற்றிக் கூறுவது சரியானதாக இருக்கும் என்ற நினைவுடன், ஒரு காலத்தில் மனித இனத்தை பரபரப்படைய வைத்த சம்பவத்தின் பின்னால் உள்ள இரகசியங்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகிறேன். அதற்கு முன்னராகச் சில பீடிகையான சமாச்சாரங் களை மீண்டும் பகிர்ந்து கொள்கிறேன். ஒருவேளை உங்களுக்கும் சில விடயங்கள் தெரிந்திருந்தால் அவற்றையும் மீட்டுப் பாருங்கள் இன்னமும் பல தெளிவுகள் ஏற்படலாம்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இருபதாம் நூற்றாண்டின் பெரும் பகுதியான காலப்பகுதிகளில் இரண்டு வல்லரசுகள் தம்முள் பல துறைகளிலும் போட்டி போட்டுக் கொண்டு நின்றதனை நீங்கள் அறிவீர்கள். ஐக்கிய அமெரிக்கக் குடியரசும், சோவியத் ஒன்றியமும்தான் அவையிரண்டும் என்பது நான் சொல்லத் தேவையில்லை. ஆனாலும் அவற்றினை ஞாபகப்படுத்துகின்றேன். இந்த இரண்டு வல்லரசுகளும் போட்டி போட்டுக் கொண்டு விண்வெளியிலும் தமது ஆதிக்க வன்மையைக் காட்டப் பெரும் பிரயத்தனம் பண்ணின. அதன் ஒரு அங்கம் சந்திரப் பயணமாகும். அதிலும் சந்திரனுக்கு மனிதரை அனுப்பும் முயற்சியே பிரதான-மான தாகும். ஆரம்ப முயற்சிகளில் அமெரிக்கா அவ்வளவாக வெற்றிகளைப் பெறாத போதிலும் (ஆரம்பத்தில் எல்லா முயற்சிகளுமே தோல்விதான்) இறுதியில் சந்திரத் தரையில் அமெரிக்க விண்வெளி வீரர்களே முதன் முதலில் காலடி எடுத்து வைத்தார்கள் என்பது நாமெல்லோரும் அறிந்ததே. எப்படி அது நடந்திருக்கலாம் என்று சிலர் கூறிய விளக்கங்களும் இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

மேலதிகமாக ஒரு தகவல். இந்த சந்திரப் பயணம் என்பதனை நம்பாதவர்கள் ஒரு சிலர் உள்ளனர். இது அமெரிக்காவின் திட்டமிட்ட நாடகம் எனச் சிலர் கருதுகின்றார்கள். ஒரு கருத்துக் கணிப்பின் படி இருபது வீதமான அமெரிக்கர்களே இதனை நம்பவில்லை என்கின்றார்கள். அது உண்மைதானா என்பது அல்ல இப்போதைய நமது நோக்கம். பல விஞ்ஞானிகளும் மக்களும் உண்மை என்று நம்புகின்ற சந்திரப் பயணத்தினையும் சந்திரனில் மனிதர்கள் சஞ்சரித்ததினையும் உண்மை என்றே நானும் நம்புகின்றேன். அதன் வழியில் எனது பார்வை விரிவடைகிறது. அதெல்லாம் சரி போட்டி போட்ட சோவியத் ஒன்றியம் அமெரிக்கர்களின் சந்திரத் தரையிறங்கலை, கால் பதித்து நடந்து சாதனை காட்டியதைப் பற்றி மறுப்பாக மூச்சுக் கூட விடவில்லை. ஆகையினால் நாங்கள் மனிதர்களின் அம்புலித் தரையில் இறங்கிய சாதனையை ஏற்றுக் கொள்ளலாம்.

இவையொருபுறமிருக்க, வேற்றுக்கிரக மனிதர்களின் உதவியால்தான் அமெரிக்கர்கள் அம்புலிக்குப் போனார்கள் என்றும் ஒரு கதை பரவலாக இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் பற்றிய ஆய்வாளர்களிடையே உள்ளது என்பதனையும் இப்போது நீங்கள் அறிவீர்கள் அல்லவா!

எது எப்படியிருப்பினும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தி ஒன்பதாம் ஆண்டு நீல் ஆம்ஸ்ரோங் முதன் முதலில் சந்திரத் தரையில் காலடி வைத்ததை பூமியின் மனிதர்கள் அனைவருமே (சுமாராக




தொள்ளாயிரம் மில்லியன் மக்கள் என்கின்றார்கள், உங்களையும் என்னையும் சேர்த்து. இல்லை என்கின்றீர்களா?) ஒருவித பரவசத்துடன் வானொலிகளின் ஊடாக கேட்டு மகிழ்ந்ததை பலர் ஞாபகப்படுத்திப் பார்க்கலாம், அல்லவா! அதனை மனித குலத்தின் சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சம்பவம் என நான் சொன்னால் நீங்கள் மறுக்கவா போகின்றீர்கள், என்ன! அதெல்லாம் பெரிய சம்பவம்தான்! இப்ப எங்களது விடயத்திற்கு வருவோம். இந்த அப்போலோப் பயணங்களுடன் வேற்றுக் கிரகிகளின் அபூர்வ விமானங்களை பெருமளவில் சம்பந்தப்படுகின்றார்கள். அது என்ன அப்போலோ பயணம் என நீங்கள் கேட்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். சந்திரனுக்குச் சென்ற அமெரிக்க விண்கலங்களின் பெயர் அப்போலோ என்பது உலகம் முழுவதுக்குமே தெரிந்த பெயராச்சுதே. உங்களுக்கும் மறந்து போயிராதுதானே!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தி ஒன்பதாம் ஆண்டில் இருந்து ஆயிரத்துத் தொள்ளாயிரத்தி எழுபத்தி இரண்டாம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் அமெரிக்கர்கள் அப்போலோ 11இல் இருந்து அப்போலோ 17வரை சந்திரனுக்கு அனுப்பி வெற்றி கண்டார்கள். அதில் அப்போலோ 13 மாத்திரம் ஏதோ தொழில் நுட்பக் கோளாறு காரணமாக விபத்துக்குள்ளாக, அதில் பயணித்த மூன்று விண்வெளி வீரர்களும் பூமிக்குத் திரும்பிவிட்டார்கள். ஒருவேளை அப்போலோ 13இல் கூடத் தொழில் நுட்பக் கோளாறினை ஏற்படுத்தி அதனைப் புவியிற்குத் திருப்பி அனுப்பியது வேற்றுக் கிரகவாசிகளின் கைங்கரியமாக இருக்குமோ? என எண்ணத் தோன்றுகின்றது எனக் கூறுபவர்கள் பலர் உள்ளனர். அப்படியிருக்கும் என்று நீங்கள் எண்ணு கின்றீர்களா? இல்லை, அப்படியிருக்காது எனக் கூறுவோர்கள் சிலரும் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஏனெனில் வேற்றுக்கிரக மனிதர்கள் எனச் சிலர் இருந்து அவர்களின் விமானங்கள்தான் இந்த இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் எனவும் இருப்பின் அவர்கள் அறிவியலில் எவ்வளவு முன்னேறிய மனிதர்களாக அல்லது உயிரினங்களாக இருப்பார்கள்! அப்படியாக முன்னேறிய உயிரினங்கள் எனில் எச்சரிப்பதற்காவும் கூட இன்னொரு உயிரைக் கொல்லக் கூடியதான செயற்பாடுகளைச் செய்ய மாட்டார்கள். எனவே அப்போலோ 13இன் விபத்துக்கு காரணர்களாக வேற்றுக் கிரக மனிதர்கள் (உண்மையில் இருப்பார்களாயின்) இருந்திருக்கமாட்டார்கள் என்பது எனது எண்ணம். அது சரி என்று நீங்களும் கூறுகின்றீர்கள்தானே! எப்படியாயினும் அப்போலோ வீரர்கள் அந்நியர்களின் அபூர்வ விமானங்களைக் கண்டிருக்கின்றார்கள் என இவ்வாய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

வெற்றி கண்டிருந்த சந்திரப் பயணங்களின் போது சந்திரனைப் பற்றிய ஏராளமான விடயங்கள் அறியப்பட்டன. சந்திரனின் மண், சந்திரனின் கற்கள் போன்றவை பூமிக்கு எடுத்து வரப்பட்டு ஆய்வுகள் செய்யப்பட்டன. சந்திரனில் காலடி வைத்துத் துள்ளல் நடை பயின்ற விண்வெளி வீரர்கள் பூமியில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு பல செய்திகளையும் பரிமாறிக் கொண்டார்கள். எவ்வளவோ ஆச்சரியப்படத்தக்கதான விடயங்களை விஞ்ஞானிகள் நடத்தி முடித்தார்கள், அல்லவா! சந்திரனில் இருந்து கொண்டு வரப்பட்ட கற்களை அருங்காட்சியகங்களில் வைத்துப் பொது மக்களுக்குக் காட்டினார்கள், சந்திர மண்ணின் மாதிரிகளைக் காட்டினார்கள், சந்திரனுக்குச் சென்றுவந்த விண்வெளி வீரர்களின் பேட்டிகளை பத்திரிகைகள், வானொலிகள் போன்ற ஊடகங்களில் வெளிக் கொண்டு வந்தார்கள். இன்னமும் சந்திரத் தரையில் கால் பதித்து நடந்த விண்வெளி வீரர்களுக்கும், பூமியில் இருந்த நாசா விண்வெளி ஆய்வுகூடக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள், உரையாடல்களைக் கூடப் பொது மக்களுக்கு அவ்வப்போது நேரடியாக ஒலிபரப்பவும் செய்தார்கள். மேலெழுந்த வாரியாகப் பார்க்கையில் சந்திரப் பயணம் பற்றிய எதுவுமே பொதுமக்களுக்கு மறைக்கப்படவில்லை எனலாம்.

அமெரிக்க விஞ்ஞானிகள், நாசாவினர், தங்களது விண்கலங்கள் சென்ற பாதை, திரும்பிய வழி, சந்திரனில் நின்ற காலம், இன்னமும் என்னென்ன தொழில் நுட்பங்கள் பாவிக்கப்பட்டன, விண்வெளிவீரர்களின்

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 25ஆம் பக்கம்



*Quality Services... Every Time... On Time.*

**Business For Sale**



Banquet Hall
For Sale in Scarborough
12,350 Sq Ft

**Assignment Sale**



1000-1199 Sq.f.
Lawrence/Birchmount Rd
Bedrooms:3 Washrooms:2

**Exculcive Sale**



Mississauga
Bedrooms:4 Washrooms:4
2450 Sq.ft

**Space For Lease**



**Ajax (401& Westney)**
1250 to 2500 sq.fe
$15 /sq.f + $5 TMI
Use for Day Care, Medical, Resturant & Retails

**Your Home May Be Worth More Than You Think !**
**Call Me Today for FREE EVALUATION!**

HomeLife /Future Realty Inc.,
Brokerage, Independently Owned And Operated
205-7 Eastvale Dr., Markham Ont. L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
sthana@buysellurhome.ca

Suresh Thanapalasingam ITIL, CAPM
Realtor
Dir: 416.859.0793





Ajax | Markham | Scarborough

Classes in Various Genres:

**Bharathanatyam**
**Bollywood**
**Gaana**

irudaya DANCE COMPANY

"NATTIYAKALAMANI"

**Nivatha Moothathamby**
**Keerthana Arulanandarajah**

- Arangetra Students of Sri Vasu Sinnarasa (Director of Sathangai Narthanalayam)
- Graduates of Annamalai University Canada Campus
- University Dance Team Choreographers
- Performed on numerous platforms in Ontario



For further questions please contact us at:
(647) 967-1994 (416) 319-0164

**ASVITHA CAKES & BRIDAL**

அனைத்து வைபவங்களுக்குமான எல்லா வகையான Cake மற்றும் மணமகள் அலங்காரங்களும் செய்து தரப்படும்

- RICH CAKE
- WEDDING CAKE
- EGG LESS CAKE




Contact: 416-986-9001 / 289-660-1972
pathma.kandasamy@gmail.com

# Forward Condo. In DownTown Toronto

## Largest Builder in Canada

## "Concord"




- Only 30 Floors
- Amazing Amenities
- Walking to :

1. Sky Dome
2. CN Tower
3. Newly Built Aquarium
4. Harbour Front
5. National Super Market
6. Future Prestigious Mall

VIP Package For
HomeLife /GTA Clients
(Exclusive Brokerage)

For More Details & Appointments

VISIT CONVENIENTLY LOCATED OFFICE IN WELL KNOWN
GTA SQUARE MALL IN TORONTO

**HomeLife/GTA Realty Inc.**Brokerage*

**Contact: 416.321.6969**

5215 Finch Ave., E., #203, Toronto, ON

*Independently Owned & Operated

# JRS AUTO TECH

OPEN 24 HOURS
7 DAYS A WEEK

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

VISA

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash





SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

**TIRE SPECIALS**
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

**FREE OIL CHANGE WITH RUST PROOFING**
$99 Car
$120 SUV

**BRAKE JOB**
STARTING FROM
$159

**WATER PUMP TIMING BELT & LABOR**
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

**TRANSMISSION FLUSH**
*Starting From...*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

**ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS**
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

CALL SUBAS DIRECT → 416-206-9489

Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

# தமிழக அரசியலும் ஆபாசப் பேச்சுகளும் கறைபடிந்த வாய்கள்

தமிழக முதல்வர் ஜெயலலிதா – இந்தியப் பிரதமர் மோடி சந்திப்பு குறித்து, காங்கிரஸ் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் இளங்கோவனின் தெரிவித்த கருத்து காரணமாகத் தமிழக அரசியல் களம் பத்து தினங்கள் அல்லோலகல்லோலப்பட்டது. ஜெயலலிதாவின் வேண்டுகோளுக்குப் பிறகுதான் தணிந்தது. இளங்கோவன் பேச்சு ஆபாசமானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தமிழக அரசியல் களத்திற்கு இது புதிதல்ல. பெரியார், காமராஜர் காலகட்ட சில முக்கிய தலைவர்கள் தவிர அனைத்து தமிழக அரசியல் தலைவர்களும் இவ்வகையில் 'கறைபடிந்த வாயை' உடையவர்கள்தான். வரலாற்றின் பக்கங்களில் இருந்து இங்கே சில உதாரணங்கள்.

### அன்னிப்பெசண்ட் குறித்து டி.எம்.நாயர்:



திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவர் டி.எம்.நாயர். இவர் அன்னி பெசன்ட் அம்மையார் குறித்து, இரட்டை அர்த்தத்தில், 'a woman of deep penetration> easy conception and quick delivery...' என்று குறிப்பிட்டுள்ளார். "டி.எம்.நாயர் இதுபோல் குறிப்பிட்டுள்ளது அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது'' என பேராசிரியரும் அரசியல் விமர்சகருமான அ. மார்க்ஸ் தன் முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார். மேலும், "இவ்வகையில் பார்த்தால் இதுபோல் பெண்கள் குறித்து ஆபாசமாகப் பேசாத திராவிட இயக்கத்தவர்களைத் தேடிப் பார்த்தால் பெரியார் மட்டுமே எஞ்சுவார் போலிருக்கிறது'' எனவும் குறிப்பிட்டுள்ளார். திராவிட இயக்கத்தின் தோற்றத்துக்குப் பிறகுதான், பெண்களையும் ஆண் – பெண் உறவுகளையும் குறித்து அவதூறாகப் பேசும் போக்கு உருவானது என்று சில வரலாற்று ஆய்வாளர்கள் சொல்லி வருவதை இது



உறுதிப்படுத்துகிறது.

அக்கால நீதிக்கட்சி தலைவர்களில் முக்கியமானவர் பங்காரு தாயம்மாள். இவர் 'திராவிடன்' பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார். பெண் அரசியலில் ஈடுபட்டாலே அவதூறுக்கு உள்ளாவர் என்ற இக்கால போக்குக்கு மாறாக, இவர் குறித்து அக்காலத்தில் யாரும் எதுவும் பேசியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதுபோல் எம்.ஜி.ஆர். – ஜானகி உறவு குறித்து அவதூறு பேச்சுகள் வெளிவந்த ஆரம்ப காலத்தில், அப்படிப் பேசிய காங்கிரஸ்காரர்களை அழைத்து, "அது அவர்கள் தனிப்பட்ட விவகாரம். அதுபற்றி பொதுவெளியில் பேசுவது நியாயமல்ல'' என காமராஜர் கண்டித்துள்ளார் என்பதும் நினைவுகூரத்தக்கது.

பெரியார் அக்கால மேடைகளில் கெட்ட வார்த்தைகளுடன் ஆவேசமாக பேசுவதை இன்றும் இணையங்களில் கிடைக்கும் அவரது உரைகளில் கேட்கலாம். ஆனால், அவை எந்த தனிப்பட்ட ஒருவரையும் குறித்தன அல்ல. யாரை நோக்கியும் வீசப்பட்டதும் அல்ல. பழங்கால இலக்கிய உதாரணங்களுடன் நம்மை இப்படி குறிப்பிட்டுள்ளார்கள் என்று சுட்டிக்காட்டல்கள்தான் அவை எல்லாம்.

இப்படி பெரியார், காமராஜர் உட்பட அக்காலத் தலைவர்கள் கட்டிக்காத்த அரசியல் நாகரிகத்தை முதன்முதலில் பொதுவெளியில் உடைத்தவர் திமுகவை தோற்றுவித்த சி.என். அண்ணாத்துரைதான்.

### நேரு – ஸ்ரீமாவோ குறித்து அண்ணா:

இந்தியப் பிரதமர் பண்டிதர் நேரு - இலங்கை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா சந்தித்தது குறித்து, 'தம்பி, பண்டிதரோ மனைவியை இழந்தவர் பண்டாரநாயகாவோ கணவரை இழந்தவர். இருவரும் சந்திக்கிறார்களாம் தனியாக அறையில், ஒரு மணி நேரம் பேசுகிறார்களாம். என்ன பேசியிருப்பார்கள், என்ன செய்திருப்பார்கள் தம்பி'' என்று எழுதியுள்ளார் அண்ணா. அக்காலத்திலேயே காங்கிரஸ்காரர்களும் ஆபாசப் பேச்சுகளைத் தொடங்கிவிட்டார்கள். அன்றைய முன்னணி தமிழ் சினிமா நடிகை பானுமதிக்கும் அண்ணாவுக்கும் தொடர்பு என்று காங்கிரஸ் அவதூறு பரப்பியது. ஆனால், இதற்கு பதில் சொன்ன அண்ணா ஒருபடி மேலே சென்று, 'நான் ஒன்றும் முற்றும் துறந்த முனிவனுமல்ல, அவள் ஒன்றும் படிதாண்டா பத்தினியுமல்ல!'' என்றார்.

### டி.என். அனந்தநாயகி குறித்து கருணாநிதி:

சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது, அப்போது எதிர்கட்சி துணைத் தலைவரும் காங்கிரஸ் உறுப்பினருமாக இருந்த டி.என். அனந்தநாயகிக்கும் அன்றைய தமிழக முதல்வர் மு.கருணாநிதிக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் பிரசித்தி பெற்றது. 1967ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டசபை தேர்தலில் திமுக ஆட்சியைக் கைப்பற்றியது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி தமிழக முதல்வரானார். இந்நிலையில், 2 ஆண்டுகள் சென்று 1969ஆம் வருடம் சட்டசபையில் டி.என்.அனந்தநாயகி, "ஓட்டுப் போட்டு, உங்களை இந்த அரிய மாபெரும் மதிப்பிற்குரிய முதல்வர் என்னும் சிம்மாசனத்தில் அமரவைத்து அழகு பார்த்த பொதுமக்களுக்கு, இந்த 2 ஆண்டு காலங்களில் நீங்கள் என்ன நன்மைகளைச் செய்திருக்கிறீர்கள்?'' என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த முதல்வர் மு. கருணாநிதி, "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், வாக்களித்து எங்களை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்திட்ட பொதுமக்களுக்கு நாங்கள் என்னென்ன நல்ல காரியங்களைச் செய்து இருக்கிறோம் என்று கேட்கிறார். அன்னார் எழுப்பியுள்ள கேள்விக்கு நான் இங்கே தருகின்ற பதில் இதுதான். நான் அளிக்கும் பதிலை யாரும் தவறான பொருள்கொண்டு படித்திட வேண்டாம் என்று முன்கூட்டியே இந்தப் பேரவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன். 'நாடாவை அவிழ்த்து, பின் பாவாடையைத் தூக்கி அங்கே பார்த்தால் உங்களுக்கே தெரியும்.' இதுதான் நான் இப்போதைக்கு உங்களுக்குத் தர உள்ள பதிலாகும்'' என்றார். இதனைத் தொடர்ந்து எதிர் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, ஒருசேர பேரவைத்தலைவர் அவர்களைப் பார்த்து, "உறுப்பினரின் உரிமையையும் கண்ணியத்திற்கும் கௌரவத்திற்கும் இழுக்குத் தரும் விதமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள், எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களை அவமானப்படுத்தி விட்டார். எனவே, அவரது



**- சிவதாணு -**

பேச்சை அவைக்குறிப்பில் இருந்து நீக்குவதோடு முதல்வர் பேசிய பேச்சுக்காக அவர்மீது உரிமைக்குழு நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டுகிறோம்'' என்று கோஷமிட்டார்கள்.

இதனையடுத்து விளக்கமளித்த கருணாநிதி, "இதுபோன்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்றுதான், எனது பதிலைப் பதிவு செய்வதற்கு முன்னமே தெரிவித்திருந்தேன், இந்தக் கேள்விக்கு நான் அளிக்க இருக்கும் பதிலை யாரும் தவறாகப் பொருள்கொள்ள வேண்டாம் என்று. அரசின் ஆவணங்களைக் கொண்ட கோப்பு, அதில் உள்ள ஆவணங்கள் அடங்கிய காகிதங்கள் கட்டி வைக்கப்பட்டிருக்கும். அதன்மீது சிவப்பு வண்ண இரண்டு பக்க உரைக்குப் பாவாடை என்றும் ஒரு பொருள் உண்டு. அதைக் கட்டப் பயன்படுத்தும் கயிறுக்கு நாடா என்றும் பெயர் உண்டு. இது ஒன்றும் இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் அறியாததல்ல'' என்றார். இப்படி திமுக தலைவர் கருணாநிதி புரிந்துள்ள வார்த்தை ஜாலங்கள் கடந்த 50

**தொடர்ச்சி 25ஆம் பக்கம்**






# தமிழக...

ஆண்டுகள் தமிழக வரலாற்றில் நிறைய உள்ளன. எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு, 1989இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு தொடங்கி ராஜீவ்காந்தி உயிரோடு இருக்கும் காலம்வரை, ஜெயலலிதாவைப் பற்றிச் சொல்லும் போதெல்லாம், 'ராஜீவ் காந்தியின் சினேகிதி ஜெயலலிதா'' என்றுதான் குறிப்பிடுவார்.

## எம்.ஜி.ஆர். பற்றி திமுக பேச்சாளர்கள்:

கருணாநிதியின் வார்த்தை ஜால விளையாட்டுகள் ஒளிவுமறைவுடன் இருக்கும் என்றால், நேரடியாக பொதுமேடைகளில் ஆபாசமாகப் பேசும் தீப்பொறி ஆறுமுகம், வெற்றிகொண்டான்,




வண்ணை சிவா என ஒரு பேச்சாளர் படையே திமுக வைத்திருந்தது. அதிமுககாரர்களும் இதற்கு சளைத்தவர்கள் அல்ல. திமுகவில் இருந்து உதயமானதுதானே அதிமுக, வேறு எப்படி இருந்துவிடப் போகிறது? கனிமொழி – அ. ராசா குறித்து, மிக ஆபாசமாக, கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழக மேடைகளில், அதிமுக பேச்சாளர்கள் பேசியுள்ளார்கள். தற்போது இளங்கோவனுக்கு பதிலளிக்கும் பேச்சுகளிலும் அவரது குடும்பப் பெண்களைக் குறித்து அபாசமாகப் பேசிதான் அதிமுக்காரர்கள் பழி தீர்த்துக்கொள்கிறார்கள்.

தமிழக அரசியலில் பெண் என்பதாலேயே மிகவும் ஆபாசமாக பேசப்பட்டவர்கள் பட்டியல் சத்தியவாணி முத்து, இந்திரா காந்தி, சுப்புலட்சுமி ஜகதீசன், வென்னிற ஆடை நிர்மலா, ஜெயலலிதா என மிக நீளமானது. மதுரையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உருவான கலவரத்தில், இந்திரா காந்தி தாக்கப்பட்டு, ரத்தம் சொட்ட சொட்ட வந்த நிலையில், "அந்த ரத்தம் தாக்கப்பட்டதால் வந்த ரத்தம் அல்ல் மாதத்துக்கு ஒருமுறை வரும் ரத்தம்'' என்று மு. கருணாநிதி பேசியுள்ளார்.

பெண்கள் மட்டும்தான் என்றில்லை ஆண்களும் ஆபாச பேச்சில் தாக்கப்பட்டுள்ளார்கள். அதிகம் தாக்கப்பட்டவர் எம்.ஜி.ஆர்தான். "வி.என். ஜானகிக்கு குழந்தை இருக்கிறது. எம்.ஜி. ஆருக்குதான் குழந்தை இல்லை'' எனக் குறிப்பிட்டு, எம்.ஜி.ஆர். ஆண்மையில்லாதவர் என்னும் பொருள்பட அக்கால மேடைகளில் திமுகப் பேச்சாளர்கள் பேசியுள்ளார்கள். மேலும் "மலையாளி'', "ஊமை'' என தன் கடைசிக் காலம் வரை எம்.ஜி.ஆர். தாக்கப்பட்டார். ஆனால், எம்.ஜி.ஆர். குறித்து திமுக பேசப்பேச அவை எல்லாம் எம்.ஜி.ஆருக்கான அனுதாப ஒட்டுக்களாக மாறின என்பதுதான் வரலாறு உணர்த்தும் உண்மை. வரலாற்றில் இருந்து திமுக தலைவர் பாடம் படிக்கவில்லை என்பதைத்தான் இளங்கோவன் பேச்சு குறித்து அவர் வெளியிட்டுள்ள சமீபகால அறிக்கைக் காட்டுகிறது. திமுக தலைவர் சொல்கிறார்: "இளங்கோவன் தெரிவித்த கருத்தில் தங்களுக்கு உடன்பாடு இல்லை என்றால், வழக்கம் போல, அவதூறு வழக்கு தொடுக்கலாம்.''

'தவளைத் தன் வாயால் கெடும்' என்னும் பழமொழிதான் ஞாபகம் வருகிறது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இலவச ஆலோசனை வழங்கப்படும்



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# தமிழரின்...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

எமது நீண்ட கால அனுபவத்தின் அடிப்படையில் உள்நாட்டு விசாரணையில் எமக்கு நம்பிக்கையில்லை. அது பக்கசார் பற்ற விசாரணையாக இருக்க முடியாது.



ஏனெனில் குற்றவாளிகளே மற்றும் சக குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்த மாட்டார்கள். ஆனால் இம்முறை அவர்கள் இவ்விசாரணை சர்வதேச ஈடுபாட்டை கொண்டிருக்குமென்று கூறுகின்றனர்.

சங்கடமான சவால்! விழிப்பாக கூர்மையாக அவதானித்து அலசி ஆராய்ந்து தேர்வு செய்யப்பட்ட தமிழ் தலைவர்களுடன் சேர்ந்து நம்பிக்கையுடன் முன்னேறுவோம்.

புலம்பெயர் தமிழர்களும் போராட்ட சவால்களும் கடமைகளும்

எமது முதற் கடமையாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது உதவிக் கரங்களை நீட்டுவோம். இந்நடவடிக்கை எமது நம்பகத்தன்மையின் முத்திரை. அண்மைக் காலங்களில் எமது "பொழுது போக்கு அரசியல்" பேச்சும் தாயக மக்கள் மத்தியில் பிரிவுகள் போட்டிகளை ஊக்கப்படுத்தும் தீய செயல்களும் நடந்தன. அவற்றை தயவு செய்து நிறுத்துவோம். ஒரே இலட்சியத்தையும் திசையையும் நோக்கி, ஏதோ ஒரு அமைப்புடன் இணைந்து, உங்கள் சூழலில் வாழும் அந்நிய மக்களுக்கும், அந்நாட்டு அரசாங்கத்துக்கும் எம்முடைய நிலைப் பாட்டை விளக்கி அதற்காக வலுச் சேருங்கள். ஆகையால் எமது சரித்திர முக்கியத்துவம் நிறைந்த கடமையை பொறுப்புடன் சரியாகச் செய்ய இறைவன் உங்களுக்கு அருள் தருவாராக.

# அந்நியர்களும்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

பயிற்சி, அவர்களின் உடைகளின் தன்மை கள் போன்றவை கூட வெட்டவெளிச்சமாக உலகினருக்குத் தந்தார்கள், காட்டினார்கள். சந்திரப் பயணங்கள் பற்றிய இரகசியங்கள் எதுவுமே இல்லை என்றார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள்.

இது உண்மை போலத்தான் இருந்தது. நாசாவினரது செயற்பாடுகளின் பயனாக பல நாட்டு விஞ்ஞானிகளும் தத்தமது நாடுகளில் இருந்து, அந்த வழிகளைப் பாவித்து விண்ணுக்கும், மண்ணுக்கும் தொடர்புகளை உண்டாக்கத் தொடங்கினார்கள். ஆனால் விண்வெளிப் பயணங்களில் இரகசியங்கள் இல்லை என்பதை யூஎவ்ஓ ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சில விடயங்கள் மூடி மறைக்கப்பட்டு விட்டனவாம். குறிப்பாக, அந்நியர்கள் பற்றியும், அவர்களது அபூர்வ விமானங்கள் பற்றியுமான பல விடயங்களை பொது மக்களுக்கு நாசாவினர் மறைத்து விட்டார்கள் என்கின்றார்கள் யூஎவ்ஓ ஆய்வாளர்கள். அதாவது நாசா விஞ்ஞானி களால் அப்போலோ பயணங்களின் எல்லா விடயங்களுமே முற்று முழுதாக வெளி விடப்படவில்லை என்கின்றார். இவர்களது கூற்றுக்களை உண்மை எனக் காட்டுவது போல இருந்தது, நாசாவின் விஞ்ஞானி யாகிய கலாநிதி பாருக் எல் பஸ் (Dr. Farouk El Baz) என்பவர் பிந்நாட்களில் கொடுத்த பேட்டிகள். அவரது கருத்துப்படி, ஏறக்குறைய அப்போலோவில் பயணம் செய்த அத்தனை விண்வெளி வீரர்களுமே ஏலியன்களின் அபூர்வ விமானங்களை அம்புலியில் கண்டுள்ளார்கள், தாம் கண்ட வற்றை நாசாவிற்குத் தெரிவித்தும் இருக்கின்றார்கள். ஆனால் ஏதோ காரணங்களுக்காக நாசா அத்தனையையும் மறைத்ததுடன், அந்த விண்வெளி வீரர்களையும் அது பற்றி 'மறந்து விடுங்கள்' எனக் கூறி (எச்சரித்து) உள்ளது என இனம் தெரியா பறக்கும் பொருள்கள் பற்றிய ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.



அதிலொரு பகுதிதான் இப்பகுதியின் ஆரம்பத்தில் உள்ள கூற்றும் ஆகும்.

அடுத்த தடவையில் இன்னமும் அப்போலோ இரகசியங்கள் அம்பலமாகும்.

# மதுரை...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

பொழுது பலவகையான மட்கலன்கள், தொல்பொருட்கள், பெரிய அளவிலான சுட்ட செங்கற்கள் மற்றும் கூரை ஓடுகள் கிடைத்துள்ளதாகச் சொல்கிறார்கள். இந்த மண் மேட்டில் இருந்து கிழக்கே சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில், கொந்தகை என்ற ஊருக்குச் செல்லும் பாதையில், இங்கு வாழ்ந்த மக்களுக்கான ஈமக்காடு அமைந்திருக்கிறது. அங்கு பல ஈமத்தாழிகள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

$16 = 1 \times 2 \times 8$. Since a, b and c must be some permutation of 1, 2 and 8 there are exactly 6 possibilities which give the values of -247, -61, -65, 249, 263 and 63. Of those $8^1 - 1^2 + 2^8$ or 263 is the largest.

**(3)** A 10-N force acts in the direction of vector (1, 1). Unit vector along

$\vec{F} = (\frac{1}{\sqrt{2}}, \frac{1}{\sqrt{2}}) \rightarrow \vec{F} = 10(\frac{1}{\sqrt{2}}, \frac{1}{\sqrt{2}})$

$= (5\sqrt{2}, 5\sqrt{2})$, Displacement vector:

$\vec{PQ} = [5 - (-2)], [6 - 1] = [7, 5]$

$W = \vec{F}, \vec{d} = (7, 5), (5\sqrt{2}, 5\sqrt{2})$

$= 35\sqrt{2} + 25\sqrt{2} = 60\sqrt{2}$ N

### Tutorial 306

**(1)** A farmer hast 7 cows, 8 sheep and 6 goats. How many more goats should be bought, so that half of his animals will be goat? [Gr. 6 – 8]

**(2)** A store had a sale on T-Shirts. For every two T-Shirts purchased at the regular price, a third T-Shirt was bought for \$1,00. 12 T-Shirts were bought for \$120,00. What was the regular price of one T-Shirt? [Gr. 6 – 10]

**(3)** A monkey climbs a mast at 4m/s on a ship travelling north at 12m/s while the current flows east at 3m/s. What is the speed of the monkey relative to the ocean flow?

**(4)** Find the coordinates of the point that divides AB in the ratio 7:-5 where A is (4, 9) and B is (-3, 11)? [Gr. 12]

By Mr. S.F. Xavier (Teacher)
Tel: 6473409490/
4167322228



# பாபநாசம் விமர்சனம்



மலையாளப்படமான Drishyam, 2013 இல் வெளியானதிலிருந்து கன்னடம், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் அது திரும்பி எடுக்கப்பட்டது. இப்பொழுது தமிழில் பாபநாசம் என்ற பெயருடன் எடுக்கப் பட்டுள்ளது. இவ்வாறு எடுக்கப்பட்ட படங்களில் பாபநாசம் ஒன்றுதான் Drishyam பட இயக்குனராலேயே வேறு மொழியில் Remake செய்யப்பட்ட படமாகும்.

சுயம்புலிங்கம் (கமல்ஹாசன்) என்னும் கதாநாயகன் தன் மனைவி இராணி மற்றும் இரு மகள்களுடன் பாபநாசம் என்ற ஊரில் வாழ்ந்து வருகிறார். அவர் படிப்பில் நான்காம் வகுப்பை தாண்டாவிட்டாலும் தனது ஊரில் ஒரு சிறந்த தொழில் அதிபராக இருக்கிறார். அத்துடன் தான் சம்பாதித்த பணத்தை தேவை வந்தாலும் செலவு செய்ய விரும்பாதவர். ஆனால் அவருக்கு ஒரு நாள் செலவைப்பற்றி யோசிக்காமல் செலவு செய்யும் தேவை வருகிறது.

மூத்தமகள் பள்ளிக்கூடத்துடன் படிப்பு சம்பந்தப்பட்ட சுற்றுலா ஒன்றிற்கு செல்லுகையில் அவளை அறியாமலேயே ஒரு பிரச்சினையில் மாட்டுப்படுகிறாள். குளிக்கும் அறையில் திருட்டுத்தனமாக Phone இல் படம் எடுத்தவன் ஒருவன் அவளிடம் அதைக் காட்டும்போதுதான் அவளுக்கே அவ்விடயம் தெரிய வருகிறது.

இப்பிரச்சினை, இதுவரை சாதாரணமாக சென்ற கதையின் போக்கை திருப்புகிறது.

தற்செயலாக இப்பிரச்சினையின் தீர்வு ஒரு கொலையாக மாறுகிறது. இறந்தது பொலீஸ் உயரதிகாரியின் மகன். ஒரு பொய்யை மறைக்க இன்னும் பல பொய்கள் கூறுவது போல படத்தின் இரண்டாம் பாகம் மிகவும் சுவாரஸ்சியமாக செல்கிறது. என்ன நடக்கிறது என படத்தைப் பார்த்து அறியுங்கள். படத்தின் கருத்திற்கு இனி வருவோம்.


கதாநாயகனாக இருந்தாலும் இப்படம் அவர் சட்டவிரோதமான செயல்கள் செய்வதைக் காட்ட அஞ்சவில்லை. குடும்பத்தை காக்க சுயம்புலிங்கம் எதையும் செய்யக்கூடியவன் எனக் காட்டுகிறது. மறுபக்கத்தில் மகனை தேடும் தாய் கீதா, அவனை கண்டுபிடிக்க தனது அதிகாரத்தை சட்ட விரோதமான முறையில் உபயோகித்து விசாரிக்கிறார். எனவே இருவரினதும் சட்டவிரோதமான நடவடிக்கைகளிலும் நியாயங்கள் தெரிகின்றன. இரு பெற்றோர்களுக்கும் இடையே நடக்கும் தந்திரங்களின் வெளிப் பாடே இப்படமாகும். யார் வெல்கிறார்கள் என படத்தை பார்த்து அறியுங்கள்.

பொலிஸ் உயர் அதிகாரியின் மகன் என்றவுடன் தந்தைதான் அதிகாரியாக வரப் போகிறார் என்ற நினைப்பில் இருக்கையில் திடீரென தாய் பொலீஸ் சீருடையில் காட்சியளிக்கின்றாள். அவளுடைய பொலீஸ் புத்தியும், சுயம்பின் சினிமா பார்த்து வந்த அறிவும், இருவரின் பிள்ளைகள் மீது உள்ள பாசத்தையும் ஒப்பிடுகையில் அவை சரி சமமாகத் தெரிகிறது. சாதாரணமாக அழகிற் காக வரும் பெண் கதாபாத்திரம் போல் இல்லாமல் பெண் பொலீஸ் அதிகாரியின் ஆளுமையும், நடிப்பும் கமல்ஹாசனின் நடிப்பிற்கு சற்றும் குறைவானதாகத் தெரியவில்லை.

பதின்ம வயதுப் பெண்கள் கட்டாயம் இப்படத்தைப் பார்க்க வேண்டும். தங்கள் மீது ஒரு பிழையுமில்லாது யாரோ ஒருவன் திருட்டுத் தனமாக எடுத்த படத்திற்காக அவருடைய பெற்றோர்களிடமிருந்து விடயத்தை ஒளித்து மேலும் தவறு செய்யத் தேவையில்லை என இப்படம் காட்டுகிறது.

அத்தகைய பெண்பிள்ளைக்கு ஒரு இடைஞ்சலும் ஏற்படாமல் பெற்றோர் சட்டப்படி சரியோ தவறோ எனப் பாராமல் காப்பாற்ற முயல்கிறார்கள் என்பதையும் இப்படம் காட்டுகிறது.

பெற்றோரின் வழிநடத்தல் கிடைக்காமல் பணத்திமிரில் செய்யும் ஒரு தவறு எவ்வாறு உயிர் போகும் அளவிற்கு பெரும் பிரச்சினையில் போய் முடிகிறது என்பதை அறிய எல்லோரும் இப்படத்தைப் பார்க்க வேண்டும்.



**ஞா. ஆரணி**
அகவை 17

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# எனக்குள்ளிருக்கும் பல்வேறு கோணங்கள்

எனது ஆளுமைக்குப் பல கோணங்கள் இருப்பதை ஒப்புக்கொள்ள நான் இப்போ உடன்படுவதால் நம்பிக்கையை அனுபவித்து வெளிப்படுத்துகிறேன்.

உன்னைப்பற்றி உனக்குத் தெரிய வேண்டிய விடயம் ஒன்று இருக்கிறது. உன் ஆளுமையில் இரு கோணங்கள் உள்ளன. ஒன்றை ஒன்று எதிர்க்கும். உனது இவ்விரு மாறுபட்ட கோணங்களும் தமது வேறுபட்ட செயற்பாடுகளினால் உன்னைச் சிப்பிலியாட்டும். நீ மனதாரச் செய்ய விரும்பும் எதையும் உன்னால் நிச்சயம் சாதிக்க முடியும் என உனது ஒருகோணம் சொல்லும். உனது இரண்டாவது கோணம் உன்னால் செய்யக் கூடியதை நீ செய்யாமலிருக்கக் காரணங்களைக் கண்டுபிடித்து உன்னைத் தடுக்கும். எனது இவ்விரு கோணங்களை யும் எவ்வாறு சரிநிலைப்படுத்தி, சிறப்பாகச் செயலாற்றி முன்னேற நான் வழி வகுக்கலாம் என உன்னையே நீ கேட்டுக்கொள். கவலைப்படாதே இந்தச் சச்சரவைத் தீர்க்க ஒரு வழி இருக்கிறது. இத்தகைய உள்முகப் பிரச்சினை உனக்குள் எழுந்தால் அமைதியாக அமர்ந்து ஆழ்ந்து சுவாசித்துக் கொள். கண்களை மூடி மனதாரப் பிரார்த்தனை செய். அன்பார்ந்த இறைவா! இப்போ என்னால் அசையக்கூட முடியாதிருக்கிறது.



என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. உமது சித்தப்படி நான் செயற்பட எனக்கூடாக என்னை நான் போகவேண்டிய திசைக்கு வழிநடத்தி அருளும் தேவா! நீர் விரும்பிய திக்கிற்கு நான் திரும்ப அத்தியாவசியமான சிந்தனை களால் என் மனதை நிரப்பும்! என் வாயை மூடும்! நான் பேச வேண்டுமானால் எனக்கூடாக நீர் பேசும்! எனது கண்களை மூடும்! நான் எதையாவது காண வேண்டுமென்றால் நான் எங்கு பார்க்க வேண்டும் என்பதை எனக்குக் காட்டும்! எனது காதுகளை மூடும்! நான் எதையாவது கேட்க வேண்டுமென்றால் அதை இரகசியமாக எனக்கு விளங்குமாறு எனது இதயத்திற்குச் சொல்லும்! நான் முன்னேறாது தேங்கி நின்றால், எனது சந்தேகத்திற்கும் பயத்திற்கும் அப்பால் என்னை மெதுவாகத் தள்ளி விடும். நன்மை தரும் எனது சிறப்பான எதிர்காலத்திற்கு அத்தியாவசியமான வற்றை நான் செய்திட என்னை வழிநடத்தும் என நம்பிக்கையுடன் உம்மை இன்று பிரார்த்திக்கிறேன். மிக்க நன்றி ஆண்டவனே! இவ்வாறு நீ யாசித்தால் நிச்சயம் அவ்வாறே நடக்கும்!

உள்முகச் சச்சரவினால் இன்றுவரை உன்னால் முன்னேற முடியாமல் இருந்திருக்கலாம். இன்று இறைவனின் அருளுடன் எனது சுயத்தின் பல்வேறு கோணங்களையும் சரிநிலைப்படுத்தி நன்றியுடன் வெற்றிகரமாக வாழ்வில் நான் எங்கு செல்லவேண்டுமோ அங்குபோக வழிகாட்டுவதை இறைவனிடம் பொறுப்புக் கொடுத்துவிட்டு இப்போ நம்பிக்கையுடன் காத்திருக்கின்றேன்.

**ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்** 230

மேலதிக தகவல்களுக்கு
அழையுங்கள் 905-270-1214
416.907.6897



**லலிதா புரூடி**

# சாதாரண பேச்சும் மேடைப்பேச்சும்

இன்றுள்ள எமது சமூகத்தினர் உரையாடல் செய்யும்போது நாம் காணுகின்ற அவர்களது பேச்சு ரசிக்க கூடியதாக இருந்தாலும் சில வேளைகளில் கோபமூட்டுவதாகவும், முகம் சுளிக்க கூடியதாகவும் அமைந்து விடுகிறது. சாதாரணமாக ஒருவர் நட்போடும், உறவோடும், சமூகத் தொடர்போடும் பேசாது விட்டால் அவர் தனது நிறைவான வாழ்க்கையை தொலைத்து விட்டார் என்றே அர்த்தமாகிறது. நமது பேச்சுக்களே எமது வாழ்வினை தீர்மானிக்கின்றன. அதேவேளையில் எமது பேச்சுத்தான் உறவின் விரிசலுக்கும் காரணமாகி விடுகிறது.

நேரடியாகப் பேசுவது, தொலைபேசியில் பேசுவது, போக்குவரத்து வண்டிகளில் பேசுவது, வர்த்தக நிலையங்களில் பேசுவது, கோயில்களில் நின்று பேசுவது, பக்கத்து வீட்டாரோடு பேசுவது, குடித்து விட்டு பேசுவது, கோபத்துடன் பேசுவது, பணத்திமிரில் பேசுவது, எமக்கு தெரிந்தவைதான். அதேவேளை 'Silence please' என்ற அறிவிப்பு பலகைக்கு முன்பு நின்று பேசுவது கூட இவர்களுக்கு கைவந்த கலை. பொதுவாக இளைஞர்கள் பஸ்வண்டியின் பின்சீட்டில் ஒன்றாக வந்திருப்பதும், பஸ்வண்டியில் இருக்கின்றவர்களை கவனிக்காமல் உரத்த குரலில் தாம் மட்டுமே பஸ்ஸில் இருப்பதாக நினைத்து, கத்தி பேசுவதும் அன்றாடம் நடப்பவை. சிலவேளைகளில் கூடாத பேச்சுக்களை உதிர்ப்பதிலும் அவர்கள் வல்லவர்கள்! சில சந்தர்ப்பங்களில் பிரயாணிகள் எச்சரிப்பதும் அல்லது சாரதி எச்சரிப்பதும் காணக்கூடிய காட்சிகள் தான். இப்படியானவர்களின் நடத்தைகளால் அவ் இனத்தினதும், நாட்டினதும் மதிப்பு இழந்து போகின்றது. இனத்தின் பண்பாடு பற்றி எவரும் கவனிக்கமாட்டார்கள். நாம்தான் உலகில் எல்லாம் தெரிந்தவர்கள் எனவும் மற்றவர்கள் எவரும் தங்களுக்கு இணையானவர்களல்ல என்ற தலைக்கனமும் அவர்களின் நிலைப்பாட்டினை இழக்க வைக்கின்றன.

மற்றவர்களோடு பேசுவது, உரையாடுவது கூட ஒரு கலைதான். இதனை இன்றும் பலர் புரிந்து கொள்ளவில்லை. எந்தநேரமும் மனதில் பட்டதினை உளறித்தள்ளுவதுதான் இவர்களது வேலை. 'நுணலும் தன் வாயால் கெடும்' என்ற பழமொழிக்கு இணங்க ஏதாவது பேசி தம் மதிப்பை இழக்கிறார்கள். ஒருவரின் பேச்சினை வைத்தே நாம் அவரை எடை போடுகிறோம். அந்த பேச்சில் உள்ள அர்த்தத்தினை அல்லது மனப்பான்மையை எம்மால் உணர முடியும். பேச்சு மற்றவர்களை கவர்வதாகவும் இணைப்பதாகவும் இருக்க வேண்டும்.

'தன் எண்ணத்தை வெளிப்படுத்தும் கருவியே பேச்சாகும்'. மனித இனத்திற்கு கிடைத்த மாபெரும் வரப்பிரசாதம் இதுவாகும். மற்றவர்களுடன் பேசுவது கூட ஓர் இலக்கியம்தான். பட்டிமன்றப்பேச்சு,



சமயசொற்பொழிவு, விவாதப்பேச்சு எல்லாமே ஒருவரது திறனைக் காட்டுவது தான். மற்றவர்களை துன்புறுத்தாத, காயப்படுத்தாத பேச்சு இன்றைய தேவை. எப்படியும் பேசிவிடலாம் என்பதினை விட இப்படித்தான் பேசவேண்டும் என்பதே நியதி. இதனை முதலில் வகுத்துக் கொள்ள வேண்டும். செந்தமிழ், தேன்தமிழ், வண்டமிழ் என்று மொழிக்கு பல சாயங்கள் பூசுவதினை விட அதன் அறிவுபூர்வத்தினை அறிவதே சிறப்பு. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் கொண்ட எமது மொழியினை 'பேச்சுத்தமிழ்' இல் ஒன்றிணைத்துப் பார்க்க முடியும். தமிழில் உள்ள இதம், நலம், மென்மை, இங்கிதம், 'ழ' உச்சரிப்பு எல்லாமே சிறப்பு கொண்டவைதான். அதன் பெருமைகளை மட்டும் பேசிக் கொண்டிருப்பதினை விட அறிவும், அழகும் கொண்ட மொழியாக மாற்ற வேண்டிய தேவை இன்றுள்ளது.

வாய்மொழி மூலமான இலக்கியமே ஆரம்பத்தில் இருந்தது. கதை கூறல், நாட்டுப்புற பாடல்கள், பழமொழிகள், பொன்மொழிகள், முதுமொழிகள் என்பவை எமது மொழியில் உள்ள சிறப்புகள். இதனை மனதில் கொண்டு முறையாக பேசும் சக்தி எமக்கு வேண்டும். பேச்சு ஓர் ஆயுதம். அது வலிமை மிக்க ஆயுதம் என எண்ண வேண்டும். பேச்சினால் எதனையும் சாதிக்க முடியும். அன்பையும் விதைக்கலாம், பகையையும் அறுவடைசெய்யலாம்.

இவை ஊதிப்பெருப்பித்து விடுபவை.

எமது மொழியில் 'வெட்டிப்பேச்சு' என்பதும் ஒருவகை. இரண்டுபேர் சேர்ந்து மூன்றாம் ஆளைப்பற்றி பேசிக்கொண்டிருப்பார்கள். அவசியமற்ற பயன் இல்லாத பேச்சுக்களே வெட்டிப்பேச்சுக்கள் ஆகும். மற்றவர்களை பேசவிட்டு குறைவாக பேசுபவைகளே அறிவாளி. அதிகம் பேசுபவர்களை கண்டால் அறுவைக்கேஸ், பிளேட், லவுட்ஸ்பீக்கர், வளவள பேச்சாளர், அலட்டல்கேஸ் என்றெல்லாம் பெயர் சூட்டி விடுவார்கள்.


எம்மைத்தேடி பல பிரச்சினைகள் வருகின்றனவென்றால் எமது பேச்சினால் தான் இருக்க முடியும். நாம் வாயை வைத்துக் கொண்டு இருந்தாலே போதும் பல பிரச்சினைகளில் இருந்து தப்பிக்கொள்ளலாம். ஒருவரைப்பற்றி ஒருவர் ஒன்றைச் சொல்ல, மற்றவர் அதைப்பற்றி பத்துமடங்கு கூட்டி அடுத்தவருக்கு சொல்ல, ஒரு எலும்புகூட ஆளைப் போலாகிவிடும். மனிதவாழ்வில் நிறுத்த முடியாதது இதொன்றுதான். தந்திபோல் செய்தி வதந்தியாகி விடும். பல குடும்பங்களின் பிரிவுக்கும் சீரழிவுக்கும் இதுவே காரணமாகி விடுகிறது. பல குடும்பங்களின் பிரிவுக்கும் சீரழிவுக்கும் இதுவே காரணமாகி விடுகிறது. சிலர் தேவையில்லாமல் பேசி வாங்கில் கட்டிக்கொள்வார்கள். இதையெல்லாம் 'வாய்க்கொழுப்பு' என்றும் 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி' என்றும் பழமொழியாக சொல்வார்கள்.

வெள்ளை நிற மக்களிடமிருந்து உடைகளை மட்டும்தான் பின்பற்றியுள்ளோம். அவர்களது நாகரிக முறையை பழகவில்லை. அதிலும் அவர்களது மென்மையான பேச்சு மிகவும் சிறப்பானது. அவர்கள் வெளியே குரல் பெரிதாக வராமல், சண்டைபிடிப்பது போல் பேசாமல் உரையாடுவார்கள். பிரயாணம் செய்யும் போதும் ஏதாவது ஒரு பேப்பர் அல்லது புத்தகம் படிப்பார்கள். கண்ணியமாகவும் அறிவுபூர்வமாகவும் நடப்பார்கள். சிலர் பிரயாணம் செய்யும்போது யாராவது ஒரு நம்மவரைத்தேடிப்பிடித்து உரத்த குரலில் நாட்டுப்பிரச்சினை அல்லது மொகாசீரிஸ் பற்றி உரையாடுவார்கள். நேரம் மட்டும்

பொதுவாக பேசுவதற்கு இலக்கணத் தடையில்லை. எமது எண்ணத்தை, எமது முடிவை உணர்த்தவே பேசுகிறோம். எனவே மொழியை சுருக்கமாக, இதமாக, பதமாக பாவிக்க வேண்டும். சுருங்கக்கூறுதல் சிறப்பானது. சாதிக்க முடியாத பலவற்றினை உரையாடல்கள் சாதிக்கின்றன. சிலரிடம் இவ்வசீகர திறன் இருக்கும். பலரால் சாதிக்க முடியாதவற்றை இங்கிதமாக பேசி சாதிப்போர் பலர். எப்படி இந்த காரியத்தை பேசி முடித்தாய்? என வியந்து பேசுகிறோம்.

நமது உடல் உறுப்புக்கள் சோடிசோடியாக இருந்தாலும் வாய் மட்டுமே ஒன்றாக உள்ளது. இதன் பொருள் அளந்து பேசு, அறிவாக பேசு, இதமாக பேசு, திட்டமிட்டு பேசு, ஆரவாரமில்லாது பேசு, முகஸ்துதி செய்யாமல் பேசு, மற்றவரை மதித்து பேசு, மறுபுறத்தில் பேசுவதற்கு காது கொடு, ஒரேயடியாக நீ மட்டும் பேசாதே, வாய்ப்பந்தல் போடாமல் பேசு, அரைகுறை சொற்களை தவிர்த்துப்பேசு என பல சந்தர்ப்பங்கள் உள.

நாம் பேசிக்கொண்டே அழிகின்ற இனமாக உள்ளோம். எந்த சுமுகமான முடிவுக்கும் வரமுடியாத இனமாக உள்ளோம். எதனையும் முழுமையாக தெரிந்து கொள்ளாமல் எழுந்தமானமாக பேசுவதே இவர்களின் வேலையாகும். வதந்தி பரப்புவதில் இவர்களுக்கு எவரும் நிகரில்லை. 'பிள்ளையார் பால் குடித்தார்' என்பது அண்மைக்கால வதந்தி. அறிவு பூர்வமாக சிந்திக்கமாட்டார்கள். மற்றவர்களுக்கு தான் பெற்ற வதந்தியை அறிவிக்க இணைய தளங்கள் பல உள.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

**யோகா சோதிடம்**
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# சாதாரண பேச்சும்...

தொலைந்து போகும். அவர்களுக்கு அதைப்பற்றி கவலையில்லை.

தொலைபேசியை எடுத்ததும் எம்மவர்கள் ஆரம்பிக்கும் விதமே தனித்துவமானது. தன்னை அறிமுகம் செய்யாது எதிரில் எவர் இருப்பார் என்றும் தெரியாது ஏதோ தொலைக்காட்சியில் பார்ப்பது போல் ஆரம்பித்து விடுவார்கள். சிலர் மிகவும் உரத்து பேசுவார்கள். சிலர் காதுக்குள் போனை சொருகிக் கொண்டு பேசுவார்கள். 'உரத்த தொனியில் பேசிய ஒருவரை மற்றவர் பார்த்து, 'என்னப்பா நீ பேசுவதே நண்பருக்கு கேட்டிருக்குமோ. போனில் பேச தேவையில்லையே' என்று முன்னொரு முறை கூறியது ஞாபகத்திற்கு வருகிறது.

சிலவேளைகளில் சிலர் அர்த்தமில்லாது பேசுவதினை பார்த்திருக்கிறோம். சாப்பிட்டு கொண்டிருக்கும் ஒருவரைப் பார்த்து என்ன! சாப்பிட்டுக்கொண்டிருந்தீர் போலிருக்கு என்பதும், குளிக்கிற ஒருவரைப்பார்த்து என்ன குளிக்கிறீங்கள் போல இருக்கு? என்பதும் ஒரு வெகுளித்தனமான பேச்சு. என்ன செய்கிறார் என தெரிந்தும் சும்மா பேச்சுக் கொடுப்பது. சினிமா தியேட்டருக்குள் சந்திக்கும் ஒருவரிடம் என்ன சினிமாவுக்கா? என்றால் எப்படியிருக்கும். சும்மா, என்ற சொல்லை எம்மவர் மழுப்புவதற்கு பாவிப்பர். எங்கே வந்தனீர்? என்று கேட்டால் சும்மா இங்கையொருக்கா வந்தனான் என்பார். சும்மா அப்ளை பண்ணிப்பார்ப்பம். வேலை கிடைத்தாலும் சரி, கிடையாவிட்டாலும் சரி. இப்படித்தான் நாம் பொருத்தமற்ற அநாவசிய பேச்சுக்களை பேசி எமது தனித்துவத்தையே கெடுத்து விடுகிறோம். ஒரு நாளில் நாம் 'சும்மா' என்று சொல்கிற சொற்கள் தான் அதிகம். சில உரையாடல்கள் அல்லது பேசும் போது மறுப்பு செய்ய நேரிட்டால் கோபாவேசம் கொண்டு பொழிந்து தள்ளுவார்கள். இது நிரந்தர பகைக்கே வழிசமைக்கும். இயலாமையைக் கூட மனம் புண்படாது கூறலாம். இது கூட ஒரு கலை.

தமிழக முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா ஒரு சிறந்த பேச்சாளர். அடுக்குமொழியில் பேசவல்லவர். நல்ல குரல் வளமுள்ளவர். நகைச்சுவையுடன் பேசக்கூடியவர். அவரது பேச்சில் கண்ணியமும் இருக்கும் கவர்ச்சியும் இருக்கும். அந்த வேளையில் எதிர்க்கட்சியில் இருந்தவர் பி.ஜி கருத்திருமன். அவர் அண்ணாவின் ஆட்சியை விமர்சித்து நீங்கள் சரியாக செயல்படவில்லை. சீக்கிரமே பதவியை இழப்பீர்கள் என்ற கருத்தில் உங்களது நாட்கள் எண்ணப்படுகிறது. 'Your days are numbered' என்று கூறினார். இதனை செவிமடுத்த அண்ணா கோபிக்கவில்லை. அதற்கு அவர் எனது படிகள் அளக்கப்பட்டுள்ளது என்ற கருத்தில் 'My steps are Measured' என்றாரம். மிகவும் நாசூக்காக பதில் சொல்லியுள்ளார்.



வார்த்தை என்பது நெருப்பு மாதிரி. அது பிறரை சுட்டுவிடக்கூடாது. வார்த்தை என்பது அம்பு மாதிரி. பிறர் மனதினை காயப்படுத்தி விடக்கூடாது.

குழந்தைகளை முரட்டுத்தனமாக கண்டபடி பேசும் பெற்றோர்களை கண்டிருக்கிறோம். மற்றவர்களுக்கு முன்பு அவமதித்து பேசுவார்கள். ஆனால் உண்மையில் நம்பிக்கையுடன் பெற்றோர்கள் பேச வேண்டும். அன்பாக எடுத்து சொல்ல வேண்டும். எங்கள் கோபத்தை எங்கள் வருத்தத்தை பிள்ளைகள் மீது காட்டவே கூடாது. சில குடும்பங்களில் கணவன் மனைவி அடிக்கடி சண்டை பிடித்து கொள்வார்கள். அகங்காரம் (Ego) கொண்டிருப்பார்கள். ஒவ்வொருவரின் வெற்றிக்குப் பின்னால் ஒருவர் இருப்பதே சரியானது. மனம் விட்டுப் பேசுவதே முக்கியம். நல்லதொரு பேச்சு எப்படி அமையவேண்டும் என்பதனை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே வள்ளுவர் 'சொல்வளம்' பற்றி கூறியுள்ளார். கோடி கொடுத்தும் நாகோடாமை நன்று' ஔவையாரும் பகன்றுள்ளார்.

மேடைப்பேச்சு என்பது குதிரை ரேஸ் போன்று மாறியுள்ளது. புத்தக வெளியீடு செய்பவர்கள் வரவேற்புரை, வாழ்த்துரை, அறிமுக உரை, வெளியீட்டுரை, ஆய்வுரை என பல்வேறு தலைப்புகளில் பல்வேறு தரப்பினரையும் மேடையேற்றி புகழ்வதற்காக தயாராகி உள்ளனர். ஆளை ஆள் மாறி புகழ்ந்து தள்ளுவதும், இதுபோல் எந்த நூலும் வெளிவரவில்லை எனவும் பாராட்டி மகிழ்வர். வெளியீட்டாளர் தன் பதிலுரையில் நெகிழ்ந்து போவார். மாலைகள் பல மாறிமாறி அணியப்படும். பொன்னாடைகள் போர்த்தப்படும். சிறப்பு பிரதிகளும் வழங்கப்படும். உண்மையான புத்தக சிறப்பினை எவராலும் அறியமுடியாது. மிக முக்கியமாக ஒவ்வொரு பேச்சாளருக்கும் ஐந்து நிமிடங்களே வழங்கப்படும். மீறினால் துண்டுகள் கொடுக்கப்படும்.

மேடைப்பேச்சு ஒருகலை. பல ஆயிரம் மக்கள் கேட்டுப் பயன்படக்கூடியது. அரசியல், மதம், இலக்கியம் துறைசார்ந்து இவை அமையும். 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழ் நாப்பழக்கம்'. இதனால் மேடைப்பேச்சு கேட்பவர் மனதில் ஆணிபோல் இறுக்க வேண்டும். மனம், நேரம், அறிவு என்பவற்றிற்கேற்ப தலைப்பை விலக்காத பேச்சே எடுபடும்.

தமிழ்நாட்டில் அறிஞர் அண்ணா, ஈவேரா, பெரியார் முதல் நூற்றுக்கணக்கான பேச்சாளர்கள் மக்கள் மனதில் இன்றும் உளர். கிருபானந்தவாரியார் முதல் சுகிசிவம் வரையில் ஆன்மீக சொற்பொழிவாளர், ஆங்கில நாடுகளில் ஹிட்லர் முதல் ஜோன் எப் கென்னடி, பில் கிளின்ரன், பராக் ஒபாமா என பேச்சாளர் பட்டியல் பெருகும். பதவிக்கு வருவதற்கும் இவர்களது பேச்சே வழிவகுத்தது. இந்திய பிரதமர் நரேந்திரமோடி இரண்டு கைகளையும் நீட்டி பேசி பிரதமரானவர். இடம், பொருள், ஏவல் அறிந்தே பேச வேண்டும். சுருக்கமாய் நல்லதை, பிறருக்கு புரிவதுபோல் நல்ல உச்சரிப்போடும் இன்சொல்லால் பேசும் பேச்சாளர்களே மனதில் நிற்பர். பேரறிஞர் அண்ணா முதல் ஆன்மீக சொற்பொழிவாளர் சுகிசிவம் வரை இதனை செய்தமை காரணமாகவே எமது நெஞ்சங்களில் நிற்கின்றனர்.


சிவா கராத்தே பயிற்சி நிலையம்
MEMBER OF THE KARATE ONTARIO
FINCH & TAPSCOTT

ஒன்ராறியோ கராத்தே அங்கத்தவர்கள் இணைந்து நடத்தும் விசேட சலுகை

ஆறு மாதத்திற்கான கட்டணம் $220 + tax மட்டுமே......

இலத்திரனியல் உலகில் விறுவிறுப்பான காலத்தை எதிர்கொள்ள உறுதி மிக்க உடலும் உள்ளமும் அவசியமானது. இதை ஏற்படுத்திக்கொள்ள உங்களுக்கு தூணாக விளங்குவது சிவா பயிற்சி கராத்தே பாடசாலை தான்.

Toronto மாநகரில் ஸ்காபுறோ, மிசிசாகா, பிரம்டன், மார்க்கம் ஆகிய பல்வேறு இடங்களிவ் பயிற்சி வழங்கி வருகின்றது.

நீங்களும் இணைந்து உங்கள் உடல் ஆரோக்கியத்தையும், திடத்தையும், மன உறுதியையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

Nagul 647.309.6248 nagulan_vela@live.co.uk
For Registration: 416.456.6641
Shivafighters@hotmail.com
Unit 6 - 5637 Finch Ave. E., M1B 5K9, Toronto, ON



கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# EDUCATION

## Review Questions15 -17

➢ **PHYSICS Gr 11**

(i) Explain why the output of an AC generator is stepped up when in transmitting electric power across long distances.

(ii) A high-resistance voltmeter connected across the battery reads 12 V when the switch is open. When the switch is closed the voltmeter reads 10.8 V. Suggest why this might be.

➢ **CHEMISTRY 11**

An aqueous solution contains $XO_3^{2-}$ ions form a precipitate with aqueous $Ca^{2+}$ ions when 25mL of a solution aqueous ions with a concentration 0.78mol/L is added. The mass of the precipitate formed is 1.96g. Determine the atomic mass of X and indentify the element

## Answer Key : 15-16

➢ **ADVANCED FUNCTION 12**

$$f_{(x)} = \frac{P_{(x)}}{Q_{(x)}}$$

removable discontinuity at $x = -2$; $(x+2)$

vertical asymptote at $x = 2$ ; $(x-2)$

therefore, $Q_{(x)} = (x-2)(x+2)$

Oblique asymptote of $y = 2x + 1$.

$$\frac{P_{(x)}}{(x-2)(x+2)} = (2x+1) + \frac{1}{(x-2)(x+2)}$$

Solve for $p_{(x)}$ by multiplying $(x-2)(x+2)$.

$$P_{(x)} = (2x+1)(x-2)(x+2) + 1$$

$$f_{(x)} = \frac{2x^3 + x^2 - 8x - 3}{x^2 - 4}$$

➢ **CALCULUS & VECTORS**

Differentiate the following,

(i) $\sqrt{\frac{1+x^3}{1-x^3}}$ ans: $\frac{3x^2}{(1+x^3)^{\frac{1}{2}}(1-x^3)^{\frac{1}{2}}}$

(ii) $\sqrt{1+x^2}.\, sin^3\sqrt{x}$

ans:

$$\sqrt{1+x^2}\, 3\sin^2\sqrt{x}.\cos\sqrt{x}\, \frac{1}{2\sqrt{x}}$$

$$+ \sin^3\sqrt{x}.\frac{1}{\sqrt{1+x^2}}.2x$$

(ii) (a) By observation the planes are not collinear to each other.

(b) If $\vec{n_1}.\ \vec{n_2} \times \vec{n_3} = 0$ ⇨co planar

[ 2,3,-4]. [1,-1,3] × [5,-5,15] = ?

[ 2,3,-4]. [1,-1,3] × [5,-5,15] = 0

(c) Check for line of intersection:

This system is inconsistent and not solvable.

➢ **BIOLOGY**

(i) **Roles of eukaryotic DNA polymerases…**

Primer synthesis, repair, mitochondrial DNA replication, leading & lagging strand synthesis, Gap filling on lagging strand.

(ii) **Glucose can be obtained…**

Muscle glycogen converted directly to glucose -1-phosphate by glycogen phosphates, which does not consume energy. But the liver glycogen converted into glucose. Therefore, one fewer ATP will be produced when liver glycogen undergoes ATP production

(iii) Memory T cells are one type T-cells which provide immunity against future infections. Following an infection, some of the activated T-cells become memory cells. These memory T-cells are in a state of identifying recurrent infection (same infection) and produce many cells to fight against infection.

➢ **CHEMISTRY**

$$E_k = eV = (1.6X\,10^{-19})\,60 = 9.6X\,10^{-18}$$

$$v = \sqrt{\frac{2Ek}{m}} = \sqrt{\frac{2\,X9.6\,X\,10^{-18}}{9.11X\,10^{-31}}} =$$

$1.45X\,10^{13}$

$$\lambda = \frac{h}{mv} = \frac{6.63\,X\,10^{-34}}{9.11X\,10^{-31}X\ 1.45X\,10^{13}}$$

$=5.02X\,10^{-3}\mu m$

Answer key
15-17 - next issue
☎ 647 341 3975

KEEN TUTORING CENTRE

# என் அன்னை

கடல் அலைகள், பொன் மணல்,
புனித யாத்திரீகர்களின் நம்பிக்கை,
இராமேஸ்வரம் பள்ளிவாசல் தெரு -
இவையெல்லாம் ஒன்றுகலந்த உருவம் நீ
என் அன்னையே!

சுவர்க்கத்தின் ஆதரவுக் கரங்களாய்
எனக்கு நீ வாய்த்தாய்.
போர்க்கால நாட்கள் என் நினைவுக்கு
வருகின்றன.
வாழ்க்கை ஓர் அறைகூவலாய் அமைந்த
கொந்தளிப்பான காலம் அது –
கதிரவன் உதிப்பதற்குப் பலமணிநேரம் முன்பே
எழுந்து நடக்கவேண்டும் வெகுதூரம்
கோயிலடியில் குடியிருந்த ஞானாசிரியரிடம்
பாடம் கற்கச் செல்லவேண்டும்.
மீண்டும் அரபுப்பள்ளிக்குப் பல மைல் தூரம்.
மணல் குன்றுகள் ஏறி இறங்கி
புகைவண்டி நிலையச் சாலைக்குச் சென்று
நாளிதழ் கட்டு எடுத்து வந்து
அந்தக் கோயில் நகரத்து மக்களுக்கு
வினியோகிக்க வேண்டும்.
அப்புறம்தான் பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

இரவு படிக்கச் செல்லுமுன்
மாலையில் அப்பாவுடன் வியாபாரம்.

இந்தச் சிறுவனின் வேதனைகளை யெல்லாம்,
அன்னையே, நீ, அடக்கமான வலிமையால்
மாற்றினாய்.
எல்லாம் வல்ல ஆண்டவனிடமிருந்து மட்டுமே
தினசரி ஐந்து முறை தொழுது
நீ உன் பிள்ளைகளுக்கு வலிமை சேர்த்தாய்.
தேவைப்பட்டவர்களுடன் உன்னிடமிருந்த



சிறந்தவற்றை நீ பகிர்ந்து கொண்டாய்.
நீ எப்போதும் கொடுப்பவளாகவே இருந்தாய்.
இறைவன் மீது வைத்த நம்பிக்கையையும்
சேர்த்தே எதையும் நீ கொடுத்தாய்.
எனக்குப் பத்து வயதாக இருந்தபோது
நிகழ்ந்தது நன்றாக நினைவில் நிற்கிறது
ஒரு பவுர்ணமி நாள் இரவு அது.
என் உடன்பிறந்தார் பொறாமை கொள்ள
நான் உன் மடியில் படுத்திருந்தேன்.
என் உலகம் உனக்கு மட்டுமே
தெரியும் என் அன்னையே.

நள்ளிரவில் நான் கண்விழித்தேன்
என் முழங்கால் மீது உன் கண்ணீர்துளி பட்டு…
உன் பிள்ளையின் வேதனை
உனக்குத்தானே தெரியும், தாயே?
உன் ஆதரவுக் கரங்கள்
என் வேதனையை மென்மையாய் அகற்றின.
உன் அன்பும், ஆதரவும், நம்பிக்கையும்
எனக்கு வலிமை தந்தன.
அதைக்கொண்டே நான் இந்த உலகை
அச்சமின்றி எதிர் கொண்டேன்.


என் அன்னையே,
நாம் மீண்டும் சந்திப்போம்
அந்த மாபெரும் நியாயத் தீர்ப்பு நாளில்.

- ஏபிஜே. அப்துல் கலாம் -


### அவுல் பக்கீர் ஜைனுலாபுதீன் அப்துல் கலாம்

மாண்புமிகு அப்துல் கலாம் அவர்கள் சிறந்த உயர்ந்த விஞ்ஞானி. எல்லா உயிர்களையும் நேசிப்பவர். இந்திய ஜனாதிபதிப் பதவியையும் அலங்கரித்தவர். ‘அறிஞர்’ என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். அதிகாரத்தில் எளிமையை இணைத்து வாழ்ந்து காட்டியவர். தனக்கென எதையும் சேமிக்காதவர். பிரமச்சாரியாகவே வாழ்ந்தவர். தன் இறுதிக்கணம்வரை, மாணவர்களுக்கு அறிவையும் தன் நம்பிக்கையையும் உரையின்மூலம் வழங்கியவர். மறைந்தும் மக்களின் இதயங்களில் வாழ்பவர். அவரைப்பற்றி நிறையவே எழுதலாம். ஆனால், அவருக்குக் காணிக்கை ஆக்குவதற்கு, அவர்கைப்பட அவர் எழுதிய, இந்தக் கவிதை ஒன்றே போதும் என்பது எனது தற்போதைய அவா. கந்தசாமி முத்துராஜா

# CAPITAL HALL OTTAWA
# CONDO VIP SALE





* 3 Years rental guarantee
* Price Starting From $179K
* Minute From Carleton University

**For VIP Pricing**

*Please Call Anton 416-575-5055*

நகைச்சுவைத் தொடர் 317

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



கரணம் தப்பினால் மரணம். குழந்தைப்பிள்ளை விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுதென்பர்

விளையாட்டு வினையாகி விட்டதென்பர்.




விமானத்தில் சென்றாலும் பயம், வீதியில் சென்றாலும் பயம், வீட்டிலிருந்தாலும் பயம்.

விமான வீர சாகசங்கள், எயர் சோ எல்லா நாட்டிலும் நடப்பதுண்டு. சிறியோர் முதல் பெரியோர் வரை மணிக்கணக்காக காத்திருந்து ரசிப்பதுண்டு. ஆனால் துரதிஸ்ட வசமாக பார்வையாளர்கள் கண் முன்னாலேயே விமானங்கள் வீழ்ந்து நொருங்குவதும் வானத்திலேயே தீப்பிடித்து சாகச வீரர்கள் கருகிச் சாம்பலாவதும் பல நாடுகளில் நடைபெற்றுள்ளது.



சிலவேளைகளில் விமானம் வீழ்ந்து நொருங்கி பார்வையாளர்கள் உயிரிழந்த சம்பவங்களுமுண்டு. கடந்த வாரம் இங்கிலாந்தில் விமானம் வீழ்ந்து தீப்பற்றியது. பார்வையாளர்கள் பலர் உயிரிழந்துள்ளனர்.

எல்லாவற்றையும் பாத்துவிட்டோ அல்லது அறிந்துவிட்டோ எல்லாம் எமது விதியென்று விடுக்றோம்.



நல்லூர் திருவிழாவை ரெலிவிசனிலும் பேஸ்புக்கிலும் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தா ஐபொட் அகிலாண்டேஸ்வரி. எங்கை போன வருச திருவிழாவிற்கு அரிச்சனை தட்டோடை திருப்பதிக்கு போகேக்கை வாங்கிக்கொண்டு வந்த பட்டு வேட்டி சால்வையோடை அரசியல் விளம்பரம் தேடிய அரசியல்வாதிகளையும் அவர்களின் எடுபிடிகளையும் காணேல்லை என இழுத்தா செக்கண்ட்புளோ செல்லம்மா.



ஆடை அணிகலன் ஆடம்பரங்கள் ஆண்டவன் விரும்புவதில்லை.

அது பரவாயில்லை (4வது தடவையாக) பிரதமராக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி முன்னால் கை குலுக்கவர காணாமலே போய்விட்டாராம் எனச்சொல்லி முடிப்பதற்குள் இதுக்கு ஒரு பாட்டிருக்கு. நான் கொழும்பிலை இருக்கேக்கை தியேட்டரிலை பார்த்த படம். 'இருக்குமிடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே' என தட்டி தடங்கி தமிழில் சொன்னா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.




மனித வாழ்வில் ஒருவர் பதவி பட்டத்துடன் இருந்தால்தான் மதிப்பு. இத்தனையையும் கவனித்துக்கொண்டிருந்த உலகரின் மனதில் மு.க.ஷெரிபின் பழைய பாடல் வரிகள் சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் ஒலித்தது.

'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே
இதைப் பார்த்து அறிந்து நடக்காதவன் மனிதனில்லை'.
ஏழ்மை நிலை வந்தால் நேசர் யாருமில்லை இதை எண்ணிப்பார்க்க அறியாதவன் அடைவான் தொல்லை.




பாடசாலைகள் விடுமுறை முடிந்து அடுத்த வாரம் மீண்டும் ஆரம்பம். பேரப்பிள்ளைகள் வீட்டில் தொடர்ந்து காட்டுன் நிகழ்ச்சிகள் பார்ப்பதால் அழும் சீரியல் பார்க்க முடியாது அழும் அம்மம்மாக்களுக்கு இனி குதுாகலம் தான்.




பாடசாலை பக்கத்தில்தானே, பிள்ளைகளை காரில் கொண்டுபோய் விட்டுவரலாம் என அடுப்பில் சோறு கறியை வைத்துவிட்டு அவசர அவசரமாக காரோடி ஸ்ரொப் சைனில் நிற்காமல் செல்வது, அதி வேகமாக செல்வது, லைசென்ஸ், இன்சூரன்ஸை வீட்டில் விட்டுவிட்டு செல்வது. மாணவர்களை இறக்கிக்கொண்டு விசேட சமிக்கையுடன் நிற்கும் ஸ்கூல் பஸ்சை தாண்டி நிற்பாட்டாமல் செல்வது, பலவித வீதி சட்டவிதிகளை மீறுவது போன்றவை கூடிய தண்டப்பணம், அதிகூடிய புள்ளிகள் இழப்பு. அத்துடன் கார் இன்சூரன்ஸ் உங்களை அறியாமலே கூடிவிடும். (வேகம் இருக்குமளவிற்கு விவேகமும் இருக்க வேண்டும்)

இது கோடை காலமா குளிர்காலமா என தெரியாதளவிற்கு காலநிலை மாறி மாறிக்கொண்டு போகிறது. ரூபியும் ரூபனும் வாங்கி நட்ட பூக்கன்றுகள் ஒன்றும் பூக்கவில்லை. உலகர் நட்ட கத்தரியோ, வெண்டியோ, ஏனைய மரக்கறி வகையோ பூக்கவுமில்லை, காய்க்கவும் இல்லை.
உலகண்ணை இப்ப மரக்கறி பழவகை விலை ஏறிக்கொண்டே போகுது என்று



சொல்லிமுடிக்கமுன் செக்கண்ட்புளோர் செல்லம்மா சொன்னா இப்ப 2-3 நாளா பெற்றோல் விலை குறைஞ்சிருக்கு. சில பொருட்கள் விலை குறைஞ்சிருக்கு. அதுசரி அகிலா, புதுசா 'வாலு' எண்ட படம் வந்திருக்கு அந்தப்பேரிலை சாறி இன்னும் வரேல்லியோ என கேட்க. வாலு வேட்டி வந்திருக்கும் ரூபன் உலகண்ணைக்கு தீபாவளிக்கு வாங்கிக்குடுப்பன் என சொல்லி தனக்குள் சிரித்துக்கொண்டா ஆட்டிலறி அன்னம்மா.



யு நோ வட்? சிறிலங்கா லெக்சன் முடிஞ்சுது. இன் கனடா லெக்சன் இப்ப சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டுது. இன்னும் கிட்டத்தட்ட 49 நாள் கிடக்கு என பெரிய அறிவித்தலை விட்டா ஐபொட் அகிலா.




செப்ரெம்பர் 1_15




1. தமிழறிஞர் தனிநாயக அடிகள் நினைவு தினம் (1980)
2. முன்னாள் மானிப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் நினைவு தினம் (1985)
3. பாடசாலை கல்லூரி சர்வகலாசாலைகள் ஆரம்பம்
5. அன்னை திரேசா நினைவு தினம் (1997)





7. Labour Day விடுமுறை தினம்
7. (1998) கூகிள் ஆரம்பிக்கப்பட்டது.
7. கலாயோகி ஆனந்தக்குமாரசாமி நினைவுதினம் (1947)




7. கூகிள் ஆரம்பிக்கப்பட்ட தினம் (1998)
8. ஆத்மயோதி நா.முத்தையா ஆத்மஜோதி இதழாசிரியர் (1918..1995)
8. அன்னை வேளாங்கன்னி தேர்த் திருவிழா.
8. யேசுக்கிறிஸ்துவின் அன்னை மரியாள் பிறப்பு
10. வி.கே. கானமூர்த்தி ஈழத்து நாதஸ்வரக் கலைஞர் நினைவு தினம் (1948)
11. சுப்பிரமணிய பாரதியார் நினைவு தினம்



11. அமெரிக்க நியூ யோர்க் வர்த்தக மையம் பென்ரகோன் தாக்குதல். 911–(2001)அதன் பின் உலகின் பலபாகங்களிலும் ஏற்பட்ட அழிவு சேதம் அளவிட முடியாதவை
14. ஆவணி கடைசி ஞாயிறு



15. பேரறிஞர் அண்ணா (சி.என். அண்ணாத்துரை தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர். (1909…1969)
15. அனைத்துலக மக்களாட்சி நாள்.


## இணுவில் திருவூர் ஒன்றியம்-அறிவித்தல்

இணுவில் திருவூர் ஒன்றியத்தின் அனுசரணையில்

# நூல்கள் வெளியீடு

கவிஞர் வ. க. பரமநாதனின் "காலம் தந்த வலிகள்"(கவிதைத் தொகுப்பு)

மற்றும் "தாயக ஒலி "(இரு திங்கள் ஏடு) கனடாச் சிறப்பிதழ்

காலம்: 06-09-2015(ஞாயிற்றுக்கிழமை)
இடம்: ஸ்காபுரோ நகரசபை மண்டபம், 150 புறோ டிறைவ், ஸ்காபுரோ
நேரம்: மாலை 3 மணி முதல் 6மணி வரை
தொடர்புகளுக்கு: 416-496-9071, 416-430-0422, 647-885-7407

# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER




## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

## 416.846.2798

**100% Guaranteed Result**



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளைக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**

**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**







# What is Beauty

தொடர்ச்சி....

There is so much beauty in life
Beauty is a gift of God
Beauty is in the heart wich touches, another
Simplicity is beauty.

Beauty of sun setting in to ocean, in evening
Truth is beauty, beauty is truth
Beauty is the best treasure for, one's eye
the beauty of a love that is real.

Bright colors of the rainbow,
the beauty of spring
What is beauty?
Beauty is you.

- Maria Luisa Taylor

வாழ்க்கையில் எத்தனை அழகு கொட்டிக் கிடக்கிறது
அழகு கடவுளின் நன்கொடை
இதயத்தினைத் தொடுவது அழகு
வேறு ஒன்று
எழிமையே அழகு
கடலில் சூரியன் மறைவதும்
அந்திநேர அழகு
உண்மையே அழகு, அழகே உண்மை
ஒருவனின் கண்களுக்கு அழகுதான் மிக
உயர்ந்த பொக்கிசம்
அன்பின் அழகே உண்மையழகு

வானவில்லின் பிரகாசமாக ஒளிரும் வன்னங்கள்
வசந்தத்தின் அழகுக் கொடை
எது அழுகு?
நீதான் அழகு

# அழகியற் கோலங்கள்



- த. சிவபாலு -

இராமனின் அழகையும் கம்பீரத்தையும் கவர்ச்சியையும் வர்ணிக்கப் புகுந்த கம்பர் பின்வரும் பாடலிலே எடுத்துரைக்கின்றார்:

வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியின் மறைய
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ! இவன் வடிவென்தொர் அழியா அழகுடையான்

உலகத்தின் அறமே எல்லாவற்றிலும் மேலான அழகைத்தரும் என்பது நான்மணிக்கடிகை தரும் கருத்து அழகை எத்தனை கோணங்களில் எம்மவர்கள் பார்த்துள்ளார்கள். கண்களால் காண்பவை அழகா, செவிகளால் கேட்டு ரசிப்பது அழகா, ஆழ்ந்து அவிந்து அடங்கிய சான்றாண்மை தரும் பொலிவு அழகா என்பது என்மனத்துள் எழும் வினாக்கள். ஒவ்வொரு பருவத்திலும் அழகு மாற்றம் பெறுகின்றது. பின்வரும் நான்மணிக் கடிகைப் பாடலில் நிலத்திற்கு அழகு செய்பவை நெல்லும் கரும்பும் என்கின்றார். இது மருத நிலத்திற்கான அணியாகக் காட்டியுள்ளார் புலவர். ஒரு குளத்தில் குவளை மலர் நிறைந்திருந்தால் அது பார்ப்பதற்கு மிகுந்த அழகைக் கொடுக்கும். வட்ட, வட்ட இலைகளைத் தாங்கி நிற்கும் நீருக்கு மேலாக மிகக் கம்பீரமாக அழகுத்தோற்றம் தருகின்றது தாமரை மலர். வெண்டாமரை, செந்தாமரை இரண்டுமே அழகானவைதான். குளத்தினை காலையில் இளவெய்யில் கிரகணங்கள் பாயும்போது தாமரை மலரில் உள்ள நீர் உருண்டைகள் இரத்தினக் கற்கள்போன்று ஒளிவீசம் காட்சி பார்க்கப்பார்க்க கண்வாங்காது பார்த்துக் கொண்டே இருக்கத் தோன்றும் அத்துணை அழகானது.

பெண்மைக்கு அணி என்பது நாணம், அதாவது வெட்கப்படுதல் உண்மையிலேயே ஒரு அழகினைப் பெண்களிடையே தோற்றுவிக்கின்றது. அந்த அழகை இரசித்து பாடல்களை யாத்துள்ளனர் அக்காலத்துப் புலவர்கள் மட்டுமல்ல இக்காலப் புலவர்களும்தான். ஆனால் ஒரு மனிதனுக்கு அழகைத் தருவது தான் வாழுகின்ற உலகத்து அறமாகும். அறமில்லையேல் அனைத்தும் பாழாகிவிடும்.

நிலத்துக்கணியென்ப நெல்லும் கரும்பும்
குளத்துகணியென்ப தாமரை-பெண்மை
நலத்துகணியென்ப நாணம், தனக்கணியாம்
தான் செல் உலகத்தறம்.
நான்மணிக் கடிகை . . . .

நீர் வளர் ஆம்பற் தூம்புடைத்திரள் கால்
நார் உரித்தன்ன மதன் இல் மாமை,
குவளை அன்ன ஏந்து எழில் மழைக் கண்,
திதலை அல்குல், பெருந் தோள்,
குறுமகட்கு
எய்தச் சென்று செப்புநர்ப் பெறினே,
"இவர் யார்?" என்குவள் அல்லள்
முனாஅது,
அத்தக் குமிழின் கொடு மூக்கு விளை கனி
எறி மட மாற்கு வல்சி ஆகும்
வல் வில் ஓரி கானம் நாறி,
இரும் பல் ஒலிவரும் கூந்தல்
பெரும் பேதுறுவள், யாம் வந்தனம் எனவே.

இப்பாடலில் குவளை அன்ன ஏந்து எழில் என்பது தாமரைப் பூவையும் அதன் அழகையும் விபரிக்கின்றது. பெண்ணின் கண்களுக்கு தாமரை மலர் ஒப்பிடப்படுகின்றது என்றால் அவளின் கண்களின் அழகைப் பற்றி எவ்வளவு கூர்மையாக அவதானித்து அதனைக் கவிதையில் வடித்துள்ளார் புலவர்.



# தமிழ் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம்

## Tamil School Sports Festival

இந்த ஆண்டு தமிழ் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம் தனது 20ஆவது ஆண்டு நிறைவை ஓகஸ்ட் 8 ஆம் நாள் கொண்டாடியது. தமிழ்ப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம் - பழைய மாணவர் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சில விளையாட்டுப் பிரியர்களால் 1995ஆம் ஆண்டு தொடக்கப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளாக தபாவிச வலைப்பந்தாட்டம்



(Netball), உதைப்பந்தாட்டம் (Soccer), கைப்பந்தாட்டம் (Volleyball), துடுப்பாட்டம் (Cricket), பூம்பந்தாட்டம் (Badminton), போன்ற விளையாட்டுப் போட்டிகளையும், குறிப்பாக தடகள (Track and Field) ஓட்டப்பந்தயங்களை நடத்தி வந்திருக்கிறது.

எங்களது முக்கிய நோக்கம் இளைய தலை முறையை விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறச் செய்து அவர்களது திறன்களையும் ஆற்றல்களையும் மேம்படுத்துவதாகும். இதன்மூலம் அவர்கள் தங்கள் மனதையும் உடலையும் மேம்படுத்தி எந்த அறைகூவலுக்கும் முகம் கொடுக்க தயாராக வைப்பதாகும். மேலும் நாங்கள் கனடாவில் உள்ள பழைய மாணவர் சங்கங்களில் உள்ள பழைய மாணவர்கள், அவர்களது பிள்ளைகளது நன்மைக்காகவும் அவர்களை ஊக்குவிக்கு முகமாகவும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அவை போன்ற செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி வருகிறோம். மேலும், நாங்கள் பழைய மாணவர் சங்கங்களோடு நெருங்கிய உறவுகளை வளர்த்து வருகிறோம். அத்தோடு விளையாட்டு செயற்பாடுகளை எல்லாவிதத்திலும் முன்னெடுக்கும் முகமாக வேறு அமைப்புகளோடு சேர்ந்து பணியாற்றி வருகிறோம்.

ஓகஸ்ட் 8ஆம் நாள் தபாவிச ஒழுங்கு செய்த 2015 கோடை கால விளையாட்டு விழாவில் ரொறன்ரோ, பிறம்ரன், மார்க்கம் மற்றும் மிசிசாகா ஆகிய நகரங்களில் இருந்து 500க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டார்கள். இதில் 30 க்கும் மேலான அணிகள் கலந்து கொண்டன. விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், பெற்றோர் மற்றும் விளையாட்டு இரசிகர்கள் காட்டிய வியத்தகு விளையாட்டுத்திறன் போற்றும்படியாக இருந்தது. போட்டிகளில் கலந்து கொண்டோர் நேரக் கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டதை நாங்கள் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறோம். நிகழ்சிகள் முன்கூட்டி திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைய சரியாக மாலை 7.00 மணிக்கு முடிவுக்கு வந்தது.

பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த உதைப்பந்தாட்டம், வலைப்பந்து மற்றும் தடகள அணிகள் விருதுகள் மற்றும் போட்டி கோப்பைகளுக்கு போட்டியிட்டன. வெற்றியீட்டியவர்களில் 6 வயதுக்கு குறைவான விளையாட்டு வீரர்கள் தொடங்கி 68 வயதுக்கு மேலான விளையாட்டு வீரர்களும் அடங்குவர். வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாண மகளிர் கல்லூரி, கிளிநொச்சி மத்திய வித்தியாலயம், யாழ்ப்பாண மத்திய கல்லூரி, பரி யோவான் கல்லூரி யாழ்ப்பாணம், மகாஜன கல்லூரி யாழ்ப்பாணம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி யாழ்ப்பாணம், பரி பீட்டர் கல்லூரி கொழும்பு மற்றும் புனித சம்பத்திரியார் கல்லூரி ஆகியவை கலந்து கொண்டன. பல விருதுகளை தகுதிபடைத்தவர்கள் வென்றிருந்தார்கள்.

எதிர்காலத்தில் எல்லா வயதுக்காரர்களும் கண்டு களிக்கக் கூடிய போட்டிகளை வைக்க எண்ணியுள்ளோம். சின்னப் பிள்ளைகளுக்கு எமது பாரம்பரிய கிளித்தட்டும் வயது வந்தோருக்கு



தயிர்ப்பானை உடைத்தல் போன்ற விளையாட்டுப் போட்டிகளை நடத்த இருக்கிறோம். மேலும் சுவையான சமைத்த உணவு, சேலைகள், பணியாரக் கடைகள் மற்றும் புத்தகக் கடைகள் வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

கு டு ம் ப த் தோ டு ம் நண்பர்களோடும் வருகை தந்து உங்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து தருவீர்கள் என நாங்கள் நம்புகிறோம். முடிவாக எல்லாப் பழைய பாடசாலைச் சங்கங்களும் எங்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். அவை புதிய யோசனைகளைத் தந்து உதவினால் தபாவிச பலப்பட்டு அதன் பணிகளை இன்னும் பல ஆண்டுகளுக்கு நீடிக்கலாம்.

# இறுதி கால வாழ்க்கை இதமாக அமைய

பிறந்தநாட்டில் முதியோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை
புலம்பெயர்ந்த இந்த நாட்டில் இன்று இல்லை
அரச உதவிப்பணம் கிடைத்தாலும் கூட
எதையும் அனுபவித்து வாழ முடிவதில்லை.

விதி என்று சொல்லி விழி மூடி வீட்டுக்குள் முடங்கி கிடக்காதீர்
மனவேதனைகளை தவிர்க்க நீவீர் வெளி ஏறி வரவேண்டும்
சிலையாகும் கல்லுக்கு உளி கூட வேதனைதான்
சிலை உருவான பின்னே கல் உயிர்நிலை காணுமே

ஆடாத ஆட்டம் எல்லாம் இளமையில் ஆடி முடித்தோம்
ஆறடி நிலத்துக்குள்ளே அடங்கும் காலத்திலாவது
இறுதி கால வாழ்க்கை இதமாக அமைய
இடம் ஒன்று தேட முனைவோம்



பல்லின மக்களும் பரவலாக வாழும் இக் கனடா தேசத்தில்
முதியோரை காக்கும் கரங்கள் பல தளத்தில் உண்டு
கவலையை மறந்து இன்றே களத்தில் இறங்கி
தட்டுங்கள் கதவு திறக்கப்படும்

இருக்கவே இருக்கிறது எம்மவரின் முயற்சியால் இயங்கும்
முற்றும் முழுதாய் முன்வந்து உதவ முதியோர் சங்கங்கள்
ஆண் பெண் என்ற பேதமின்றி அறுபதுவயது எய்திய
அனைவரும் சென்று அங்கத்தவராகுங்கள்

வலி கொண்ட நோய்கள் பீடித்து வாழ்நாள் முழுதும் வருந்தாமல்
வருமுன் காப்பதற்கான பரிகார வழி முறைகள் அறிந்திட
கற்றறிந்த பெரியோர்களின்
கருந்துரைகள், கவிதைகள், பாடல்கள், நகைச்சுவைகள் மற்றும் பலவும்

கேட்டு கவலைகள் மறந்து ரசிக்கவும் மேடை ஏறிப் பேசவும்
நாட்டு நடப்புகள் கேட்டிட நம்மவரோடு கலந்து
ஒன்று கூடி விழாக்களில் கலந்து கொள்ள
உரையாடி, இறுதி கால வாழ்க்கை இதமாக அமைய
தனித்துவமிக்கதோர் தமிழ் முதியோர் சங்கத்தை நாடுவோம்

- கவிநாதம் பரந்தாமன் -





# "மார்க்கத்தில் வாழும் மக்களை மகிழ்விப்பதே மார்க்கம் மாநகரசபையின் குறிக்கோள்!" - திரு. லோகன் கணபதி

"மார்க்கம் மாநகரில் வாழும் பொது மக்களை மாத்திரமன்றி சிறுவர் சிறுமிகளையும் மகிழ்விப்பதே மார்க்கம் மாநகர சபையின் குறிக்கோளாகும். றோயல் வங்கியின் அனுசரணையுடன் நாம் வருடாந்தம் நடத்தி வரும் மார்க்கம் மிலிக்கன் சிறுவர்களுக்கான விளையாட்டு விழா ஒன்ராறியோ மாகாணத்தில் நடை பெறும் மிகப் பெரிய விழாவாகும். இதில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பத்தினர் கலந்து கொள்கின்றனர். சிறுவர்களுக்கான இவ்விழாவில் சிறுவர்கள் மாத்திரமன்றி அவர்களது பெற்றோர்களும் பிள்ளைகளுடன் கலந்து கொண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்."





2015 ஆம் ஆண்டின் றோயல் வங்கி - மார்க்கம் மிலிக்கன் சிறுவர் விழாவின் பதினேழாவது ஆண்டு விளையாட்டு விழாவினை கடந்த 22ஆம் திகதி காலை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மார்க்கம் மாநகர சபை உறுப்பினர் திரு.லோகன் கணபதி இவ்வாறு கூறினர். முற்பகல் பதினொரு மணிக்கு விழா ஆரம்பிப்பதற்கு முன்னரே பெருந்திரளான மக்கள் ஆவலுடன் மாநகர சபைக்கு முன்னால் உள்ள மைதானத்தில் திரண்டு நின்றனர். காற்று நிரப்பப்பட்ட பாரிய அளவி லான விதம் விதமான விளையாட்டு மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. விளை யாட்டு விழா ஆரம்பிக்கும் வரை ஆவலுடன் காத்து நின்ற குழந்தைகள் ஆரம்பிக்கப்பட்ட உடனேயே பெற்றோர்களின் கட்டுப்பாடு களையும் மீறி பாய்ந்து சென்று விளையாட்டு மேடைகளில் ஏறி சறுக்கி வந்து மகிழ்ச்சி அடைந்தனர். அவர்களது மகிழ்ச்சியைக் கண்டு பெற்றோர்களும் மகிழ்ச்சி அடைந்தனர். அன்றைய தினம் கால நிலையும் சீராக இருந்தமை மேலும் சிறப்பாக இருந்தது.

விளையாட்டு நிகழ்ச்சிகளுடன் சிறுவர்களின் முகத்தில் வர்ணங்களைத் தீட்டும் நிகழ்ச்சி, விநோத உடை அலங்கார அணிவகுப்பு, ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் ஆகியவற்றுடன் "றோயல் வங்கி" மற்றும் பல்வேறு அமைப்புக்களின் தகவல் நிலையங்கள், சிற்றுண்டி விற்பனை நிலையம் ஆகியனவும் அமைக்கப்பட்டிருந்தன. பல்வேறு இடங் களில் இருந்து இலவச பஸ் போக்கு வரத்து வசதியும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. பெருந்திரளானோர் தமது சொந்த வாகனங்களில் வந்திருந்ததினால் வாகனங்களை நிறுத்துவதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய சிரமம் ஏற்பட்டது. இருப்பினும் அனைவருமே கூடி மகிழும் பெரு விழாவாக இவ்விழா அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

- வீரகேசரி மூர்த்தி -


இப்பொழுது கிடைக்கிறது
கோடை கால தாகத்துக்கோர் இளநீர்..!
Niru BRAND®
Natural Ingredients!
Coconut Water
Made with
Real pieces of Coconut
PLEASE CHILL BEFORE SERVING
40 Minuk Acres, Scarborough ON M1E 4Y6
Tel: 416 750 1976 | Fax: 416 750 8779 | info@niru.com | www.niru.com
AVAILABLE AT YOUR LOCAL COMMUNITY GROCERY STORE.

"Let me help you make the right choice"
Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL
Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All Stars Realty Inc., Brokerage
Chairman's Club Award
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate. You're in good hands.
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

THE TRUSTED MORTGAGE AGENT
"Solution For Every Mortgage"
Mortgage Alliance
The Guardian
*Some Terms & Conditions May Apply
•I will arrange your 1st Mortgage with 0% down.
•Need a 2nd Mortgage???
"When banks say no We say yes"
@ interest rate starting from 6.99%+.
Surren Selvanayagam
(LIC: M14001034)
சுரேன் செல்வநாயகம்
Contact: 647.308.3090 / E-Mail: surren12@gmail.com

நேர்மையுடனும் விசுவாசத்துடனும் உங்களுக்காக வீடுகள் வியாபார நிலையங்கள் வாங்கவும் விற்கவும் உங்கள் கனவுகளை நனவாக்கும் ஒரு நம்பிக்கையான முகவர்
PYRAMID GROUP Real Estate Professionals
Neranjan & Sugan Team
PYRAMID GROUP YOUR DREAM TEAM
TOP LISTING TEAM IN GTA !!!
Neranjan Rasiah
Sales Representative
416-804-4436
LIST WITH US & SEE THE DIFFERENCE
$$$ Cut Paid for Referals $$$

Free Real Estate Class - Call: 416.321.6969

The Ledger ACCOUNTING & TAX SERVICES
BOOKKEEPING SERVICES
*GST/HST Remittance
*Payroll Services
*Bank Reconciliation
*A/R & A/P Maintenance
*Financial Statements
TAX SERVICES
*Personal Tax Return
*Rental Income
*Self Employment
*Payroll Taxes
*Corporate Tax Return
உங்கள் வியாபாரக் கணக்கியல் மற்றும் வரித்தேவை எதுவாயினும் என்னை அழையுங்கள்
647.219.2273

RealEstate / Commercial Investments

Restaurant for sale
Woodbine & Davis drive
Building + Business
Price : $2.7M

Audley / Rossland /Ajax
Bedroom : 4
Washroom: 3
Price : $549,900

Morningside & Lawrence
Bedroom : 3
Washroom: 2
Price : $339,900

Finch & Glenanna
Brock Rd
Bedroom : 3
Washroom: 2
Price : $299,900

Condo Apartment
Brimley & Ellesmere
Bedroom : 1 + 2
Washroom: 1
Price : $ 219,900

Gas Station
Building + Business
Downtown port elgin
Price : $875,000

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

RE/MAX Dynasty Realty Inc
A. Anton Jeeva B.Eng
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage can be arranged from 2.4%
[redacted]
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com

ஆடைகளின் அரண்மனை
Anushas Boutique & Tailoring